

KALKI 7-9-1958 30 நயா பைசா

புதுமைப் பொலிவையும் வனப்பையும் உங்களுக்களிப்பது ஹிமாலயா புக்கே





இதமும் தூய்மையும் தரும் இந்த ஸ்நோவைத் தடவிக் கொண்டு, அதன் மணம் கமழும் புதுமை இன்பத்தை அனுபவியுங்கள்!

ஹிமாலயா புக்கே ஸ்நோ

மிருதுவான இந்த வாசனைப் பவுடரைப் பூசிக் கொண்ட பின், பூர்த்தி பெறும் உங்கள் மோஹனைப் பாருங்கள்!

ஹிமாலயா புக்கே டாய்லெட் பவுடர்

கல்கி பொருளடக்கம்

அரசியல்

பொறுத்தது போதும்! பொங்கி...... (தலையங்கம்)	...	...	3
காலம் மாறிப்போச்சு! (கார்ட்டூன்)	விஜி	...	5
காஷ்மீர் பிரச்னை	...	...	6
பாரதி விழா	...	...	6
அதிருப்தி வளர்கிறது!	ரஜனி	...	8


கதைகள்

ராஜுநாயுடு செட்டியார்	ராஜாஜி	...	10
பொங்கிவரும் பெருநிலவு	வி. ராஜேந்திரன்	...	31
நன்றிக்கு உரியவன்?	ரா. கீ.	...	45
மூன்று நண்பர்கள் (பாப்பா மலர்)	வாண்டு மாமா	...	50
பாண்டிமாதேவி	நா. பார்த்தசாரதி	...	59
ஒருவேளைச் சோறு	ருக்மிணி	...	73
மணல் மாளிகை	எஸ். ரங்கநாயகி	...	78
எண்ணம் ஒன்று; உள்ளம் இரண்டு	ஸோமாஸ்	...	90

கட்டுரைகள்

வள்ளுவர் வாசகம்	ராஜாஜி	...	19
செங்கோலும் ஜனநாயகமும்	க. சந்தானம்	...	20
பக்தி வயல்	பௌராணிகர்	...	25
நாட்டு வைத்தியம்	ஸ்ரீஹரி	...	41
சாரங்கதரா	காந்தன்	...	55

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பின்னியின் சூட்டிங் அணிந்து
உன்னதமாகத்
தோற்றம் அளியுங்கள்
எங்களிடமிருந்து வாங்குங்கள்
வெங்கடேஷ்
வஸ்திராலயா
ரீடெய்ல் ஷோரூம்கள்—
ஹைகோர்ட் எதிரில் & 2 தம்புசெட்டித் தெரு, மதராஸ் 1
ஷோ ரூம் நெ. 1
இங்கு நாங்கள் பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்லின் உற்பத்தியான துணிகளை மட்டுமே விற்கிறோம்.
ஷோ ரூம் நெ. 2
இங்கு நாங்கள் பக்கிங்ஹாம் & கர்நாடிக் மில்லின் உற்பத்தியான துணிகளைமட்டுமே விற்கிறோம்.
ஷோ ரூம் நெ. 3
இங்கு நாங்கள் பின்னி மில்லின் உற்பத்தியான துணிகளையும் மற்றும் இதர உயர்ந்த ரக துணிகளையும் விற்கிறோம்.



மலர் 18 | தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற | விளம்பி௵
இதழ் 6 | தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | ஆவணி 22௨

மாற்றும் மருந்து

மாற்றும் மருந்தைப்
பீடைப் பிணியினை மாற்றும் மருந்தைப்
பிறநாட் டினதென யாரே துறப்பர்!
மருந்தாம் மொழிக்கு மலையும் கடலும்
வரம்போ தடையோ திருமால் உலகில் ?
கலைமகள் பெற்ற இளமகள் ஆங்கிலம்
உலகம் பரவிப் புவிமொழி ஆயது
தன்மொழி ஆணவம் பன்மொழிச் சிக்கல்
இரண்டும் சிதைத்துப் பரிவுடன் நாடெலாம்
வாழவோர் மந்திரம் ஆமே—
வாழத் இருவினை மந்திரம் ஆமே!

— ராஜாஜி

பொறுத்தது போதும்! பொங்கி எழுங்கள்!!

ஆட்சிமொழி விஷயம் இப்பொழுது புது உருவம் எடுத்திருக்கிறது. "பொறுத்தது போதும்!" என்று சொல்லும் அளவுக்கு வந்திருக்கிறது. சென்ற வாரம் சென்னை லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் தலைமை வகித்த பேராசிரியர் ரத்னசுவாமி அவர்கள், "பொறுத்தது போதும்! போராடுங்கள்! கிளர்ச்சி செய்யுங்கள்!" என்று சொல்லும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது!

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியை ஆட்சிமொழியாக்கினால் எத்தனைவித விபரீதங்களெல்லாம் நேரும் என்பதைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்பட்டு வந்தது.

இந்தி ஆட்சி மொழியாவதற்கு எதிர்ப்பு தமிழ்நாட்டில் மட்டிலுமில்லை ; வங்கத்திலும் ஆந்திரப் பிரதேசத்திலுமிருக்கிறது. இளைஞர் சமூகம் எதிர்க்கிறது என்பதை மாயவரம் மகாநாடு காட்டியது. அதுமட்டுமல்ல; படித்தவர்கள், அரசாங்க நிர்வாகம் தெரிந்தவர்கள், பல்கலைக் கழகங்களில் கல்வித்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாரும், கல்கத்தாவிலும் ஹைதராபாத்திலும் இந்தி ஆட்சிமொழி யாக்குவதிலுள்ள பேதைமையை வெகு தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார்கள்.

இவ்வளவு இடித்தபோதிலும் இந்திய சர்க்கார், சொன்னாலும் தெரியாது, தனக்காகவும் தெரியாது என்ற முறையில் இடித்த புளியேமாதிரி உட்கார்ந்திருக்கிறார்கள்.

சும்மாவும் உட்கார்ந்துவிடவில்லை. மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களை இந்தி கற்றுக்கொள்ளும்படி பலாத்காரம் செய்து வருகிறார்கள். சர்க்கார் நடத்தும் இந்திப் பரீட்சைகளில் தேறவில்லையென்றால் உத்தியோக உயர்வு கிடையாது என்று தண்டிக்கிறார்கள். உத்தியோகத்திலிருந்து நீக்கப்படுவீர்கள் என்று பயமுறுத்துகிறார்கள். இவை யாவும் சட்ட விரோதச் செய்கைகளாகும். 1965-லிருந்து அரசியல் நிர்ணயச சட்டப்படி இந்தி அரசாங்க மொழியாகும். ஆனால் இப்பொழுது பிடித்தே சர்க்கார் உத்தியோகஸ்தர்களை இந்தி படிக்கும்படி வற்புறுத்துவதும், பய முறுத்துவதும் இவ்விதம்

பலவிதங்களில் கொடுமைப் படுத்துவதும் சட்ட விரோதச் செயல்களாகும். இவைகளெல்லாம் மத்திய சர்க்காரின் பிடிவாத வஞ்சனையாகும்.

இதற்குக் காரணம் நம் நாட்டில் படித்தவர்களின் சோம்பல்தான். அவர்கள் எந்த அக்கிரமத்தையும் பொறுத்துக் கொள்வார்களே தவிர எதிர்க்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில்தான் இந்திய சர்க்கார் இப்பொழுது இப்படி நடந்து கொள்கிறார்கள். ஆனால் நாளடைவில் இது நாட்டில், கசப்பையும் அருவருப்பையும் வெறுப்பையும் வளர்த்து விடும். முடிவில் நாடு சின்னாபின்னப் பட்டுப் போகும். நமது நாட்டின் ஐக்கியம் சிதறிப் போகும்.

ஆகவே, பாரத சர்க்கார் போதிய தீர்க்க திருஷ்டியின்றி நாடு சிதறிப் போக அனுமதித்தாலும், தேசபக்தியுள்ள மக்கள் அவர்களை அப்படிச் செய்யவிடக் கூடாது.


இத்தனை நாட்களும் ராஜாஜி காரண காரியங்கள் கூறியே சர்க்கார் மனத்தை மாற்றலாம் என்று நினைத்தார். வங்கத்தில் மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள், ராஜாஜியிடம், ''இது என்ன! தீர்மானங்கள் நிறைவேற்றிப் பிரசங்கங்கள் செய்வதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? எங்களுக்கு ஒரு சைகை காட்டுங்கள். நாங்கள் புரட்சி செய்வோம். கிளர்ந்தெழுவோம்!'' என்றார்கள். அங்கு அவர்களைப் பொறுமையோடிருக்கச் செய்யும் பாடு பெரும்பாடாக இருந்தது.

அவ்வளவு சிரமப்பட்டு, அவர்களைப் பொறுமையோடு இருக்கச் செய்த ராஜாஜி, இன்று ''பொறுத்தது போதும்'' என்று சொன்னால் நிலைமை எவ்வளவு மோசமாகி விட்டது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

இன்று இந்தி எதிர்ப்பு ஒருசிலருக்குக் காங்கிரஸ் கொள்கைக்கு முரணாக இருப்பது போல் தோன்றலாம். இந்தி விஷயத்தை விட முக்கியமான விஷயம் பாரத நாட்டின் ஐக்கியம். இதுதான் காங்கிரஸின் பெரிய இலட்சியம். இந்த இலட்சியத்துக்கு இடையூறாக இந்தச் சிறு விஷயமான இந்தி வந்தால், அதைப் புறக்கணிப்பதே அறிவுடைமை. அதைப் புறக்கணிப்பதுதான் காங்கிரஸுக்குச் செய்யும் பெருந்தொண்டாகும். தேசத்துக்குச் செய்யும் மகத்தான பணியாகும்!


அரசியல் நிர்ணயச் சட்டத்தில் இருந்து வரும் பதினேழாவது அத்தியாயத்தை, அமுலிலிருந்து விலக்கி நிறுத்தி வைக்கும்படி டில்லி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற வேண்டும். அந்த அத்தியாயத்தை அமுலுக்கு வராமல் நிறுத்தி விடுவதே எல்லாப் பட்சத்தினருக்கும் இந்தச் சிக்கலிலிருந்து கௌரவ

வளர முடியுமா ?



நாளுக்கு நாள் அரபுக் குடியரசின் தலைவர் நாஸரின் செல்வாக்கு வளருவதைக் கண்டு பாகிஸ்தான், தானும் தன் செல்வாக்கை உயர்த்திக் கொள்ளப் பார்க்கிறது!

காலம் மாறிப் போச்சு!



இந்தியாவுக்குப் பிரிட்டன் கடன்பட்டிருந்த போது, இந்திய தலைவர்கள் பெருந்தன்மையுடன் நடந்து கொண்ட நற்பண்பை நினைவுபடுத்தி நன்றியுடன் இந்தியாவுக்கு இப்போது உதவ வேண்டும் என்று பிரிட்டனுக்குக் கூறியிருக்கிறது 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை.

மாக விடுபடுவதற்கு வழியாகும். இதற்காகவே தமிழ் நாட்டில் தீவிர கிளர்ச்சி நடக்கவேண்டும். சென்னை அரசாங்கத்தாரும் இந்தப் பிரச்னையைப் பொறுத்த மட்டில் கட்சி வலையிலிருந்து தங்களை அகற்றிக் கொள்ள வேண்டும். அகற்றிக் கொண்டு மக்களின் கோரிக்கையுடன் தாங்களும் கலந்து கொண்டு ஒருமுகமாக வேலை செய்ய வேண்டும். தங்களுக்குள்ள பலத்தை அவர்கள் அறியவில்லை. மூடு மந்திரத்தை விட்டு விட்டு மக்களுடன் கலந்து போராடினால் இந்தப் பிரச்னையில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்.

புனிதம் என்றால் என்ன?

இந்தியாவில் மக்கள் சபைக்கு மேற்பட்ட ஒரு ஸ்தாபனம் உண்டு என்றால் அதுதான் சுப்ரீம் கோர்ட் எனப்படும் உயர்நீதி மன்றம். அந்த உயர்நீதி மன்றம் சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் நடைபெற்ற மூர்த்தி உடைப்பு விஷயமாகச் சென்னை நீதிமன்றம் வெளியிட்ட அபிப்பிராயத்தை மாற்றித் தீர்ப்பு அளித்துத் தமிழ் நாட்டிலுள்ள பல லட்சக்கணக்கான ஆஸ்திக மக்களின் உள்ளத்துக்கு ஆறுதலை அளித்தது.

பூசிக்கப்பட்டால்தான் ஒரு விக்கிரகம் புனிதப் பொருள் என்று கருதக் கூடாது. விக்கிரகமே சட்டத்தின் கருத்துப்படி புனிதப் பொருள் என்று கூறியது. ஜில்லாக்கோர்ட்டில், விக்கிரகம் பூசிக்கப்பட்டால்தான் புனிதமானது என்று தீர்ப்பளித்தது படமை என்னும் பக்தர்களுடைய மனத்தைத் துன்புறுத்தும் முறையில் எந்த விதத்தில் நடந்துகொண்டாலும் தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும், தானே செய்தோ, விலைக்கு வாங்கியோ மக்களின் பூஜைக்குரிய மூர்த்தியை அவமதித்தாலும் அது குற்றமேயாகும் என்றும் தீர்ப்பளித்திருக்கிறது. ஜில்லாக் கோர்ட்டில் சட்டத்தைத் தவறாகப் பொருள்படுத்திக் குற்றமில்லை என்று சொன்னதை உயர்நீதிமன்றம் கடுமையாகக் கண்டித்திருக்கிறது.

விநாயகர், முருகன், கிருஷ்ணன், ராமன் முதலிய எந்தப் படங்களும் பைபிள், குரான் முதலிய புஸ்தகங்களும் கோவில்களில் வைத்துப் பூசிக்கப்பட்டாலும் படா

விட்டாலும் பக்தர்களுக்கு அவை புனிதப் பொருள்களாகும் என்றும் அவை பக்தர்களின் மனம்நோகும் முறைகளுக்கு உட்படுத்தலாகாது என்பதும் நீதிமன்றத்தின் தீர்ப்பு.

ஆகவே, இனி நாஸ்திகக் கொள்கையைக் கடைப் பிடிக்கிறவர்கள் தங்கள் பேச்சின் மூலமும் எழுத்தின் மூலமும் பகுத்தறிவுப் பிரசாரம் செய்துகொண்டு போகலாமே யொழிய, பக்தர்கள் பூஜிக்கும் தெய்வங்களைத் தாக்காமல் விட்டு விடுவார்கள் என்று நம்புகிறோம். அப்படியும் அவர்கள் உணர்ச்சி தணியவில்லையென்றால், எதையாவது எரிக்க வேண்டுமென்றால் குப்பை கூளங்களைக் கொளுத்தி நகரத்தையும் கிராமத்தையும் சுத்தப்படுத்தினால் மக்களுக்கு நல்ல சேவை செய்தவர்களாவார்கள்.

காஷ்மீர் பிரச்னை

பாகிஸ்தானுக்கும் நமக்கும் எத்தனையோ விஷயங்களில் சில்லறைச் சச்சரவுகள். அவற்றில் எல்லாம் முக்கியமானது காஷ்மீர் பிரச்னை. இந்த ஒரு விஷயம் காரணமாக இரு தேசங்களின் செல்வ நிலையும், வருமான செலவுத் திட்டமும், சீர்குலைவு அடைந்து வருவது சொல்லி முடியாத நிலையிலிருக்கிறது. இந்தச் சமயத்தில் பாரதப் பிரதமர் நேருவும் பாகிஸ்தான் பிரதமர் பெரோஸ்கான் நூனும் டில்லியில் சந்திக்கப் போகிறார்கள் என்ற செய்தி பாரத மக்களுக்குப் புது நம்பிக்கையை உண்டாக்கியிருக்கிறது. கால்வாய் பாசனத் தகராறு, எல்லைச் சண்டைத் தகராறு முதலிய பல விஷயங்களைப் பேசி சுமுகமான முடிவு காண்பார்கள் என்ற நம்பிக்கையை யுண்டாக்கியிருக்கிறது. ஆனால் இது போதாது. வேறு விஷயங்கள் எப்படியானாலும் காஷ்மீர் பிரச்னையை பேசிப் பின்கண்ட முறையில் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறோம்.

"இனி, காஷ்மீர் சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்னைகளும் சமாதான முறையில் பேச்சுகள் மூலமாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும்." இரு பாலாரும் பரஸ்பர நம்பிக்கையுடன் இப்படியொரு உறுதியான முடிவுக்கு வந்தால் அதையொட்டிப் பல நன்மைகள் விளையும். காஷ்மீர் பிரச்னையை யொட்டி ராணுவப் போட்டியிருக்காது. தற்காப்புக்குத் தவிர, வேறு எதற்கும் இரண்டு நாடுகளுக்கும் ராணுவம் தேவைப்படாத நிலை ஏற்படும். அதன் விளைவாக இரு நாடுகளின் ராணுவச் செலவு கணிசமான அளவுக்குக் குறைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

ராணுவச் செலவு குறைந்தால் அதனால் மிச்சப்படும் தொகையை மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உகந்த தொழில்களில் ஈடுபடுத்தலாம். வெளிநாடுகளுக்குக் காவடி யெடுத்துக் கொண்டு போக வேண்டிய நிலை ஏற்படாது.

இப்படிக் காஷ்மீர் விஷயத்தை முதலில் பேசித் தீர்த்துக்கொண்டால், இரு நாடுகளும் பொருளாதாரத் துறையில் முன்னேறக் கூடிய வழி இரு பிரதமர்களின் சந்திப்பினால் ஏற்பட்டதாகும்.

பாரதி விழா

"**பா**ட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்று பாடினார் பாரதியார். அவர் வாக்கு உண்மை வாக்காகி விட்டது! அவர் பாடல்கள் நாற்பது வருஷங்களாகப் பாலித்து வருகின்றன. தமிழர்கள் எங்கெங்கு வசிக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உயிரும் உணர்வும் ஊட்டிப் போஷித்து வருகின்றன.

இப்படி யெல்லாம் நம்மைப் பாலித்து வரும் அமரகவி பாரதிக்கு நன்றி செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் செப்டம்பர் 11,12 தேதிகளில் தமிழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ, அங்கெல்லாம் பாரதி பாடல் போட்டிகள் நடத்தியும், கூட்டங்கள் நடத்தியும் விழாக் கொண்டாடி வருகிறார்கள்.

பாரதி விழாக்களில் மிக முக்கியம் வாய்ந்தவை, பாரதி பிறந்த எட்டயபுரத்தில் நடக்கும் விழாவும், பாரதி சங்கத்தார் சென்னையில் நடத்தும் திருவிழாவுமாகும். பாரதி சங்கத்தின் காரியதரிசி ஆக்கூர் அனந்தாச்சாரியார் அவர்கள் செப்டம்பர் 11, 12 தேதிகளில் பாரதி விழாவைச் சென்னையில் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்து வருகிறார். தமிழ் மக்கள் வழக்கம் போல் இந்த விழாக்களில் ஊக்கத்தோடு கலந்து கொண்டு புது உணர்ச்சிப் பெறுவார்கள் என்று நம்புகிறோம்.

கண்ணன் பிறந்தான்!

இவ்விதழ் வெளியாகும்போது பாரத நாட்டில் மக்கள் கண்ணன் பிறந்த தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் கண்ணன் பிறந்ததாகப் பாவித்துக் கொண்டாடி மகிழ்வார்கள். ஆனால் கல்கி வாசகர்களின் மகிழ்ச்சி இரட்டிப்பாக இருக்கும். ஏனெனில் அவர்கள் வீட்டில் எல்லாம் கண்ணன் இரண்டு முறை அவதரிக்கிறான்!

கண்ணன் பிறந்த கதையைக் கூறும் பாகவதம், 'பக்தி வயல்' என்னும் பெயரில் ராஜாஜியின் வாழ்த்துரையுடன் இதே இதழில் 25-ம் பக்கத்தில் ஆரம்பமாகிறது. இதை விடக் கல்கி வாசகர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்?

இந்த வாரத்து அட்டையில் திருமால் ஜகஜ்ஜோதியாகக் காட்சி தருகிறார். அவர் திரு அவதாரம் செய்த கதையைப் பாடும்படி நாரத முனிவர், வியாச பகவானுக்குக் கூறும் அற்புதக் காட்சியை வண்ண ஓவியமாக வழங்கியிருக்கிறார் ஓவியர் மணியம்.

அருள் வாக்கு

ஜன்மம் எடுத்தது ஜன்மத்தைப் போக்கிக் கொள்ளத்தான். இப்படித் தான் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

மானவ, ஜந்மத: கிம் பலம்? நாம் ஜன்மம் எடுத்தது எதற்காக? சம்பாதிக்க வேண்டியது, சாப்பிட வேண்டியது, ஒவ்வொரு நாளும் ஒரு துக்கத்தை அனுபவித்து விட்டுக் கடைசியில் சாகவேண்டியதுதானா? அப்படியென்றால் இப்போதே செத்துப் போகலாமே! ஜன்மத்தைப் போக்கிக் கொள்ளவே ஜன்மம் பயன்பட வேண்டும்.

மனிதனைத் தவிர மிருகங்களெல்லாம் குறுக்கே வளர்ந்திருக்கின்றன. மனிதன் ஒருவன்தான் நெடுக வளர்ந்திருக்கிறான். குறுக்கே வளருவதை விட்டு மேலே பார்க்க வேண்டும் என்று ஸ்வாமி மனிதனை வைத்திருக்கிறார்.

உயர்ந்து மேல்நோக்கி வளர்கிற மனிதன் மற்றப் பிராணிகளைக் காட்டிலும் அதிகமான சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால் துக்கத்தைத்தான் நாம் அதிகம் அனுபவிக்கிறோம். மிருகங்களுக்கு நம்மைப் போல இத்தனை காமம், இத்தனை கவலை, இத்தனை துக்கம், இத்தனை அவமானம் இல்லை. பாவங்களைச் செய்து துக்கங்களைத்தான் நாம் அனுபவிக்கிறோம்.

மிருகங்களைக் காட்டிலும் மனிதனுக்குத்தான் ஸ்வாமி புத்தியை அதிகமாக வைத்திருக்கிறார். இந்த உயர்ந்த புத்தியை வைத்துக்கொண்டு மனிதன் கஷ்டப் படுகிறான். துக்கப்படுகிறான். பிறந்து விட்டதனால் இவ்வளவு கஷ்டம். பிறவாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

பிறப்புக்குக் காரணம் என்ன? நாம் ஏதோ தப்புப் பண்ணியிருக்கிறோம். அதற்குத் தண்டனை இத்தனை கசை அடி அடிக்க வேண்டும் என்று விதித்திருந்தால் இந்த உடம்பை எடுத்து அவற்றைப் பெற்றுக் கொள்கிறோம். பத்து அடி ஆனபிறகு இந்த உடம்பு போய் விட்டால் இன்னொரு உடம்பு வருகிறது. பாக்கியை அந்த உடம்பு வாங்குகிறது. காமத்தினாலே, பாவத்தைச் செய்ததனாலே ஜனனம் வந்தது. காரியம் எதுவுமே பண்ணாமலிருந்து விட்டால் ஜனனம் இல்லை.

கர்மண: கிம் பலம்? கர்மாக்களைச் செய்வதற்குக் காரணம் என்ன? ''ராக''த்தினால் செய்கிறோம்; கோபத்தினாலே பல பாவங்களைச் செய்கிறோம். கோபத்துக்குக் காரணம் ஆசை, காமம். காரியத்தை ஒழிக்க வேண்டுமானால் முதலில் காமத்தை, ஆசையை ஒழிக்க வேண்டும். பற்றுதலை நிறைய வளர்த்துக்கொண்டு காரியம் செய்யாமல் இருப்பது என்றால் முடியாது. பற்றை ஒழித்து விட்டால் பாவம் செய்யாமல் இருக்கலாம்.

ஆசைக்குக் காரணம் என்ன? நம்மைத் தவிர இன்னொன்று இருப்பதனாலே ஆசை வருகிறது. நம்மிடம் நமக்கு ஆசை வராது. இரண்டாவது ஒன்று இருப்பதாக நினைக்கும்போதுதான் ஆசை வருகிறது. இரண்டு இருக்கிறது என்ற புத்தி இருப்பதற்குக் காரணம் மித்யா ஞானம். மித்யா ஞானம் என்பது பொய்யான அறிவு. இந்தப் புத்தி போய் விட்டால் எல்லாம் ஒன்று என்ற தத்துவம் புரியும். ஒன்றுதான் என்ற உண்மை ஞானம்தான் வந்தாக வேண்டும்.

வேதம் என்ன சொல்கிறது? சாந்தமாகிய சிவமே இரண்டற்ற வஸ்துவாக எல்லாமாக இருக்கிறது. சிவஸ்வரூபந்தான் பரப்ரும்மம். இது மாண்டூக்ய உபநிஷத் வாசகம். எல்லாமாய் அல்லதுமாய் எங்கும் நிறைந்திருக்கிற பொருள் ஒன்று. அதுவே பரமாத்ம ஸ்வரூபம் என்று அத்வைதிகள் கண்டார்கள்.

''நீயாகவே நான் ஆகி விடுகிறேன். நான், என்னுடையது என்பதையெல்லாம் உன்னிடத்தில் கரைத்து விடுகிறேன். நான் என்ற உணர்ச்சி போய், எனது என்ற உணர்ச்சி போய் உன்னிடத்தில் கலந்து விடுகிறபோது ஒரே பொருள்தான் இருக்கிறது. அது நீயே.'' இவ்வாறு ஆதிசங்கரர் தேவியைப் பார்த்து ஸ்தோத்திரம் செய்கிறார். இம்மாதிரி இரண்டாவது பொருள் இல்லாமல் எல்லாம் பரமாத்ம ஸ்வரூபத்துடன் ஒன்றுபட்டால் அங்கே ராகம் இல்லை, கர்மம் இல்லை. ஜன்மம் போய் விடுகிறது. அப்படிப்பட்டவர்களுக்குச் சமதிருஷ்டி தானாகவே வந்து விடுகிறது. அதுதான் ஜன்மாவின் பலன்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் • காஞ்சி காமகோடி பீடம்

அதிருப்தி வளர்கிறது!

—கொழும்பு, ஆகஸ்டு 31உ.

இலங்கை அரசாங்கம் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்திருப்பதாக இவ் வாரம் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அவசரகாலச் சட்டத்தை ரத்து செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை சீர் அடையவில்லையென்பதிலோ அல்லது அவசர காலச் சட்டம் நீக்கப்படின் மீண்டும் வகுப்புக் கலகங்கள் எந்த நிமிடமும் ஏற்படலாமென்ற பீதி மக்கள் மனத்தில் இருக்கிறதென்பதிலோ அனேகமாக அபிப்பிராய வேற்றுமையில்லை. அதேசமயம் அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும்போது சாதாரணமாக அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்று பொதுவாக ஜனங்கள் எதிர்பார்க்கிறார்களோ அதைச் செய்யாமல் எப்போதுமே அவசரகாலச் சட்டத்தின் போர்வையில் ஆட்சி நடத்தப் போவதைப் போல அரசாங்கம் நடந்து வருவதுதான் வியப்பை விளைவித்து வருகிறது.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் போதே வகுப்புச் சமரசத்தை உண்டுபண்ணவும் பிணக்குகளைப் போக்கவும் தீவிரமான நடவடிக்கை யெடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவசரச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி மக்களின் சாதாரண ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கு நியாயமிருக்கும். ஆவேசப் பேச்சுகளுக்கும் பிரசாரங்களுக்கும் தடை விதித்திருக்கும் சமயத்தில் சகல கட்சித் தலைவர்களுமடங்கிய ஒரு வட்டமேஜை மகாநாட்டைக் கூட்டிக் கொந்தளிப்பை விளைவிக்கக் கூடிய பிரச்னைகளான மொழிப்பிரச்னை, இந்தியரின் பிரஜாவுரிமைப் பிரச்னை முதலியவற்றுக்கு ஒரு சுமுகமான முடிவு செய்ய முயல வேண்டும். அப்படிக்கின்றி எவ்வித உருவான நடவடிக்கையும் எடுக்காமல் அவசரகாலச் சட்டத்தைக் காலவரையின்றி நீடிப்பதாயின் மக்களின் ஜனநாய உரிமைகளைக் கட்டுப்படுத்தி வைப்பதற்கு அரசாங்கம் எவ்வித நியாயமும் கற்பிக்க முடியாது. துரதிர்ஷ்டவசமாக இந்தத் தோரணையில் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அவசர காலச் சட்டத்தை நீடித்துக் கொண்டு போவதும் தமிழ்த் தலைவர்களைக் காலவரையின்றி வீட்டுக் காவலில் வைத்திருப்பதும் மிகுந்த அதிருப்தியை விளைவித்து வருகின்றன.

மொழிப் பிரச்னையைத் தீர்த்து விட்டதாயும் இவ் வருட முடிவுக்குள் எல்லாம் சரியாகி விடுமென்றும் பிரதம மந்திரி கூட்டத்துக்குக் கூட்டம் சொல்லிக் கொண்டு வருகிறார். அவசர காலச் சட்டத்தை அடுத்தடுத்து நீடிப்பதே பிரச்னை தீரவில்லை யென்பதை எடுத்துக் காட்டப் போதுமான ஆதாரமென்றும், பிரச்னை தீர்த்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுவதாகத்தான் இருக்குமென்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

—ரஜனி

ராஜுலு செட்டியார்

ராஜாஜி

"கோவிந்தா!" என்று சொல்லி எழுந்தார் ராஜுலு செட்டியார். அவர் பகவான் கோவிந்தனை நினைக்கவில்லை. அவருக்கு முழங்காலில் வாயு. வெகு நேரம் சப்பணங் கால் போட்டு உட்கார்ந்து நோட்டுகளை எண்ணிக் கட்டுக் கட்டாகக் கட்டி இரும்புப் பெட்டியில் அடுக்கி வைத்தார். வைத்து விட்டுப் பெட்டியைப் பூட்டியபோது முழங்கால் பிடித்துக் கொண்டது. கஷ்டப்பட்டு எழுந்தார். அப்போது பகவானை நினைக்காமலே பகவான் பெயர் வாயிலிருந்து வெளியாயிற்று.

* *

அன்று ஜன்மாஷ்டமி, கோபாலனுக்குச் செட்டியார் கூறியது கேட்டது. உடனே வந்து ராஜுலு செட்டியார் முன் நின்றான்.

* * *

இரவு. ஒரு சிறிய குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அது இரும்புப் பெட்டியண்டை இருந்தது. மற்றப்படி அறையில் அதிக வெளிச்சமில்லை. கதவும் உள் தாழ்ப்பாள் போட்டிருந்தார். அது பணத்தை எண்ணும் போதெல்லாம் அவர் வழக்கம்.

திடீர் என்று கார்வண்ணன் வந்து நிற்க, செட்டியார் பார்த்துப் பயந்து போனார். இரண்டு கைகளோடுதான் கண்ணன் நின்றான். கையில் சங்கு சக்கரம் ஏதுமில்லை. சும்மா சிரித்துக் கொண்டு நின்றான். ஆயினும் செட்டியார் கரிய உருவத்தைப் பார்த்துப் பயந்து போனார். யாரோ திருடன் நுழைந்து விட்டான், என்ன வாகுமோ என்று பயந்து, 'ஹா!' என்று கதறினார்.

"பயப்படாதே, ராஜுலு, நீ கூப்பிட்டாய், வந்தேன்" என்றான் கோபாலன்.

செட்டியாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. தான் 'கோவிந்தா' என்று சொன்னது அவருக்கு நினைவு இல்லை. ஏதோ சும்மா முழங்கால் வலிக்காக அந்தப் பெயரைச் சொன்னார். ஆனபடியால் அது அவர் நினைவுக்கு வரவில்லை. இது யாரோ கறுப்பு ஆள், திருடன், கொன்றுவிடப் போகிறான். கொன்று விட்டுப் பணத்தைத் தூக்கிக் கொண்டு போகப்போகிறான், அதற்குள் பரிகாசம் செய்கிறான் என்று தீர்மானித்தார்.

நடுநடுங்கி சனகவரத்தில் "யாரடா நீ?" என்று கேட்டு அப்படியே மூர்ச்சித்துத் தரையில் விழுந்து விட்டார்.

* * *

பிறகு கொஞ்ச நேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து கண்ணைத் திறந்தார். இப்போது கோவிந்தன் சங்கு சக்கரம் ஏந்தி நான்கு புஜங்களுடன் நன்றாகத் தரிசனம் காட்டினான்.

செட்டியாருக்கு இப்போது வீட்டில் மாட்டியிருந்த படம் ஞாபகம் வந்தது. 'ஓகோ இவர் மகா விஷ்ணுவே' என்று கண்டு கொண்டார். கண்டு கொண்டு எழுந்து, விழுந்து விழுந்து நமஸ்கரித்தார்.

"உனக்கு என்ன வேண்டும், அப்பா! கேள், தருகிறேன். உனக்குப் பணத்தாசை அதிகம், அதை விட்டு விடு" என்றான் கோபாலன்.

"பணத்தை என்ன பண்ணச் சொல்லுகிறாய்?" என்றார் செட்டியார்.

கண்ணன் பதில் சொல்லுவதற்கு முன் மனைவியும் மகள் வீட்டுப் பேரனும் (இவனுக்குப் பத்து வயது. செட்டியாருக்கு ஆண் பிள்ளை பிறக்கவில்லை.) ஓடி வந்து கதவைத் தட்டினார்கள். வெகு நேரமாகியும் வெளியே வரவில்லை. ஏதோ கிழவருக்கு விபத்து நடந்து விட்டது என்று எண்ணிப் பயந்து அவர்கள், "தாத்தா! தாத்தா!" என்று கதவைப் பலமாகத் தட்டிக் கூச்சலிட்டார்கள்.

இந்த ரகளையில் கண்ணன் மறைந்து போனான். செட்டியார் கதவைத் திறந்து வெளியே வந்தார்.

மனைவியும் பேரனும் வீட்டில் வேலைக்காரர்களும் "என்ன? என்ன?" என்று செட்டியாரைச் சுற்றிக் கொண்டு விசாரித்தார்கள்.





"ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" என்று செட்டியார் எல்லாரையும் சமாதானம் பண்ணினார்.

* * *

சாப்பாடு முடிந்ததும் அன்று அந்தத் தெருக் கோயிலில் பாகவதர் கதை சொல்லிக் கொண்டிருந்தார். செட்டியாரும் சென்று உட்கார்ந்தார்.

"கண்ணன் ஒரு திருடன்! அவன் எங்கேயும் நுழைவான். கதவு தாழ்ப்பாள் போட்டிருந்தாலும் அவனுக்கு அது தடையில்லை. 'கோவிந்தா!' என்று யாரேனும் அழைத்தால் போதும், அங்கே, போய் என்னவென்று விசாரிப்பான். ஆபத்பாந்தவன். சகல ஜீவன்களுக்கும் அன்பன்" என்றெல்லாம் பாகவதர் சொல்லிக் கொண்டு போனார்.

செட்டியாருக்கு விஷயம் பளிச்சென்று விளங்கிற்று. மற்றவர்கள் 'ஆகா ஆகா' என்று தலை யசைத்தார்களே தவிர விஷயத்தை உண்மையில் நம்பவில்லை.

"சாமி!" என்றார் செட்டியார் எழுந்து நின்று கை கூப்பிக் கொண்டு.

பாகவதர் திடுக்கிட்டார். கதையை நிறுத்தி, "என்ன?" என்று கேட்டார்.

"நான் கண்ணனைப் பார்த்திருக்கிறேன்" என்றார்.

எல்லாரும் இந்தப் பண ஆசைச் செட்டியார் பரிகாசம் பேசுகிறார் என்று எண்ணினார்கள். சிலர் "கொல்!" என்று சிரித்து, செட்டியாரைப் பற்றி ஹாஸ்யம் செய்து பேசினார்கள். கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டது.

பாகவதர் வெகு சிரமப் பட்டு மறுபடியும் அமைதி ஏற்படுத்திக் கதை சொல்லிக்





கொண்டு போனார். செட்டியார் எழுந்து வீட்டுக்குப் போய்விட்டார்.

* * *

அடுத்த நாள் தம் வக்கீலைக் கூப்பிட்டு ஒரு தான பத்திரம் எழுதி வைத்தார்.

கண்ணிழந்தவர்கள், காலிழந்தவர்கள் இன்னும் பலவகை ஏழை அநாதைகளுக்கு ஒரு அன்னசத்திரம் ஏற்படுத்தி அதற்கு இருபதினாயிரம் ரூபாய் ஒதுக்கி வைத்தார்.

ஏழைகளுக்குப் பிரசவமருத்துவ விடுதி ஒன்று அமைக்க அதற்கொரு ஐம்பதினாயிரம் ரூபாய் ஒதுக்கி வைத்துப் பத்திரம் எழுதி முடித்தார்.

பத்திரங்களில் மாப்பிள்ளை சாட்சி கையெழுத்திட முதலில் கொஞ்சம் ஆட்சேபித்தார். பிறகு ஒப்புக் கொண்டார். பத்திரம் ரிஜிஸ்டர் ஆகி ஊருக்கெல்லாம் தெரிந்தது.

'இதுவென்ன திடீர் என்று செட்டியார் இவ்வளவு நல்லவராகி விட்டாரே' என்று ஊரெல்லாம் வியந்து போயிற்று.

பாகவதர் "என்னுடைய கதையின் வேகம் பார்த்தீர்களா?" என்று சீடர்களிடம் மெதுவாகச் சொல்லிப் பெருமைப்பட்டார்.

அவர்களும், "அன்று கிருஷ்ணஜயந்தி இரவில் தாங்கள் செய்த பாகவத பிரவசனம் எந்தக் கல்நெஞ்சக்காரனையும் மாற்றி விடும்" என்று தம்முடைய குருவைப் பாராட்டினார்கள்.

இது கண்ணனே செய்த மாயை என்பது யாருக்கும் தெரியாது. செட்டியார் யாரிடமும் சொல்லவில்லை. சொன்னாலும் யார் நம்புவார்கள்?

மாணவர்களிடையே ராஜாஜி !



ஆகஸ்டு பதினைந்தாந்தேதி சுதந்திர தினத்தன்று திருவல்லிக்கேணி விக்டோரியா ஹாஸ்டல் மாணவர்கள் யூனியனை ராஜாஜி அவர்கள் துவக்கிவைத்தார். ஹாஸ்டல் வார்டன் திரு ஜே. ராமச்சந்திரன் ராஜாஜி அவர்களை வரவேற்றார். "மாணவர்கள் கல்லூரியிலும், பள்ளிகளிலும் இருக்கும்பொழுது நன்றாக நடந்து கொள்ளும் வழக்கத்தை வளர்க்க வேண்டும். ஆண்கள், பெண்கள் இருவரும் சேர்ந்து படிக்கும் பள்ளிகளில் மாணவர்கள் தங்கள் சகோதரிகளிடம் தங்களுக்குள்ள பொறுப்புக்களை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குரிய மரியாதையை அளிக்க வேண்டும்" என்று ராஜாஜி அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார். விக்டோரியா மாணவர்கள் ஹாஸ்டல் யூனியன் தலைவர் திரு பி. என். கைலாசம் இவ்விழாவுக்குத் தலைமை தாங்கினார். பொதுக் காரியதரிசி திரு காதர் இப்ராஹிம் நன்றி கூறினார்.

அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா
சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத்திஞல் மிகவும் சிறிய அளவில் ஆனுல் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

O★O

14 மாத்திரைகள்
ஒரு புட்டியில் இருக்கின்றன
(7 முழு அளவுகள்)

O★O

பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

ஆர். எல். கௌடர் & கம்பெனி
69, பந்தர் தெரு :: சென்னை-1

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

சத்ய நாராயணு பார்மஸி
குமரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்

தீய ஆஸ்த்மா
பிராங்கைட்டிஸ் சளி

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத் திணறல், இருமல், தும்மல், மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான, அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றிச் சுகமாகச் சுவாசித்துக் குழந்தை போல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம் வாபஸ்.

சிரங்கு கிருமிகள்
7 நிமிஷத்தில் கொல்லப்படுகின்றன

உங்கள் சருமத்தில் ஏறக்குறைய 50 லட்சம் சிறு துவாரங்களும் மடிப்புகளும் உள்ளன. கிருமிகள் அவைகளில் ஒளிந்திருந்து தாங்க முடியாத அரிப்பு, எரிச்சல், படை, முகப்பருக்கள் காலில் சிரங்கு முதலிய இதர கோளாறுகளை உண்டு பண்ணுகின்றன. சாதாரண சிகிச்சைகள் தற்காலிகமான குணத்தையே அளிக்க வல்லது -ஏனெனில் இவை கிருமிகளுக்கான காரணத்தைக் கொல்வதில்லை. இந்தப் புதிய சிகிச்சை முறையான நிக்ஸோடெர்ம் (Nixoderm) இந்தக் கிருமிகளை 7 நிமிஷத்தில் கொன்று விடுகிறது. தவிரவும் இது உங்களுக்கு மிருதுவான மாசற்ற வசீகரமான, வழவழப்பான சருமத்தை ஒரே வாரத்தில் அளிக்க உத்தரவாதம். அன்றேல் வெற்றுப் பெட்டியை அனுப்பினுல் பணம் வாபஸ். இன்றே உங்கள் கெமிஸ்டிடமிருந்து உத்தரவாதம் பெற்ற நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்கி உங்கள் சரும உபாதைகளின் உண்மைக் காரணத்தை அகற்றுங்கள்.

Nixoderm
நிக்ஸோடர்ம்
சரும உபாதைகளுக்கு

[ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைப் பற்றிக் கல்வி நேயர்களிடமிருந்து வந்துள்ள கடிதங்களிலிருந்து மேலும் சில கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. —ஆர்.]

அந்நியக் கடன்களும் அவற்றின் விளைவும்

அன்புள்ள சதாசிவம்,

நாட்டில் தலைசிறந்த அறிஞர்களைக் கொண்டு தற்போதையப் பொருளாதார நிலைமையை விளக்கி வைக்க நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் மூலம் நீங்கள் செய்துள்ள சேவை குறிப்பிடத் தக்கது.

நமது பொருளாதார விஷயங்களை நிர்வகிக்கும் அனைவருக்கும் இவையனைத்தும் மிகவும் பயனளிக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

புது டில்லி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்
17—8—58 இந்தியாவின் உதவி ஜனாதிபதி.

★

கல்வி பத்திரிகையில் வெளி வந்த ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளை ஆங்கிலப் படுத்திப் படித்து மகிழ்ந்தேன். ஜனநாயகம் திறம்பட நடைபெறுவதற்கு நாட்டின் பிரச்னைகளைப் பிரஜைகள் அறிந்துகொள்ளவேண்டுவது அவசியம். நுட்பமான பொருளாதாரப் பிரச்னைகளை உங்கள் வாசகர்களுக்கு விளக்கி வைத்தது ஒரு பொதுஜன சேவையே ஆகும். அது ஒரு புறமிருக்கட்டும். தமிழ்மொழியையே நீங்கள் வளப்படுத்திப் பொருளாதார நுட்பங்களை விவாதிப்பதற்கு ஏற்ற பாஷையாக அதைச் செய்திருக்கிறீர்கள்.

இம்மாதிரி ஒரு முயற்சியை எனக்குத் தெரிந்தமட்டில் வங்காள மொழிக்கு டாக்டர் பினோய் சர்க்கார் செய்தார். ஆனால் நீடித்துப் பலன் காணவில்லை. மராத்தியில் பொருளாதாரத்தில் சில புத்தகங்கள் இருப்பதாகக் கேள்வி. ஹிந்தியில் இம்மாதிரி குறிப்பிட்ட பிரச்னைகளைத் தொடர்ந்து விவாதிக்கும் பத்திரிகை இருப்பதாக நான் கேட்ட வரையில் இல்லை. இந்திய மொழிப் பத்திரிகை உலகத்தில் நீங்கள் ஒரு புதிய பாதையை உருவாக்கியிருக்கிறீர்கள். இதை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

கல்விக்கும், தங்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

புது டில்லி நித்தியானந்த கானுங்கோ
21—8—58 மத்திய சர்க்கார் தொழில் மந்திரி

★

இதர நாடுகள், குறிப்பாக, சீனாவும் ஜப்பானும் எவ்விதம் முன்னேறியுள்ளன என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். அந்த நாடுகளின் நிலைமையும் முறைகளும் வேறானவை. நாமும் அவர்களுடன் சமமாக முன்னேற முயன்று வருகிறோம். நாம் அவசரப்படுவது உண்மையாக இருக்கலாம். ஆனால் ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் அப்படிப்பட்ட பரபரப்புள்ளவர்கள் தான் தேவை.

அதிகார வர்க்கத்தினருக்கு நாட்டின் நிலைமைக் கண்ணாடியில் காட்டுவதுபோல் நீங்கள் காட்டியிருக்கிறீர்கள் அதுதான் உங்கள் நோக்கம் என்று நினைக்கிறேன். இம்மாதிரி நற்பணியைக் கல்வி தொடர்ந்து செய்யட்டும்;

புது டில்லி வி ஆர். பட்டாபிராமன்
18—8—58 லோக் சபை அங்கத்தினர்.

★

கல்வி ஆராய்ச்சி அரங்கத்தில் வெளியான ஒவ்வொரு கட்டுரையும் விடாமல் படித்து மிகவும் ரசித்தேன். நமது பிரச்னைகள் எல்லாவற்றையும் விட முக்கியமான இந்த விஷயத்தைப் பற்றிப் பல அறிஞர்களின் கருத்துக்களைத் தமிழ் மக்களுக்கு விளங்கவைத்துக் 'கல்வி' மகத்தான சேவை புரிந்திருக்கிறது.

நமது உணவு இறக்குமதி தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது வருந்தத் தக்கதே. கனரகத் தொழில்கள் அவசியமாகவே இருக்கின்றன: அவற்றுக்காகும் அன்னியச் செலாவணி அவசியமாகவே கருத வேண்டும். ஆரம்பித்த பிறகு இவற்றைக் கைவிட முடியுமா? நம்முடைய கஷ்டங்கள் பலவாறாக இருப்பினும், இவற்றைச் சமாளித்துவிட முடியுமென்றே நினைக்கிறேன். நாட்டின் கௌரவத்தை எப்படியும் நிலைநிறுத்தியே ஆக வேண்டும். கடன் தவணைகளைக் குறித்த காலத்தில் கொடுக்க அரசாங்கம் வகை செய்யும் என்றே எதிர்பார்க்கலாம்.

30, அவுரங்கசீப் ரோட், புதுடில்லி டாக்டர் பி. சுப்பராயன்

★

இரண்டாவது திட்டத்தின் மீதி ஆண்டுகளுக்கும் மூன்றாவது திட்டத்துக்கும் பாரதத்தின் பொருளாதார முயற்சிகள் குறைவுறாது தொடர்ந்து நடைபெறுவதற்கு எந்தெந்தத் திசைகளில் நோக்கம் இருக்க வேண்டுமென்பதைக் கல்வியின் ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் நிதர்சனமாகக் காட்டியிருக்கின்றன. இந்தப் பிரச்னையின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பல உண்மைகளை வெளியிட்டிருக்கிறீர்கள். இம்மாதிரி இதர விஷயங்களிலும் மேலும் ஆராய்ச்சி அரங்குகள் நடத்துவீர்களானால், நலமாக இருக்கும்.

புது டில்லி கே பி லால், ஐ. ஸி. எஸ்.
18—8—58 இந்தியாவின் அயல் வர்த்தக நிர்வாகஸ்தர்.

கல்கிப் பத்திரிகை இந்த ஆராய்ச்சி அரங்கத்தின் மூலம் தேசத்துக்கு மிகவும் உன்னதமான சேவை செய்திருக்கிறது என்பதை நான் கூறுவது மிகையாகும். ஆராய்ச்சி அரங்குக்கு நீங்கள் தேர்ந்தெடுத்த விஷயமே அதற்குச் சான்று. எனது பாராட்டுகள்.

பம்பாய் - 1

நவல். எச். டாடா

[ஸ்ரீ நவல் எச். டாடா பிரபல டாடா குடும்பத்தைச் சேர்ந்தவர். டாடா ஸன்ஸ் கம்பெனியின் கீழ் செழித்து வளர்ந்துள்ள பல்வேறு தொழில்சாலை நிர்வாகத்தில் பங்குள்ளவர். தொழிலதிபர் வரிசையில் முதலில் நிற்பவர். — ஆசிரியர்]

★

ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் அனைத்தையும் படித்தேன். உங்கள் பத்திரிகை வாசகர்களுக்குச் செய்துள்ள சேவை குறிப்பிடத்தக்கது. இதர பிரச்னைகளைப் பற்றியும் இம்மாதிரி ஆராய்ச்சி அரங்கம் நடத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

கல்கிக்கு எனது பாராட்டுக்கள்.

சென்னை -1
16—8—58

வி. ஆர். லக்ஷ்மிரதன்

★

எடுத்த எடுப்பிலேயே ஆராய்ச்சி அரங்கத்துக்காக உங்களைப் பாராட்டுகிறேன். கட்டுரை எழுதியவர்கள் எல்லோரும் தலைசிறந்தவர்கள். இந்தப் பிரச்னையை நன்றாக விளக்கிக் குற்றங்குறைகளை எடுத்துக் காட்டியிருக்கின்றனர். சர்க்காரையும் மக்களையும் விழிப்படையச் செய்து கொள்கைகளையும் லட்சியங்களையும் நமது சக்திக்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ள இக் கட்டுரைகள் உதவும் என்றே நான் நம்புகிறேன்.

ஒவ்வொருவரும் விஷயத்தை ஒவ்வொரு விதமாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாமே எடுத்துக் கொள்ளவேண்டியதுதான். புதிதாக நாம் உற்பத்தி செய்யும் ஆலைப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் என்று தோன்றவில்லை. நம்முடைய உற்பத்தி விலைகளைக் குறைக்க வேண்டியது அவசியம். தங்களுக்கு எது நன்மை என்பதைத் தாங்களே உணராது அரசியல் கட்சித் தலைவர்களுடைய தூண்டுதல்படி நடக்கும் தொழிலாளிகளின் மனப்பான்மைதான் கவலையளிக்கிறது. தொழிலாளர்களுக் குள்ளேயே தலைவர்கள் தோன்றினால் நிலைமை அபிவிருத்தி அடையும்.

சிங்காநல்லூர், கோவை
21—8—58

ஜி. ஆர். கோவிந்தராஜுலு

★

இதுவரையில் பாரதத்தின் அன்னியச் செலாவணி, கடன் முதலிய விஷயங்கள் பற்றி அறிஞர்கள் மட்டும்தான், அதிலும் உயர்ந்த நிலையிலுள்ளவர் மட்டுமே பேசி வந்தார்கள். இந்த விஷயங்களைப் பொது மக்களுக்கு விளக்கி வைத்த பெருமை கல்கிப் பத்திரிகையைச் சாரும்.

சர்க்கார் நமது திட்டத்தை நன்றாக நிறைவேற்ற வேண்டுமானால் பொது மக்களுக்கு உணர்ச்சியூட்டி, இப்போது கஷ்டப்பட்டாலும் வருங்காலச் சந்ததிகளின் நலனுக்காக இதைப்பாராட்டக்கூடாது என்று ஊக்குவிக்க வேண்டும். அம்மாதிரி இதுவரையில் அரசாங்கமோ, மற்றவர்களோ செய்ததாகக் காணோம். கல்கிப் பத்திரிகைதான் இதை முதலில் செய்திருக்கிறது.

முடங்கிக் கிடக்கும் தங்கத்தை வெளிக்கொணர, 'தங்கப் பத்திரங்கள் வெளியிட வேண்டும்' என்று பேசிக் கொள்கிறார்கள். இதற்கும் பொதுமக்களின் ஆதரவு வேண்டுமே? இங்கேதான் கல்கியின் முயற்சி வெற்றியடைந்துள்ளது. இம்மாதிரி ஏதாவது செய்ய வேண்டுமென்ற நிலைமை நம் நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கிறதென்பதைச் சாதாரண மனிதனுக்கும் விளக்கி யிருக்கிறது கல்கி.

உற்பத்திப் பெருக்கு — விவசாயத்திலும் தொழிலிலும் — முக்கியம் என்று விளக்கியிருக்கிறது. அதற்கும் பொது மக்களின் ஒத்துழைப்பு வேண்டுமல்லவா? நமது பிரச்னைகளை அவர்களுக்கு விளக்கி இந்த லட்சியத்துக்கு அனுகுணமாக அவர்களது அறிவை வளர்த்திருப்பதற்குச் சர்க்கார் கல்கிக்குக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

உங்கள் கட்டுரைகள் வெறும் கண்டனங்கள் அல்ல. உருப்படியாகப் பல ஆலோசனைகளைச் சொல்லி யிருக்கிறீர்கள். எல்லாவற்றுக்கும் மக்களின் ஒத்துழைப்பு அவசியம். அதற்கு உங்கள் பத்திரிகை வழிசெய்துள்ளது.

இம்மாதிரி அரிய சேவையைக் ''கல்கி'' தொடர்ந்து செய்யட்டும். கல்கிக்கு எனது வாழ்த்துக்கள்.

சென்னை
16—8—58

டி. வி. நரசிம்மன்
மானேஜர், ஹைரா பாங்கி லிட்.,

★

சென்ற சில வாரங்களாகக் கல்கியில் வரும் 'ஆராய்ச்சி அரங்கம்' பலருக்குப் பல துறைகளில் உதவி செய்தாலும், எங்களைப் போன்ற ஊைற்றுத் தலைவியாக உள்ளவர்களுக்கும் பெரிதும் உதவுகிறது.

சென்ற இரண்டு மாதங்களாக என் கைக் குழந்தைக்குப் புட்டிப்பால் கிடைக்கவில்லை. கேட்டால் இறக்குமதி இல்லை என்கிறார்கள். நம்மிடமிருந்துஇவ்வளவு அதிகமாக வரி வாங்கும் சர்க்கார் வருங்கால மன்னர்களான குழந்தைகளுக்குப் புட்டிப்பால்கூட இறக்குமதி செய்யக் கூடாதாஎன்றெல்லாம் நினைத்தேன்.


என் கணவர் கல்கி இதழை எடுத்துக் கொடுத்து, 'இதைப் படி' என்று பொறுமையாகக் கட்டுரைகளை எடுத்துக் காண்பித்தார். அவற்றைப் படித்தபின்தான் எனக்கு நாட்டின் நிலைமை நன்கு புரிந்தது. எனவே என் சிநேகிதிகளுக்கெல்லாம் இப்பொழுது குழந்தைகளுக்குக் கூழ் கொடுக்கும்படி பிரசாரம் செய்கிறேன். வாழ்க கல்கி!

பம்பாய்
31—7—58

ஸ்ரீமதி ஜெயா-ராஜன்



...இதற்குப்
பிறகு பாலும்
ருசிகரமான
க்ளுகோ
பிஸ்கெட்டுகளும்
களைப்பை உடனே
நீக்குகிறது
க்ளுகோ
பிஸ்கெட்டுகள்
விட்டமின்கள் செறிந்தது
Parle Gluco BISCUITS
பார்லேயின் தயாரிப்பு
பார்லே ப்ராடக்ட்ஸ் மான்யுபாக்சரிங்
கம்பெனி பிரைவேட் லிமிடெட், பம்பாய்.



46

ஊருக்குக் குடி தண்ணீர் கொடுக்கும் குளத்துக்குப் பெயர் ஊருணி. மழை பெய்து ஊருணி நிறைந்து விட்டால் ஊரார் எல்லாம் களிக் கூத்தாடுவார்கள். மழையில் வந்த நீரைக் குளம் வெகு காலத்துக்கு வைத்து மக்களுக்குத் தரும். நீர் வெயிலில் உலர்ந்து போகாமல் குளத்தில் தேங்கி வெகு நாட்கள் நின்று தாகம் தணிக்கும். ஆண்டு முழுதும் பயன்படும். அதைப் போல் ஒப்புரவு அறிந்த மனிதனுக்கு வரும் நல்லதிர்ஷ்டம். அவன் அடையும் செல்வம் அவனிடம் வெகு நாட்கள் நின்று பிறருக்கு உதவும். அவனுடைய நல்லதிர்ஷ்டத்துக்கு ஊரார் எல்லாரும் சந்தோஷப்படுவார்கள்.

ஊருணி நீர்நிறைந்
தற்றே உலகு அவாம்
பேர் அறி வாளன்
திரு

[திரு—செல்வம்—நல்ல பாக்கியம்; உலகு அவாம்—கடமையறிந்து மக்களுக்கு உதவ விரும்பும் குணம் பெற்ற; பேர் அறிவாளன்—உண்மை அறிஞன் அதாவது ஒப்புரவு அறிந்தவன். ஒப்புரவு அறியாதவர்கள் அறிஞர்கள் அல்ல.]

கடமை அறிந்தவனுக்கு நல்ல பாக்கியம் வந்து சேர்ந்தால் அவன் மட்டுமல்ல, அவனைச் சுற்றியுள்ள அனைவரும் சந்தோஷம் அடைகிறார்கள். அத்தகையோனல்லாத ஒருவனுக்குச் செல்வம் வந்தால் அதற்காக யாரும் சந்தோஷப்பட மாட்டார்கள். இவனுக்கு ஏன் இந்த நல்லதிர்ஷ்டம் வந்தது என்று வெறுப்பார்கள்.

பயன்மரம் உள்ளூர்ப்
பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண்
படின்

[நயன் உடையான்—ஒப்புரவறிந்தவன். 'ஆல்' என்பது செய்யுளில் ஓசை நிறைக்க வந்தது. பொருளுக்கு அழுத்தம் தருவதற்காக வரும். அதற்கென்று தனிப் பொருள் இல்லை.]

ஒப்புரவறிந்தவனிடம் செல்வம் வந்து சேர்ந்தால் ஊரிலுள்ளவர் அடையும் மகிழ்ச்சிக்கு மற்றொரு உவமை தருகிறார். ஊர் நடுவிலுள்ள ஒரு மாமரமோ, பலாமரமோ நன்றாகக் காய் காய்த்துக் கனிகள் நிரம்பினால் எல்லாரும் எவ்வளவு குதூகலத்துடன் அதை வரவேற்பார்கள். அதைப் போல் கடமை அறிந்தவனுக்குச் செல்வம் வந்தால் ஊர் முழுதும் மகிழும். தனக்கு வந்த பாக்கியத்தை அனைவரும் அனுபவிக்கச் செய்வான். எல்லாரையும் மகிழச் செய்வதே தன்னுடைய பாக்கியமாக எண்ணி அவன் சந்தோஷப் படுவான். மரத்துக்கு உணர்ச்சி இருந்தால் ஊரார் எல்லாரும் தன்மேல் ஏறிப் பழத்தைப் பறித்து உண்ணும் போது அது எத்தன்மை மகிழ்ச்சி அடையும். அதைப் போன்ற மகிழ்ச்சி ஒப்புரவறிந்த உபகாரி அடைவான். அவனுக்கும் ஊராருக்கும் ஒரேபடியில் மகிழ்ச்சி தரும், அவனுக்கு வரும் செல்வம்.

செங்கோலும் ஜனநாயகமும்

• க. சந்தானம் •

4. பட்சபாதம்

எல்லாப் பிரஜைகளிடத்தும் பட்சபாதமின்றி அரசு புரிய வேண்டுமென்பது ராஜ தர்மம் மட்டுமல்ல, சிறந்த ராஜ தந்திரமும். மற்றக் கஷ்டங்களைச் சகிக்கக் கூடியவர்கள், தம்மிடம் பட்சபாதமாக அரசாங்கம் நடக்கிறது என்ற எண்ணத்தைப் பொறுக்க மாட்டார்கள். இம்மாதிரி ஒரு வகுப்பாரோ, கூட்டத்தாரோ நினைத்தால் அவர்களுடைய தேசபக்தி குன்றி அரசாங்கத்தின் மீது வெறுப்பு அதிகரிக்கும். நெருக்கடியான காலங்களில் இது அபாயத்தில் முடியும்.

எல்லா அரசியல் முறைகளுக்கும் இது பொதுவான போதிலும், ஜனநாயகத்தில் இவ்வுணர்ச்சியின் சக்தி அதிகரிக்கிறது. பாரதியார் கூறியபடி 'எல்லாரும் இந் நாட்டு மன்னர்' என்ற தத்துவத்தை அடிப் படையாகக் கொண்டது ஜனநாயகம். தனது அரசிலேயே எவனாவது அவமதிக்கப்படுவதைச் சகிப்பானா?

ஆயினும், அரசியலில் எவ்விதக் காரியங்களைப் பட்சபாதமென்று கூறலாம் என்பதை நிச்சயிப்பது சுலபமல்ல. ஒவ்வொருவரும் தனக்கு இஷ்டப்படி அர்த்தம் செய்து கொண்டால் ராஜ்யமே நடைபெறாது. எல்லா யுவர்களுக்கும் சர்க்கார் சேவகத்தில் ஆசை. அவர்களில் சிலரை நியமிப்பது பட்சபாதமா? சர்க்கார் சேவகர்களுக்குள் பலவிதமான அதிகார வரிசைக் கிரமங்களும், சம்பளங்களும், சலுகைகளும் ஏற்படுத்துவது பட்சபாதமாகுமா?

பட்சபாதமில்லாத அரசியலின் சில கோட்பாடுகளை அரசியல் தத்துவ நிபுணர்கள் நிர்ணயித்திருக்கின்றனர். அவற்றை விளக்குவது அவசியமாகும்.

சட்டத்துக்கு முன் எல்லாப் பிரஜைகளுக்கும் சமத்துவம் இருக்க வேண்டுமென்பது அவற்றில் பிரதம கோட்பாடு. அதாவது, ஒரு சட்டம் செய்யும்பொழுது அது சில பிரஜைகளைத்தான் கட்டுப்படுத்தும் என்று இராமல், எல்லாப் பிரஜைகளையும் சமமாகக் கட்டுப்படுத்த வேண்டும். குற்றச் சட்டம் பொருத்த வரையில், இது சுலபமானது. எல்லா நாடுகளிலும் இந்த நியமம் இக்காலத்தில் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் பண்டைக் காலங்களில் இது கூடப் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படவில்லை என்பதை மறந்து விடக்கூடாது. அடிமைகளுக்கும் சுதந்திரப் பிரஜைகளுக்கும் ஐரோப்பாவில் நிலவி வந்த ரோமன் சட்டத்தில் ஒரே குற்றத்துக்கு வெவ்வேறு தண்டனைகள் விதிக்கப்பட்டன. மநு நீதியிலும், வர்ணத்தை அனுசரித்துத் தண்டனை விதிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இன்னும் தென்னாப்பிரிக்காவில் நிறத்தின் பேரில் பல பட்சபாதமான சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சட்டத்தில் சமத்துவமிருந்தாலும், அதை அமுல் செய்வதில் சமத்துவம் இருப்பதில்லை. சாதாரண வழக்குகளில் பணக்காரர்களைப் போல் ஏழைகள் திறமையான வக்கீல்களை அமர்த்தி வாதாட முடியாது. அரசியல் வழக்குகளில் நியாயம் பிறழுவது சகஜம்.

சொத்து, தொழில், பதவி, பட்டம் முதலியவற்றில் சமத்துவம் இருக்க முடியாது. ஆதலால் இவைகளில் எல்லாப் பிரஜைகளுக்கும் சம சந்தர்ப்பங்கள் இருப்பதே பட்சபாதமற்ற ஆட்சியின் அறிகுறியாகும். அறிவுக்கும், திறமைக்கும் தகுந்தவாறு ஊதியமும், பொறுப்பும், கௌரவமும் கிடைத்தால் அந்தச் சமூகத்தில் செல்வம் குறைவாக இருப்பினும் திருப்தியும் தேசபாவமும் பரவியிருக்கும்.

அறிவும், திறமையும் முற்றிலும் பிறவிக் குணங்கள் அல்ல. பால்யத்தில் கிடைக்கும் உணவு, கல்வி வசதிகளை ஓரளவு பொருத்திருக்கும். ஆதலால், இந்த வசதிகள் எல்லாக் குழந்தைகளுக்கும், வாலிபர்களுக்கும் எளிதில் கிடைக்கும்படி செய்வது பட்சபாதமற்ற ஜனநாயகத்தின் கடமையாகும்.

சர்க்கார் சேவகர்களுக்கு நியாயமான சம்பளங்கள், படிகள் தவிர இதர சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் குழந்தைகளுக்கு மற்றக் குழந்தைகளுக்கு இல்லாத வசதிகள் அளிக்கப்படுகின்றன. பிரயாண சௌகரியங்களும் செய்யப்படுகின்றன. எதேச்சாதிகாரத்தில் இதற்கு ஒருவித சமாதானம் கூறலாம். மக்களின் அனுமதியின்றி நடைபெறும் அரசாங்கம் தன் சேவகர்களின் விசுவாசத்தைப் பெறுவதற்குத் தனி முயற்சிகள் செய்வது அவசியமென்று கூறலாம். ஜனநாயகத்திலோ எஜமானர்களுக்கு இல்லாத சலுகைகளெல்லாம் சேவகர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது விதண்டாவாதமாகும்.

ஜாதி, வகுப்பின் பேரில் தடைகள் விதித்து இடையூறுகளை விளைவிப்பது தவறு என்று சாதாரணமாக ஒப்புக் கொள்ளுவார்கள். இதற்கு நேர்மாறாக முற்காலத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கு இந்தக் காலத்தில் விசேஷ சலுகைகள் காட்டுவது நியாயமா என்ற பிரச்னை பாரதத்தின் முன் நிற்கிறது. ஓரளவு கொடுக்கலாமென்று நமது அரசியல் அமைப்பில் விதிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் சட்டசபைகளில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் சேவகத்திலும் ஒரு பாகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தாற்காலிகமாக இம் முறைகள் கையாளப்படுவதில் தவறு இல்லை. ஆயினும் இவை பட்சபா

தத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், நீடித்திருந்தால் அநியாயமாகும்; அதிருப்தியை உண்டாக்கும். ஜாதி, மதம் வகுப்பின் பேரில் அமைக்கப்பட்ட எவ்வித வித்தியாசங்களும் பட்சபாதமே யாகும். அவை அநீதியையும், இறைமையும் புறக்கணிப்பதாலும் அநியாயத்தோடு, சமூகத்துக்கு நஷ்டமும் விளைவிப்பதாகும்.

6. அமைதி

ஒரு நாட்டில் அமைதி நிலவி யிருக்கும் காலத்தில் அதன் பெருமை தெரிவதில்லை. ஆனால், ஏதாவது ஓரிடத்தில் இரு கூட்டத்தார் பகை மிகுந்து கலகம் செய்தால் அப்பொழுது அரசாங்கம் வேறு என்ன செய்யா விட்டாலும் பரவாயில்லை, அமைதியை நிலை நிறுத்தினால் போதுமென்று உணர்கிறோம். காந்தியடிகளின் ஒப்பற்ற தலைமையில் பாரத மக்கள் சாத்விகத்தைக் கடைப்பிடித்து, சுதந்திரப் போர் நடத்தும்பொழுது ஆங்காங்கு கொடிய ஹிந்து முஸ்லிம் கலகங்கள் ஏற்பட்டன. முதல் உலக மகாயுத்த காலத்தில் மலையாளத்தில் மாப்பிள்ளைமார் என்ற முஸ்லிம்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகக் கலகம் செய்து தனி ராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பினர். அது அரசியல் கலகமாக ஆரம்பித்தபோதிலும், திடீரென்று மதப் போராட்டமாக மாறியது. ஹிந்துக்கள் பலாத்காரமாக முஸ்லிம்களாக்கப்பட்டனர். மறுத்தவர்கள் கொல்லப்பட்டும், கொள்ளைக்காளாகியும் வர்ணிக்கத் தகாத துன்பங்களை அனுபவித்தனர். பிரிட்டிஷ் அரசாங்கம் எவ்வளவு கெட்டதாக இருந்தாலும், அக்கலகத்தை அடக்கியதும் தென்னிந்திய மக்களின் நன்றிக்குப் பாத்திரமாயிற்று.

பின்னர் சுதந்திரப் போர் காலத்தில் வட இந்தியாவில் பல இடங்களில் கொடிய ஹிந்து முஸ்லிம் கலகங்கள் நடந்த பொழுதெல்லாம் இதே உணர்ச்சி உண்டாயிற்று.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை இரு பாகங்களாகப் பிரித்து விட்டு வெளியேறப் போகிறது என்று நிச்சயமானவுடன் முஸ்லிம் லீக்கின் தூண்டுதலின் பேரில் பஞ்சாப், பீகார், வங்காளம் முதலிய பிரதேசங்களில் அவ்வித கலகங்கள் ஏற்பட்டன. பிரிட்டிஷார் 1947-ம் வருஷம் ஆகஸ்டு 15-ம் தேதி வெளியேறினார்கள். உடனே பாகிஸ்தானைச் சேர்ந்த மேற்கு பஞ்சாபில் ஹிந்துக்களையும், சீக்கியர்களையும் முஸ்லிம்கள் தாக்கி ஆயிரக்கணக்கில் கொல்லத் தொடங்கினர். இந்தக் கொடுமையின் விவரங்கள் பாரதத்துக்குக் கிடைத்தவுடன் கிழக்கு பஞ்சாப், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தானம் முதலிய பிரதேசங்களில் ஹிந்துக்கள் கட்டுக்கடங்காமல் வெறி பிடித்து முஸ்லிம்களைத் 'தாக்க ஆரம்பித்தனர். இரு பக்கங்களிலும் தங்கள் உயிருக்குப் பயந்து ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் கூட்டம் கூட்டமாகத் தங்கள் வீடுகளையும், நிலங்களையும், இதர சொத்துக்களையும் துறந்து வெளியேறினர். அப்பொழுது நான் டில்லியில் வசித்து வந்ததால் இக் கலகத்தைப் பற்றிய விவரங்களை அறிந்ததுமன்றி நேரில் கண்டு அதன் கொடுமைகளை நன்குணரச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு சமயம் மற்றப் பத்திரிகை நிருபர்களுடன் ஆகாய விமானத்தில் சென்று பாகிஸ்தானிலிருந்து மந்தை மந்தையாகச் சீக்கியர்களும், ஹிந்துக்களும் வருவதைப் பார்த்தேன். இந்தத் துக்க ஊர்வலம் 20, 30 மைல் நீண்டிருந்தது. தவிர, அதற்கு முன் வந்த கூட்டங்கள் வெளி மைதானத்தில் வசிப்பதையும் கண்டேன்.

பாரத மத்திய சர்க்காரின் தலைநகரான டில்லியில் முஸ்லிம்கள் சொல்லத்தகாத கொடுமைகளுக் குள்ளானதையும் நேரில் பார்த்தேன். ஒரு சமயம் மூன்று நாட்களுக்கு 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை மாடியிலிருந்து வெளிக்கிளம்ப முடியவில்லை. எதிர் வீதியில் ஹிந்து வாலிபர்களின் கோஷ்டிகள் முஸ்லிம்களை வேட்டையாடிக் கொண்டிருந்தன. காலஞ்சென்ற தேவதாஸ் காந்தி அவர்களுடன் ஒரு மாலை சர்தார் படேலைப் பார்க்கப் போயிருந்தேன். அவர் துக்க சாகரத்தில் மூழ்கியிருந்தார். உள்நாட்டு மந்திரியாக இருந்தபோதிலும், வெறி பிடித்த ஹிந்து, சீக்கிய வாலிபர், சிப்பாய்களின் மீது தமது அதிகாரத்தை அமுல் செய்ய முடியவில்லையே என்று வருந்தினார். அந்தச் சமயத்தில் நாட்டில் அமைதி ஏற்படுமா, சுதந்திர பாரதம் குழப்பத்தில் கலைந்து விடாமல் தப்புமா என்று சந்தேகமாக இருந்தது. கடவுள் கிருபையால் அமைதி ஏற்பட்டுச் சென்ற 11 வருஷங்களில் பல துறைகளிலும் பாரதம் முன்னேறி வருகிறது. ஆதலால் அமைதியின் அவசியத்தையும், அதை நிலைநிறுத்துவதின் கஷ்டத்தையும் ஜனங்கள் மறந்து, கலகக்காரர்களுக்கும், பலாத்காரப் புரட்சியை நாடுவோருக்கும் ஆதரவளிக்கின்றனர். இதைப் போன்ற அபாயமும், மூடத்தனமும் வேறு கிடையாது. சமீபத்தில் ராமநாதபுரத்தில் ஏற்பட்ட கலகத்தின் படிப்பினையைத் தமிழ்நாட்டார் நன்குணர வேண்டும். அமைதியைக் குலைப்பது வெகு சுலபம். மீண்டும் நிலைநாட்டுவது மிகவும் கஷ்டம். இன்றைக்கு ஒரு சிறு பாலர் வகுப்பின் மீது அக்கிரமம் செய்யப்பட்டால், அது நெருப்பைப் போல் எங்கும் பரவும். கலகம் மூண்டு விட்டால் அனைவரும் துன்புறுவது நிச்சயம். சமூகத்துக்கு நஷ்டமும் தவிர்க்க முடியாது.

ஆதலால், அமைதியைத் திடமாகப் பாதுகாக்க வல்லமை இல்லாத எந்த அரசும் ஏற்கத் தகுந்ததல்ல. இதுவே ஜனநாயகத்துக்குப் பெரிய சோதனை. ஏதேச்சாதிகாரம் மிருக பலத்தாலும், பயத்தாலும் அமைதியை நிலைநாட்டலாம். ஜனநாயகத்தில் அது சாத்தியப்படாது. கலகத்தை மூட்டி விட்டுச் சூழ்ச்சிக்காரர்கள் பூனை போல் பதுங்கி விடுவார்கள். கலகத்தை அடக்கும் போலீஸ் சேவகர் மீது அறியாத மக்கள் சீறி விழுவர். சில சமயம் போலீஸாரும் வெறி பிடித்து அவசியத்துக்கு மேற்பட்ட பலாத்காரத்தை உபயோகித்து, கொடுமை முறைகளைக் கையாண்டு கலகத்தை அடக்க முயலுவார்கள். அந்தப் போலீஸாரின் அக்கிரமங்

களைக் கண்டித்துத் தண்டித்தால் அடுத்த கலகத்தைத் தடுப்பதற்குத் தயங்குவார்களோ என்றும், அப்படிக் கண்டிக்காமலும் தண்டிக்காமலும் விட்டு விட்டால் பொது மக்களின் ஆதரவை இழக்க வேண்டி வருமோ வென்றும் ஜனநாயக மந்திரிகள் இருதலைக் கொள்ளிக்கு நடுவில் அகப்பட்ட எறும்புகள் போல் தவிப்பார்கள்.

ஒரு நாள் கலகத்தில் லட்சக்கணக்கான ரூபாய்கள் சேதம் ஏற்படும். 1947 கலகங்களில் பாரதத்துக்கு ஓடி வந்த சரணார்த்திகளுக்காக இது வரையில் பாரத மக்கள் ரூ. 400 கோடி கொடுத்திருக்கின்றனர். அப்படியும் சரணார்த்திகளின் தொல்லைகள் தீரவில்லை. அவர்களின் மனத்தில் துக்கமும், கோபமும் நிறைந்திருக்கின்றன.

சர்க்கார் அதிகாரிகள், இதர ஸ்தாபனங்கள், பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைத்து அமைதியைக் கண்ணும் கருத்துமாகக் காக்க வேண்டும். தவிர்க்க முடியாத கலகமோ குழப்பமோ சம்பவிக்கும் பொழுதும், அதை நிறுத்துவதற்கு அனைவரும் சேர்ந்து செய்யக் கூடிய முறைகளையும், ஏற்பாடுகளையும் அமைதிக் காலத்திலேயே தயார் செய்து வைக்க வேண்டும்.

போலீஸ் படைக்கும், சைனியத்துக்கும் செய்யும் செலவுகள் வீண் என்று அமைதிக் காலத்தில் தோன்றலாம். இது முற்றிலும் தவறு. ஆனால் வெறும் பணச் செலவினால் மட்டும் திறமையான போலீஸ் படையும், வீரமுள்ள சைனியமும் கிட்டி விடாது. தேச பக்தியும், தைரியமுமுள்ள யுவர்களை ஜாதிமதபேதமின்றி இப்படைகளில் அமர்த்தி அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுப்பதோடு பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

6. ஆரோக்கியம்

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால், மக்களின் ஆரோக்கியத்தைப் பற்றி அரசாங்கத்தின் கடமை மிகவும் அதிகரித்து விட்டது. துரித போக்குவரத்து சாதனங்கள் பெருகவே கொடிய தொத்து நோய்கள் வெகு விரைவில் நாடெங்கும் பரவிவிடுகின்றன. ஒரு தேசத்திலிருந்து அடுத்த தேசத்துக்குக் கப்பல் மூலமாகவோ, விமானத்திலோ செல்லுவோர், இவ்விதத் தொத்து நோய்களைத் தடுக்கும் பலவித மருந்துகளில் ஊசி குத்திக் கொள்ள வேண்டும். துறைமுகங்களிலும், விமான நிலையங்களிலும் டாக்டர்களால் பரிசோதனை செய்யப்பட்ட பிறகே உள்ளே புக அனுமதிக்கப்படுவார்கள். நாட்டுக்குள்ளும் உற்சவ காலங்களிலும், பெரும் கூட்டங்கள் நடக்குமிடங்களிலும் இவ்விதப் பாதுகாப்புகள் கையாளப்படுகின்றன.

தற்கால வைத்தியம் மிகவும் விரிந்த, நுட்பமான கலையாகிவிட்டது. அதைச் சரிவர உபயோகிக்கப் பெரிய வைத்தியசாலைகளும் நுட்பமமான கருவிகளும், நீண்ட காலம் தேர்ச்சி பெற்ற டாக்டர்களும், நர்சுகளும் தேவை. அமெரிக்காவில் நியூயார்க் என்னும் நகரின் 1958-59 ம் வருஷத்திய வரவுசெலவுத் திட்டத்தில் சுகாதாரத்துக்கும் வைத்தியத்துக்கும் 100 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பாரதம் முழுதும் இதில் பாதித் தொகையே செலவழிக்கப்படுகிறது.

சுகாதாரத்தின் முக்கியபாகங்கள், தொத்து நோய்களைத் தடுப்பது, சுத்த ஜலம் கொடுப்பது, நாகரிகமான சாக்கடை வசதிகள் செய்வது. நகரங்களில் வசிக்கும் மக்களின் சங்கியை ஓயாமல் பெருகி வருவதால், இவற்றின் செலவுகளும் மிகவும் அதிகரித்து வருகின்றன. பாரதத்திலுள்ள நகரங்களுக்கெல்லாம் போதிய குடி ஜல ஏற்பாடுகளும் சாக்கடை வசதிகளும் செய்ய வேண்டுமானால் பல நூறு கோடி ரூபாய்கள் சர்க்கார் செலவிட வேண்டும். தமிழ் நாட்டில் சென்னை மாநகரில்கூட இவை முற்றிலும் சரிவரச் செய்யப்படவில்லையென்றால் இதர நகரங்களின் நிலைமையைக் கூற வேண்டியதில்லை. நல்ல குடிஜலவசதிகள் உள்ள கிராமங்கள் சிறுபான்மையே. பெரும்பாலும் ஆறு குளங்களிலுள்ள ஜலத்தைக் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், மாடுகள் குளிப்பாட்டுவதற்கும், மற்றும் எல்லாக் காரியங்களுக்கும் கலந்து உபயோகித்து வருகின்றனர். இதனால் ஆரோக்கியத்துக்குப் பல தீமைகள் உண்டாவதை அனைவரும் அறிவார்கள். வறுமையினால், வேறு வழியில்லை.

வைத்தியத்தில் பொதுவான வியாதிகளுக்கு வேண்டிய வசதிகளோடு, க்ஷயம், புற்று நோய், குஷ்டரோகம் முதலிய கொடிய வியாதிகளுக்கு விசேஷ ஏற்பாடுகள் தேவை. வீடுகளில் பழைய வழக்கப்படி பிரசவத்தால் அநாவசியமாகச் சிசு மரணம் அதிகமாகிறது. பிரசவத்துக்கு முன்னும், பிரசவ காலத்திலும், அதற்குப் பின்னும் தற்கால வைத்திய முறைப்படி போதிய கவனம் எடுத்துக் கொண்டால் சிசு மரணத்தை அநேகமாக முற்றிலும் தடுத்துவிடக் கூடும் என்று பல நாடுகளில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பாரதத்தில் ஆண்டுதோறும் 1 கோடிக்கு மேல் பிரசவங்களாகின்றன. ஒரு பிரசவத்துக்கு ரூ. 100 பொதுச்செலவு செய்தாலும் ரூ. 100 கோடி வேண்டும். இந்நாட்டில் பிறக்கும் ஒவ்வோர் குழந்தைக்கும் நல்வாழ்வளிக்க நாட்டின் செல்வம் பன்முறை பெருக வேண்டும்.

எல்லா மக்களுக்கும் இலவசமாக வைத்தியம் செய்யப்பட வேண்டுமென்ற கொள்கை முற்போக்கான நாடுகளில் பரவி வருகிறது. ஜனநாயகத்தில் இது ஓர் அடிப்படையான பிரஜாஉரிமையாகக் கருதப்பட வேண்டும். இதற்காக எல்லாச் சம்பளங்களிலும், கூலிகளிலுமிருந்து சிறிய சந்தா வசூலிப்பது வழக்கத்தில் இருந்து வருகிறது. அம்மாதிரி ஒவ்வோர் கிராமத்திலும், நகரத்திலும் சந்தா வசூல் செய்து வைத்திய வசதியை அதிகரித்தால், சந்தாத் தொகையைவிடப் பன்மடங்கு நோயற்ற வாழ்வின் மூலம் சமூகத்துக்கு லாபமாகும்.

பௌராணிகர் எழுதும்

பக்தி வயல்

ராஜாஜியின் வாழ்த்து

''எது தருமம், எது வழி என்கிற தீராத விசாரணைகளையெல்லாம் விட்டு விட்டு, 'நீயே சரணம்' 'நீதான கதி' என்று என்னை அடைவாயாக, எல்லா பாபங்களினின்றும் உன்னை விடுவிப்பேன். கவலைப்படாதே''—என்று அர்ஜுனனுக்கு அதாவது நமக்கெல்லாம் உறுதிமொழி தந்தான் திருமால். அந்தத் திருமாலின் அவதாரக் கதைகள் ஸ்ரீமத் பாகவதம். பாகவத புராணமானது அகன்று நீண்ட ஒரு பக்தி வயல். காலத்துக்குத் தக்கவாறு நம்முடைய முனிவர்கள் அறநூல்கள் தந்தார்கள். வேதம், உபநிஷதம், ராமாயணம், மகாபாரதம் இவற்றைத் தந்து விட்டு, கெட்டுப் போன இந்த யுகத்துக்காக பாகவதம் தந்தார்கள்.

''ராமாயணத்தையும், மகா பாரதத்தையும், 'சக்கரவர்த்தித் திருமகன்' என்றும், 'வியாசர் விருந்து' என்றும் கொடுத்தீர். பாகவதத்தையும் அவ்வாறே தமிழில் எழுதித் தரவேண்டும்'' என்று பலர் என்னை வற்புறுத்தி வந்தார்கள். தற்போது அது என்னால் முடியாத பணி என்று உணர்ந்து, தகுந்த ஒரு நண்பரைக் கேட்டுக் கொண்டேன். அவர் இனி வாரா வாரம் ''கல்கி''யில் ''பௌராணிகர்'' என்று தமக்குப் பெயர் வைத்துக் கொண்டு திருமாலின் அவதாரக் கதைகளை எழுதி வருவார். சிறுவர் சிறுமிகள் வாசித்து நிலைபெற்ற படிப்பும் பேறும் ஆகிய நல்ல குணத்தை அடைய வேண்டும். பெரியோர்களும் 'குற்றம் களைந்து குறை பெய்து' வாசித்து, பௌராணிகருடைய இந்தப் பணிக்கு ஆசீர்வாதம் தரவேண்டும். இந்தச் சில வார்த்தைகளுடன் 'பக்தி வயலை' அறிமுகப் படுத்திவிட்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.



பக்தி வயல்

பௌராணிகர்

ஆசிரியன் முன்னுரை :

ராஜாஜியின் ஆசிமொழிகளை நற்சகுனமாகவும், ஊக்கத்துக்குத் தூண்டுகோலாகவும் "பக்தி வயலு"க்குப் பெய்த மழையாகவும் கருதுகிறேன். 'சக்கரவர்த்தித் திருமகனு'டனும் 'வியாசர் விருந்து'டனும் எனது எளிய முயற்சியைச் சேர்த்துப் பேசுவதே சரியல்ல. மூன்றுமே திருமாலுடைய பெருமையை விளக்கும் நூல்கள் என்பதுதான் அவைதம்மில் தொடர்பு.

பாகவதம், கடினமான வடமொழி நடையில் எழுதப்பட்டுள்ளது. கதை மட்டும் இல்லாமல் துதிகளும் தத்துவங்களும் மலிந்து கிடக்கும் பக்தி நூல். ஆனால் இக்காலத்தில் கடவுளை வழிபடுவதற்கு ஏற்ற குறுக்குப் பாதை இதுவே. "எளிதில் முக்தி அடைவது எப்படி?" என்ற விசாரம்தான பாகவதத்தின் சாரம்.

பெரியாழ்வார்,

"காயமலர் நிறவா, கருமுகில் போலுருவா,
கானக மாமடுவிற் காளிய னுச்சியிலே
தூயநடம் பயிலுஞ் சுந்தர வென்சிறுவா"

என்றும், ஆண்டாள்,

"கூர்வேல் கொடுந்தொழிலன்,
நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை
இளஞ் சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்
போல் முகத்தான்"

என்றும், பாரதியார்,

"பண்டமெலாம் சேர்த்து வைத்துப்
பால் வாங்கி மோர் வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போல் பிரியமுற
ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே
சேவகனாய்"

என்றும் தேன்மொழிகளால் துதிக்கப்பட்ட கண்ணன், தமிழருக்கு உரியவன் என்று உரைக்கவும் வேண்டுமோ?

1. வியாசரின் சந்தேகம்

வேதவியாசர் பாகவதம் எழுதியதும், நாரதர் தன் வரலாற்றைச் சொன்னதும்.


நம் அனைவருக்கும் உரிய பாரத தேசத்தில், நைமிசாரண்யம் என்று பேர் பொருந்திய புண்ணியமான இடம் ஒன்று இருக்கிறது. அவ்விடத்தில் சௌனகர் முதலான முனிவர்கள், பல்லுயிரும் கடைத்தேற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், நெடு நாட்களாக ஒரு வேள்வியை நடத்தி வந்தார்கள். ஒரு சமயம் பக்தருள் சிறந்தவரான ஸூதர் அவ்விடம் போய்ச் சேர்ந்தார். அவரைக் கண்டதும் முனிவர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து, உபசரித்து, பின்வருமாறு வினவினார்கள்.

"இக் கலியுகத்தில், ஜீவன்கள் * பெரும்பாலும் வாழ்க்கை குன்றியும், மதி மங்கியும், இடையூறுகளினால் வருந்தியும், நோயால் நொந்தும், வாழ்ந்து வருகிறார்கள். ஆகையால், ஸூதரே, எந்த வாசுதேவனுடைய நாமத்தைப் பற்றிக் கொண்டால், இந்த வாழ்வில், நின்று கடைத்தேறலாமோ, அவருடைய வரலாற்றை எங்களுக்கு எடுத்து உரைப்பீர். கடலைக் கடக்க விரும்பினவனுக்குக் கப்பல் ஓட்டி எப்படியோ, அது போலவே கலியைத் தாண்ட விரும்பும் எங்களுக்குக் கடவுளாலேயே தாங்கள் காண்பிக்கப்பட்டீர்."

இதைக்கேட்ட ஸூதர் ஆனந்தத்துடன் பதில் அளித்தார்:

"நல்லவருக்கு நன்மையை நல்கும் கண்ணன், தன் கதையைக் கேட்பவருடைய மனத்தில் இருந்து கொண்டு, அவர்களுடைய மனத்தில் உறைந்திருக்கும் தீமைகளைத் தேய்த்துத் தன்னிடத்தில் பக்தியை உண்டு பண்ணுகிறான். மறையும், யாகமும், யோகமும், நற்செயலும், வேதாந்தமும், தவமும் வாசுதேவனையே விஷயமாகக் கொண்டுள்ளன. நாம் கடைத்தேற வேண்டும் என்று, நாராயணன் எத்தனையோ சரீரங்-

* உடல் பூண்டவர்கள்



களைத் தம் மாயையின் பலத்தினால் எடுத்திருக்கிறார். அவை எண்ணுக்கு அடங்காதவை. நீர் நிரம்பிய ஏரியிலிருந்து வெளிவரும் சிறு பாசனங்கள் போன்றவை. சில அவதாரங்கள் ஹரியினுடைய அம்சங்கள் மட்டும் கொண்டுள்ளன. ஆனால் கண்ணன் என்று செய்த அவதாரமோ, பகவானே நேராக வந்தது.

"கண்ணனின் சரிதமான பாகவதம் என்ற சிறந்த புராணத்தை வியாசர் உயிர்களின் நன்மைக்காகச் செய்தருளினார். பின்னர், மனத்தை அடக்கிய மாந்தரில் மேலானவரான தம் மகன் சுகருக்கு இந்தப் புராணத்தை எடுத்து உரைத்தார். சுகர் இந்தக் கதையை பரீக்ஷித் என்ற அரசனுக்கு உபதேசித்தார். அத்தருணம் நானும் அங்கு இருந்தேன். நான் கேட்டதைத் தெரிந்த வரையில் உங்களுக்குக் கூறுகிறேன்."

இந்த பாகவதம் என்ற புராணம் முதலிலிருந்து, கடைசிவரை

ஸூதர், சௌனகர் முதலான முனிவர்களுக்குச் சொன்னதாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பரீக்ஷித்து மன்னருக்குப் பாகவதம் சொன்ன சுகர், சிறு வயதில் பூணூல் போடுவதற்கு முன்னரே, துறவியாய்ப் போய் விட்டார். அவர் வேற்றுமை புத்தியை அடியோடு இழந்து, ஆங்காங்கு திரிந்து வந்தார். ஒருநாள் ஓர் ஆற்றின் கரையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அவர் தந்தையான வியாசர் பின்தொடர்ந்து போனார். சுகர் பிறந்த மேனியாகப் போய்க் கொண்டிருந்தார். வியாசர் ஆடை உடுத்தியிருந்தார். அப்போது ஆற்றில் சில பெண்கள் நீராடிக் கொண்டிருந்தனர். சுகர் போவதை அவர்கள் சிறிதும் பாராட்டவில்லை. ஆனால் வியாசரைக் கண்டதும் சரேலென்று தங்களை ஆடையால் மூடிக் கொண்டார்கள். இதைக் கண்டு வியாசர் வியந்தார். தம் மகனைத் துணி யுடுக்காமல் கண்டும் கலங்காத பெண்கள், தம்மைக் கண்டதும் ஏன் பரபரப்புடன் ஆடையை அணிந்து கொண்டார்கள்? இதன் காரணத்தை அவர்களிடமே வியாசர் கேட்டார். பெண்கள் இவரிடம் "உங்களுக்கு ஆண், பெண் என்ற வேற்றுமை புத்தி விலகவில்லை. உங்கள் மகன் வேற்றுமையை வென்றவர். அவருக்கு அனைவரும், ஒன்றே. அதனால்தான் அவரைக் கண்டு நாங்கள் வெட்கப்படவில்லை. உங்களைப் பார்த்ததும்தான் வெட்கம் தோன்றியது" என்றார்கள்.

இந்தச் சிறு நிகழ்ச்சியிலிருந்து மன்னருக்குப் பாகவதம் சொன்ன சுகர் "ஜீவன் முக்தர்" * என்று தெரிய வருகிறது.

பிறகு, ஸூதர், எதற்காக வியாசர் பாகவதத்தை எழுதினார் என்ற கதையைக் கூறலானார். மூன்றாவது யுகமான துவாபர யுகத்தின் அந்தியில், பராசரர் என்ற முனிவருக்குச் சத்தியவதி என்ற பெண்ணிடத்தில் வியாசர் பிறந்தார். ஒரு நாள் வியாசர் அதிகாலையில் சரஸ்வதி நதியில் நீராடி விட்டுக் கரையில் உட்கார்ந்து கொண்டு காலத்தின் முன்போக்கையும் பின் நடந்ததையும் தம் மனக் கண்ணால் கவனித்தார். காலத்தின் கதி கேவலமாகப் போவதைக் கண்டார். மனிதர் அனைவருக்கும் எது நன்மையைக் கொடுக்கும் என்பதைச் சிந்தித்தார். வேள்விகள் தவறாமல் நடக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு, ஒன்றாக இருந்த வேதத்தை நான்காக வகுத்தார். இதிகாசங்களும் புராணங்களும் ஐந்தாவது வேதம் என்று எண்ணப்படுகின்றன. நான்கு வேதங்களையும் தம் சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். நாளடைவில் அவை விரிவாகக் கிளைவிட்டு வளர்ந்தன. பிறகு, அதிகாரம் அற்றவர்களும் ஆண்டவனை அடைய வேண்டும் என்று எண்ணி, வியாசர் பாரதம் என்ற பெரிய சரித்திரத்தைச் செய்தார்.

இவ்வளவு நற்செயல்களைச் செய்தும், வியாசருக்கு மனத்தில் நிம்மதி ஏற்படவில்லை. தம்மை நொந்து கொண்டார்.

"பிரும்மசரியத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு ஆசிரியர் சொல்லை மீறாமல், வேதங்களை ஓதியும் அக்னியில் செய்ய வேண்டிய கர்மாவைச் செய்து கொண்டும் வருகிறேன். வேதசாரத்தை மகாபாரதம் மூலமாக அனைவருக்கும் எடுத்துரைத்தேன். இதனால், என்னுடைய ஜீவன், எவ்வளவோ மேன்மையையும் பிரகாசத்தையும் அடைந்த போதிலும், தன்னுடைய உண்மையான தன்மையை அறிந்து கொள்ளாமல் தவிக்கிறது. ஒரு வேளை பக்தர்களுக்குப் பிரியமான தர்மங்களை நான் விரித்துரைக்க வில்லையா, என்ன? அவையன்றோ அச்சுதனுக்கு அருமையானவை?"

இவ்விதம் தம்மைக் குறை கூறிக் கொண்டிருந்த வியாசர் முன்னிலையில் நாரதர் தோன்றினார். அவரிடம் வியாசர் தம் குறையைத் தெரிவித்துக் கொண்டார். நாரதர் அதற்குப் புன்சிரிப்புடன் பதில் உரைத்தார்.

"தாங்கள் உலக தர்மங்களை நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். ஆனால் தர்மத்தினாலும் ஞானத்தினாலும் பகவான் திருப்தி அடைய மாட்டார். வாசுதேவனுடைய மாசில்லா மகிமையை நீங்கள் இதுவரையில் பாடவில்லையே! தப்பாகச் சொன்னாலும் அனந்தனுடைய நாமம்தான் பாபத்தைப் போக்கும். பக்தியில்லாத பாட்டுக்குப் பயனில்லை; மேன்மையும் இல்லை. ஆகையால் எல்லா உயிர்களுக்கும் பிறப்பெனும் பிணி நீங்குவதற்குக் கருவியான பகவானுடைய லீலையை எடுத்து உரைப்பீர். பக்தியில் ஈடுபட்டவனுக்கு எப்பிறவியிலும் பக்தி வாசனை நீங்காது. அவன் எவ்விதத்திலும் கடைத் தேறி விடுவான்.

"முனிவரே! இதற்கு முன் யுகத்தில் நான் அந்தணர் வீட்டில் வேலை செய்து வந்த ஒரு பெண்ணிடம் பிறந்தேன். நானும் அவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தேன். ஒன்றும் அறியாத பாலகனான என்னிடம் அவர்கள் அன்பு பாராட்டி வந்தார்கள். அவர்கள்

* உடலுடன் வாழும்போதே முக்தி அடைந்தவர்.

உண்டு மீதியான பருக்கையை உட்கொண்டு பாபங்களை அகற்றினேன். அவர்கள் செய்யும் பஜனையைக் கேட்டு ஆண்டவனிடம் ஈடுபட்டேன். கண்ணனுடைய கதையெல்லாம் கேட்டு வந்தேன். ஒருநாள் முனிவர்கள் என்மீது கருணைகூர்ந்து, மிகவும் இரகசியமான ஞானத்தை எனக்கு உபதேசித்தார்கள். பிறகு வேறு தேசம் போய் விட்டார்கள்.

"என் தாய் என்னிடம் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தாள். ஆனால், நானோ அன்னையின் அன்பு என்ற கட்டு விலக வேண்டும் என்று காத்திருந்தேன். ஒருநாள் இரவில், பசுவைக் கறப்பதற்கென்று வெளியில் சென்ற என் தாயைப் பாம்பு கடித்து விட்டது. அதன் காரணமாக என் தாய் இறந்து போனாள். உடனே நான் அவ்விடத்தை விட்டு, வட திசை நோக்கி வெளியேறினேன். அப்பொழுது எனக்கு வயது ஐந்துதான்.

"ஆங்காங்கு திரிந்து கொண்டு இருந்த நான் ஒருநாள் ஒரு பயங்கரமான கானகத்தை அடைந்தேன். உள்ளும் புறமும் சோர்ந்தவனாய், அருகில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் நீராடி, நீரையும் பருகி விட்டுக் கரையில் இருந்த அரச மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டேன். என் மனத்தில் அமர்ந்திருக்கும் பரமாத்மாவை நான் முன் கேட்டிருந்த வண்ணம், தியானம் செய்தேன். உருகிய மனத்துடனும், நீர் வடியும் கண்ணுடனும் நான் ஹரியைச் சிந்தித்திருக்கும் பொழுது, என் உள்ளத்தில் சிறிது சிறிதாக அவரே உருவெடுத்தார். ஆனந்தத்தில் அமர்ந்தவனாகி என் உடலை மறந்தேன். ஆனால் அந்தத் தோற்றம் மறைந்து விட்டது. மறுபடியும் துக்கத்துக்கு ஆளானேன். மனத்தை உறுதி செய்து கொண்டு எவ்வளவு முயன்றும் அந்த உருவம் திரும்பவும் உதிக்கவில்லை. அப்பொழுது நாராயணனுடைய அருள்வாக்கு கேட்டது.

"'குழந்தாய்! மலங்கள் மிகுந்த மானிடர்கள் என்னை நேராகப் பார்க்க முடியாது. ஆகையால் இப் பிறவியில் நீ என்னைக் காண மாட்டாய். பெரியோர்களுக்குச் செய்த தொண்டினால் உனக்கு என்னிடம் நிலையாக நிற்கும் பக்தி பிறந்திருக்கிறது. அந்த ஆசை வளர வேண்டுமென்றே என் ரூபத்தை ஒரு சிறிது உனக்கு மனத்தில் காண்பித்தேன். இவ்வுடலைப் பிரிந்ததும் நீ என் ஆள் ஆகி விடுவாய். அதற்குப் பின் எப்பொழுதும் நீ என் எண்ணமாகவே இருப்பாய்.'

"இவ்விதம் உரைத்த குரல் ஓய்ந்ததும், நான் தலைவணங்கினேன். அன்று தொட்டு, வாட்விட்டு அனந்தனுடைய நாமத்தைப் புகழ்ந்தும், அவன் செயலை வியந்தும், பூமியைச் சுற்றிக்கொண்டு, உடல் நீங்கும் தருணத்தை ஆவலுடன் எதிர்பார்த்து வந்தேன். இவ்விதம் அலைந்து கொண்டிருந்த எனக்கு, வர வேண்டிய வேளையில், மேகத்தில் மின்னலைப் போல், மரணம் வந்தது.

"அப்பொழுதுதான் இந்தச் சரீரத்தை இழந்து சூக்ஷ்மமான நிலையில் பிரும்ம தேவனிடம் ஒடுங்கினேன். இருவருமாகப் பிரளயத்தில் நாராயணனிடம் ஒடுங்கினோம். திரும்பவும் நாராயணனுக்கு ஜீவன்களைப் படைக்கும் ஆசை வந்தபொழுது, மரீசி முதலிய ரிஷிகளுடன் நானும் பிறந்தேன். தடைப்படாமல் கடவுளையே நினைந்து கொண்டு, மூவுலகையும் சுற்றி வருகிறேன். மஹதீ என்ற வீணையை மீட்டி அவருடைய நாமங்களைப் பாடி வருகிறேன். அப்பொழுதெல்லாம் ஹரி என் மனத்தில் தோன்றுவார்.

"இந்த ஹரியினுடைய கதைதான் வருந்துவோர்க்கு மருந்து. காமத்தினாலும் ஆசையினாலும் குன்றிய மனம், முகுந்தனுடைய சேவையைத் தவிர வேறு ஒன்றினாலும் அமைதியை அடையாது. பாபமற்ற முனிவரே! நீங்கள் கேட்ட கேள்விக்கு இதுதான் பதில்."

இவ்வாறு உபதேசம் செய்து விட்டு நாரதர் மறைந்து விட்டார். சரஸ்வதி நதியின் மேற்குக் கரையில் "சம்யாப்ராசம்" என்ற ஆசிரமம் இருக்கிறது. வியாசர் அங்கு சென்று தம் மனத்தை வசப்படுத்திக் கொண்டு, தியானம் செய்தார். அவருக்கு, அறிவியான பரம்பொருளும் அதை மறைக்கும் மாயையும் மனத்தில் தெரிந்தன. மாயையினால் மறையுண்டு "ஸத்வம்", "ரஜஸ்", "தமஸ்" என்ற மூன்று குணங்களுக்கு அடிமையான ஜீவன், உண்மையில் இந்தக் குணங்களைத் தாண்டின தன்மையை உடையவன் என்று அறியாமல், குணங்களின் சேர்க்கையால் அனேக துன்பங்களை அனுபவிக்கின்றான். இந்தத் துன்பத்தை அகற்றுவதற்கு நாராயணனிடம் செலுத்தும் பக்தி ஒன்றுதான் வழி என்று வியாசர் கண்டார். இதை அறியாதவர்கள் முன்னேறுவதற்காகப் பாகவதம் என்ற புராணத்தை எழுதினார். பாகவத கதையைக் கேட்கும் பொழுதே கண்ணனிடம் பக்தியானது மனத்தில் ஊறுகிறது. பயத்தையும், துன்பத்தையும், மோகத்தையும் பக்தியானது அறவே ஒழித்து விடுகிறது.

இவ்விதம் பாகவதத்தைச் செய்து, துறவியான தம் மகன் சுகனுக்கு வேத வியாசர் அதைச் சொன்னார். **(தொடரும்)**


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

பன்னிரண்டாம் அத்தியாயம்

"சொந்த விஷயம்"

மல்லிகாவுக்கு உடம்பு குணமானதும் அவளை நர்ஸிங் ஹோமிலிருந்து அழைத்துச் சென்ற சுகுமாரன் நேராகத் தமது காரியாலயத்துக்குச் சென்றார்.

தமது அறையில் மல்லிகாவைச் சௌகரியமாக உட்காரச் செய்துவிட்டு, மணியைத் தட்டி, ஏன் என்று கேட்ட பையனிடம் மணிசேகரனைக் கூப்பிட்டு வரும்படி சொன்னார்.

அவன் வந்ததும் "மல்லிகாவுக்கு உடம்பு சரியாகி விட்டது, மணி! இட்டமிட்டபடியே நாம் அடுத்த மாதம் இரண்டாந் தேதி இலங்கைக்குப் புறப்படலாம் என்று டாக்டர் நடராஜன் சொல்லி விட்டான். நாம் கிளம்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் சீக்கிரமாகக் கவனி" என்றார்.

"கவனிக்கிறேன். ஆனால் 'நாம்' என்று குறிப்பிடுகிறீர்களே? நான் உங்களுடன் வருவதாக இதுவரையில் சொல்லவே இல்லையே?" என்றான் மணி.

"இதுவரையில் சொல்லா விட்டால் என்ன? இப்போது சொல்கிறேனே, தெரிய வில்லையா?" என்று எரிந்து விழுந்தார் சுகுமாரன்.

மல்லிகாவையும் வைத்துக் கொண்டு அவர் அப்படிப் பேசியது மணிக்குப் பிடிக்கவில்லை. சுடச்சுடப் பதில் சொல்லத் தோன்றியது. சுகுமாரன் செய்த அதே தவறைத் தானும் செய்யக் கூடாது என்று உதட்டைக் கடித்துக் கொண்டு வார்த்தைகளை விழுங்கினான்.

அதை யெல்லாம் உணர்ந்ததால் தானோ என்னவோ மல்லிகா பேசினாள்:

"ஒன்றுமில்லாததற்கு ஏன் அப்பா இப்படி எரிந்து விழுகிறீர்கள்? மணி வரப் போகிறார் என்று எனக்குக் கூடத் தெரியாதே? அன்று வீட்டுக்கு அழைத்து வந்தீர்களே அந்தப் பயில்வான்..."

"மல்லிகா! உனக்கு ஒன்றும் தெரியாது. கொஞ்சம் பேசாமல் இரு" என்று அவளிடமும் கடுமையாகப் பேசினார் சுகுமாரன். அவளை வைத்துக் கொண்டு மணியிடம் இந்தப் பேச்சை ஆரம்பித்ததே தவறோ என்று தோன்றியது அவருக்கு. 'சரி' என்று தலையை ஆட்டி விட்டுப் போகாமல் சந்தேகங்களைக் கிளப்பி விட்டுக் கொண்டிருப்பான் என்று அவர் கண்டாரா?

"இப்போது காது கொடுத்துக் கேட்டுச் சரியாகப் புரிந்து கொள், அப்பனே. மல்லிகா, நீ, நான் ஆகிய மூவரும் இலங்கை போகிறோம். அதற்குத் தேவையான பாஸ்போர்ட்டுகள், விமான டிக்கெட்டுகளுக்கு ஏற்பாடு செய்."

"எல்லா ஏற்பாடுகளையும் செய்து விடுகிறேன், ஸார்! ஆனால்..."

"ஆனால்! ஆனால்! ஆனால்! எப்போது எதைச் சொன்னாலும் ஒரு ஆனால் போட்டுப் பிராணனை எடுக்கிறாயே? பதில் பேசாமல் சொன்னதைச் செய்து விட்டுப் போயேன்!" என்று பொறுமை இழந்து இரைந்து கத்தினார் சுகுமாரன்.

மணி கட்டைவிரல் நகத்தால் உள்ளங்கையை அழுத்திக் கிள்ளிக் கொண்டான். அவன் கோபத்தை அடக்கிக் கொள்ளும் விதங்களில் இதுவும் ஒன்று.



சுகுமாரனிடம் வேலைக்கு வந்த பிறகு இம் மாதிரியான சந்தர்ப்பங்கள் அவனுக்கு அடிக்கடி நேர்ந்ததுண்டு. எப்போது அவர் சீறுவார் என்று சொல்லவே முடியாது. குதூகலமாகப் பேசுவார்; சிரிப்பார்; திடீரென்று பாய்வார். மறுமொழி பேசாமல் சொன்னபடி செய்து விட்டால் சுமுகமாகப் போய்விடும் என்றும் கூற முடியாது. 'நான்தான் அப்படிச் சொன்னேன் என்றால் உன்னுடைய மூளை எங்கே போயிற்று?' என்று கேட்பார். இன்னும் கொஞ்ச நாட்கள் இவரிடம் இருந்தால் நரம்புத் தளர்ச்சியே வந்து விடுமோ என்றுகூடப் பயந்திருக்கிறான் மணி.

"இந்தச் சமயத்தில் நான் உங்களுடன் வருவது அவ்வளவு சரியில்லை என்று நினைக்கிறேன். அதனால் ஏற்படக் கூடிய அனர்த்தங்களுக்கு நான் பொறுப்பாளியல்ல" என்று தான் கூற வந்ததை ஒருவாறு சொல்லி முடித்தான்.

சுருங்கிய நெற்றியுடனும் நெளிந்த புருவங்களுடனும் அவனைப் பார்த்தார் சுகுமாரன்.

"அனர்த்தமா?"

"ஸ்டுடியோ தொழிலாளிகளைக் குறிப்பிடுகிறேன். 'அவர்கள் ஏற்கெனவே குமுறிக் கொண்டிருக்கிறார்கள். யூனியனில் அவர்கள் தலைவன் என்ற முறையிலே ஓரளவுக்கு அவர்களைச் சமாதானப்படுத்தி அடக்கி வைத்திருக்கிறேன். வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த போது கோரிக்கைகளை ஓரளவுக்கு மறந்திருந்தார்கள். இப்போது மல்லிகாவுக்கு உடம்பு சரியில்லை என்றதும் வேலையெல்லாம் நின்று விட்டது. உடலுக்கு வேலையில்லையானால் மூளை வேலை செய்கிறது. குறைகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்தச் சமயத்தில் நானும் இலங்கைக்கு வந்தால் ஏதோ சூழ்ச்சி நடப்பதாக எண்ணுவார்கள். உங்கள் வலையில் நான் விழுந்து விட்டதாக நினைப்பார்கள். நிலைமை மோசமாகும்!"

"தொழிலாளர்கள்! யூனியன்! கோரிக்கைகள், குறைகள்—இவை தவிர உனக்கு வேறு எண்ணமே கிடையாதா?"

"உண்மைதான். இரவு பகலாக எனக்கு வேறு நினைவே கிடையாது. அதற்குக் கார



ணம்" எனக்கு ஆதரவு" காட்டி வந்துள்ள உங்கள்மீது எனக்கு உள்ள அபிமானம். அசம்பாவிதமாக எதுவும் நடந்துவிடக் கூடாதே என்ற கவலை'' என்ருன் மணிசேகரன்.

''என்பேரில் உள்ள அபிமானத்திஞல் தான் தொழிலாளர்களின் தலைவனுகி எனக்கு எதிராக வேலை செய்கிருயா?''

''இடையவே கிடையாது. யூனியன் தலைவனுனதின் மூலம் உங்களுக்குப் பேருதவி புரிந்திருக்கிறேன். உண்மையில் தொழிலாளர்களின் நலனுக்கு எதிராக வேலை ''செய்கிறேனே என்று கூடச் சில சமயங்களில் எனக்கே சந்தேகம் ஏற்படுகிறது. என்னைத் தவிர வேறு யாராவது இந்தப் பதவியை மேற்கொண்டிருந்தால் இன்று இந்த ஸ்டுடியோவே நடக்காது.''

''மூடி விட்டுப் போகிறேன்.''

''அதனுல் யாருக்கு என்ன நன்மை? தொழிலாளர்கள் கண்களை மூடிக் கொண்டு காரியங்களைச் செய்து வந்த காலம் மலையேறி விட்டது. உரிமைகளை உணர்ந்திருக்கிருர்கள். சட்டத்தைக்

கரைத்துக் குடித்திருக்கிறார்கள்; போராடத் தயங்க மாட்டார்கள்.''

''என்ன உரிமை இருக்கிறது இவர்களுக்கு? நான்கு வருஷங்களுக்கு முன்னால் நான் இந்த ஸ்டுடியோவில்தான் இருந்தேன் மணி! ஆனால் அப்போது இதன் அதிபராக 'ஏர் கண்டிஷன் ரூமில்' உட்கார்ந்திருக்கவில்லை. விட்டத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து விளக்குப் பிடித்தேன்.''

சுகுமாரன் ஒரு கரத்தை நாற்காலியில் ஊன்றிக்கொண்டு எழுந்து மற்றொரு கரத்தை மணியின் பக்கமாக நீட்டினார். ''இதோ இந்த விரல்களால் 'கிளாப்பர் பாயா'க இருந்து கட்டை தட்டியிருக்கிறேன். சோடா உடைத்திருக்கிறேன். ஸெட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்திருக்கிறேன்.

''இரவு பகலாக உழைத்து உழைத்து உடல் சோர்ந்திருக்கிறேன். அந்த உழைப்பின் பயனை இப்போது நான் அனுபவிக்கும் போது உங்களுக்குப் பொறாமை! உரிமை பேசுவீர்கள்! போராட்டம் நடத்துவீர்கள்! நடத்துங்கள்! நடத்துங்கள்! நானும் பார்க்கத்தான் போகிறேன்!''

''தொழிலாளர்கள் அதையும்தான் கேட்கிறார்கள்! 'நான்கு வருஷங்களுக்கு முன்னால் 'கிளாப்பர் பாயா'க இருந்தவர் திடீரென்று எப்படி ஸ்டுடியோ அதிபரானார்?' என்றும் கேட்கிறார்கள்.''

சுகுமாரன் தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டு எழுந்து வந்தார். நிதானமாக மணியை அணுகி ஏதோ பரம ரகசியத்தைக் காதில் சொல்பவர் போல் மெல்லிய குரலில் அடித்தொண்டையிலிருந்து பேசினார். ''மணி! அது என் சொந்த விஷயம். யாராவது அதைப் பற்றிப் பேசினால் அவர்களைத் தீர்த்துக் கட்டி விடுவேன்! ஜாக்கிரதை!'' என்றார்.

மெல்லிய குரலில் சுகுமாரன் பேசிய போதிலும் அவர்களுக்கு மிக அருகிலேயே நின்றுகொண்டிருந்த மல்லிகாவின் காதுகளிலும் அது விழுந்தது. ஏற்கனவே அவளுக்கு ஏற்பட்டிருந்த பல சந்தேகங்கள் இப்போது விச்வரூபமெடுத்தன. மணிசேகரன் பதில் பேசாமல் திரும்பிப் போய்விட்டான்.

பதின்மூன்றாம் அத்தியாயம்

"என் பழைய காதலன்!"

ராஜன் நர்ஸிங் ஹோமில் நடராஜனுடைய பிரத்தியேகமான அறையில் ஒரு பக்கத்துச் சுவரில் அவன் பட்டம் பெற்றதற்கான நற்சாட்சிப் பத்திரங்கள் இரண்டு, சட்டம் போட்டு மாட்டப்பட்டிருந்தன. ஒரு பத்திரம் எம். பி. பி. எஸ். என்ற பட்டத்தையும் மற்றொன்று எப். ஆர். ஸி. எஸ். என்ற பட்டத்தையும் அவனுக்கு அளித்தன. இந்த இரண்டு பத்திரங்களையும் பார்த்துப் பார்த்துப் பல தடவைகளில் பெருமிதம் அடைந்திருக்கிறான் நடராஜன்.

சஸ்திர சிகிச்சைகள் புரிவதிலே தன் கரங்களுக்குள்ள அபாரமான திறமையை எண்ணி மகிழ்ந்திருக்கிறான். ஆனால் இதனாலெல்லாம் அவன் கர்வம் அடைந்ததில்லை. பெருமிதமும் மகிழ்ச்சியும் அவன் அடைந்திருந்த அறிவைப் பெருக்கிக் கொள்ளவே தூண்டுகோலாக இருந்து உதவின.

ஆனால் இன்று தனிமையில் அந்த நற்சாட்சிப் பத்திரங்களைப் பார்த்துக் கொண்டு, சிந்தனையில் ஈடுபட்டிருந்த அவனுக்கு அவற்றைச் சுக்கு நூறாக உடைத்தெறிந்து விட்டால் என்ன என்றே தோன்றியது.

உடலைப் பரிசோதித்து, தேவைப்படுமானால் அறுத்துக் கோளாறுகளைச் சீர்ப்படுத்தக் கூடிய அவனால் தன் உள்ளத்தைக் கூறு போட்டு ஆராய முடியவில்லை. ''இப்போதைக்கு நான் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை'' என்று ஒரே நொடியில் தீர்மானமாகச் சொல்லிவிட்டு வந்து விட்டான். அதனால் எத்தனை பேர்களுக்கு மனத்தாங்கல்? எவ்வளவு சந்தேகங்கள்?

திருமணம் நின்று போனதில் தனக்கு வருத்தமே இல்லை என்று முன்பொரு முறை விமலா சொன்னது வாஸ்தவம்தான். ஆனால் அது அப்பா ராமலிங்கம் இறந்து போனதற்காக. இப்போது காரணம் அது அல்லவே? திருமணத்தை உண்மையில் நிறுத்த விரும்பவில்லை அவன். ஆனால் மல்லிகாவை மறக்க முடியவில்லை. டாக்டராக இருந்ததால் தானே அவளைச் சந்திக்க நேர்ந்தது? சந்திக்காமலே இருந்திருக்கக் கூடாதா?

'நீங்கள் அருகில் இருக்கும்போது பொழுதுபோவதே தெரியவில்லை' என்று அவள் சொன்னாளே, அந்த வார்த்தைகளுக்கு என்ன பொருள்?

அமுதில் தோய்ந்து இனிப்புச் சொட்ட வந்த அந்தச் சொற்களை இப்போதும்



இனிய
நாதம்!



அழகிய
தோற்றம்!



மாடல் 0254

- 6 - வால்வ்
- ஆல் - வேவ்
- 4 - பாண்ட்
- ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
- ரூ. 390/- உள்ளூர் வரிகள் தனி

murphy radio

மர்பி ரேடியோ

பல ஆண்டுகளுக்கு உங்களை மகிழ்விக்கும்!

தென் இந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
முகமது இப்ராஹிம் & கோ. பிரைவேட் லிட்., சென்னை-பெங்களூர்-ஹைதராபாத்

கவைத்தான் நடராஜன். உடலை உலுப்பி எடுக்கக் கூடிய அழகு உருவம் உருவெளித் தோற்றத்தில் உருவாகியது. மல்லிகாவைச் சந்திக்கும் வாய்ப்பை அளித்த டாக்டர் பதவியை மனதார வாழ்த்தினான். இப்போதிருக்கும் சட்டத்தைப் பெயர்த்தெடுத்து விட்டு, அந்த நற்சாட்சிப் பத்திரங்களைப் பொன்னாலான சட்டங்களில் பதித்து மாட்ட வேண்டாமா?

உள்ளத்தின் உளைச்சலைத் தாங்க முடியாத நிலைக்கு வந்து கொண்டிருந்த போது டெலிபோன் மணி 'கண கண' வென்று அடித்தது.

கடமையில் போராட்டத்தை மறக்கலாம் என்று அந்தக் கருவிக்கு ஒரு கும்பிடு போட்டு நன்றி செலுத்திக் கையில் எடுத்தான்.

"டாக்டர் நடராஜன்!"

"மல்லிகா பேசுகிறேன்!"

மேஜையிலே இருந்த பென்சிலைக் கொண்டு மருந்து எழுதிக் கொடுக்கும் காகிதங்களில் கைபோனபடியெல்லாம் கிறுக்கினான் நடராஜன். இரண்டு பக்கங்களை வீணாக அடித்துவிட்டு மூன்றாவது காகிதத்துக்குப் போனபோது அவன் விரல்களின் அழுத்தம் அதிகமாகிப் பென்சிலின் முனை ஒடிந்தே விட்டது.

"ஹலோ! ஹலோ!" என்று மல்லிகாவின் குரல் மீண்டும் கேட்டது.

"என்ன விஷயம்? சொல்லுங்கள்!"

போராட்டத்தை மறக்க விரும்பியவனுக்கு அதன் உச்ச கட்டத்தில் சிக்கிக் கொண்டதாகத் தோன்றியது.

"பதிலே பேசாதிருக்கவே டெலிபோனை வைத்து விட்டீர்களாக்கும் என்று நினைத்தேன்."

"இல்லை, இல்லை. ஏதோ காரியமாக இருந்தேன். இப்போது சொல்லுங்கள்." தருணத்துக்கு ஏற்றவாறு தாராளமாகப் புளுகினான் அவன்.

"இலங்கை போவதற்கு முன்னால் ஒரு முக்கியமான விஷயம் உங்களிடம் பேச வேண்டும். எப்படி எப்போது உங்களைச் சந்திப்பது?"

"நானே அங்கு வருகிறேன். உடம்பெல்லாம் சரியாக இருக்கிறதல்லவா?"

"அதுவும் திருப்திகரமாக இல்லை தான்" என்றாள் மல்லிகா.

"சரி, இப்போதே நான் அங்கே புறப்பட்டு வருகிறேன்."

* * *

மல்லிகாவின் வீட்டை அவன் அடைந்தபோது உள்ளே இருந்து நாட்டிய இசை கேட்டது. இருதயத் துடிப்பை அதிகரித்து, ரத்தத்தைக் கொதிப்படைய வைத்து உடல் முழுவதும் விரைந்து பாயச் செய்யும் அந்த கீதத்துக்கு ஏற்பத் துரித கதியில் ஆடி கொண்டிருந்தாள் மல்லிகா.

புடவைத் தலைப்பை நன்றாக இழுத் இடையைச் சுற்றி இறுகச் செருகி கொண்டு அவள் நெளிந்து வளைந் குலுங்கி ஆடிய அந்த நடனத்தி பாவமோ, உணர்ச்சியோ, நயமோ நளினமோ இல்லை. ஒரே வேகம்தான்.

நாட்டிய சங்கீதத்தை வெளிப்படு திய 'கிராமபோன்' அருகே சிறு சரஸ்வதி உட்கார்ந்து கொண்டு, கண் கொட்டாமல் திறந்த வாய் மூடாம அக்காளின் நிருத்தியத்தைப் பார்த்து கொண்டிருந்தாள்.

நடராஜன் வந்ததையோ அல்ல கதவருகே நின்று, கொப்பளித் எழுந்து வெடித்துப் போகும் சிந்தனை குவியல்களோடு மல்லிகாவையே பார் துக் கொண்டிருந்ததையோ அந்த இ வருமே கவனிக்கவில்லை.

'உடல் நிலை திருப்திகரமாக இல் யாம்! அதைச் சீர்ப்படுத்தத்தான் இந் நடனமோ? கரும்பு தின்ன வா என் சொன்னால் மாட்டேன் என்று கூ விடுவேனா? எதற்காக என்னிடம் பொ சொல்ல வேண்டும்? இந்த நடனம்தா எதற்கு? என்னைக் காணப் போகிறே என்பதற்காக ஆனந்த நடனமா அல்லது என்னை மறந்துவிட விரும்பி பேயாட்டமா?'

திடீரென்று இசை நின்று விட்டது அதன் வேகத்தோடு இழைய ஆடி கொண்டிருந்த மல்லிகா சட்டென் அது நின்றதும் துவண்டு போய் நி தடுமாறினாள். அருகே இருந்த நா காலியைக் கெட்டியாகப் பிடித்து கொண்டு கீழே விழாமல் சமாளித்து கொண்டாள்.

"இன்னும் கொஞ்ச நாட்களுக் உடம்பை அலட்டிக் கொள்ளக் கூடா என்று சொல்லியிருந்தேன். நீ என்னட வென்றால் நாட்டியம் ஆடிக் கொண் டிருக்கிறாய்!" என்று சொல்லிச் சூ கொட்டினான் நடராஜன்.

ஆடியதால் ஏற்பட்ட அயற்சி நீங்கா ததால் விம்மச் செய்த பெருமூச்சு களினிடையே அவளால் பேசவே முடி வில்லை. நெற்றியிலே மணிமணியா அரும்பியிருந்த வியர்வைத் துளிகள் ஒன்றோடொன்று சேர்ந்து கொண் சிறிய சிறிய கோடுகளாகக் கன்னத்தில் வழிந்தோடின. மெள்ளத் தன்னைச் சுதா ரித்துக் கொண்டு நாற்காலியில் தொ பென்று விழுந்தாள் அவள். நாட்டியத் தினால் அலைப்புண்டு ஈரத்தினால் நெற்றி யோடு ஒட்டியிருந்த கேசத்தை உள்ளங் கையால் அழுத்தி விலக்கிக் கொண்டே



எங்கு பார்த்தாலும் வேலைநிறுத்தம் நடந்துவரும் இந்த நாளில் 'வேலைநிறுத்தம் வேண்டாம்' என்ற கொள்கையை வற்புறுத்தும் உயர்ந்த நாடகமான 'மலர்ந்த வாழ்வு' என்ற நாடகம் சென்ற வாரம் சென்னை செயின்ட்மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்றது. கலைவளர் நாடக மன்றத்தாரின் இந்நாடகத்துக்குத் தலைமைதாங்கிய திரு வி. ராஜேந்திரன் அவர்களும், சிறப்புச் சொற்பொழிவாளர் மேஜர் திரு ஆர். சபேசன் அவர்களும் நாடகத்தின் சிறந்த கருத்தையும், நாடக ஆசிரியர் திரு சே. வேலன் அவர்களையும், நாடகத்தில் நடித்த நடிகர்களையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள். நாடகத்தில் ஜிப்ஸி நாட்டியமாடிய குமாரி சசிக்கு மேஜர் சபேசன் ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிசளித்துப் பாராட்டினார். படத்தில் கலைவளர் நாடகமன்றநடிகர்களையும்நிர்வாகிகளையும்காணலாம்.

ஷூட்டிங்குக்கு ஒத்திகை பார்த்துக் காண்கிறேன்'' என்றான்.

''இன்னும் இரண்டு மாதங்களுக்கு அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி யிருந்தேனே? சுகுமாரனைக் கூப்பிட்டுக் கோபித்துக் கொள்கிறேன்'' என்றான் நடராஜன்.

''அவர் வேண்டாம் என்றுதான் சொன்னார். நான்தான் 'பரவாயில்லை. இந்த 'டான்ஸ் ஸீனை' இலங்கை போவதற்கு முன்னால் முடித்து விடுங்கள்' என்றேன். உடம்புதான் சரியாகி விட்டதே. இனிமேல் நடித்தால் என்ன? ஆடினால்தான் என்ன?''

''டெலிபோனில் உடல் நிலை திருப்திகரமாக இல்லை என்று சொன்னாயே?''

''நீங்கள் வராமல் இருந்து விடுவீர்களோ என்று அப்படிச் சொன்னேன்.'' மல்லிகா கலகலவென்று சிரித்தாள்.

ஜலதரங்கத்தின் இனிய ஓசையாக நடராஜன் காதில் விழுந்தது அது. என்ன துணிச்சல் இவளுக்கு? கூசாமல் ஒரு பொய்யைச் சொல்லி அல்லவா என்னை வரவழைத்திருக்கிறாள்?'

''உடம்புக்குத்தான் ஒன்றுமில்லை என்றாகிவிட்டது. ஏதோ முக்கிய விஷயம் பேச வேண்டும் என்றாயே? அதுவாவது இருக்கிறதா? இல்லை, அதுவும் வெறும் கற்பனைதானா?''

மறுபடியும் கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்தாள் மல்லிகா. ''அடேயப்பா! அதற்குள் என்ன கோபம்? மூக்குக்கு மேலே இருக்கிறதா? அல்லது மூக்குக்கு மேலேயே போய் விட்டதா?''

நடராஜனும் சேர்ந்து சிரித்தான். அர்த்தமற்ற சிரிப்பு அடங்கிய பிறகு,

''என்னுடைய நடனத்தைப் பார்க்கத்தான் கூப்பிட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்'' என்றாள் மல்லிகா.

''பார்த்து விட்டேன்.''

''எப்படி இருந்தது?''

''நடனம் நடனமாக இருந்தால் எனக்குப் பிடிக்கும். கூத்தாக இருந்தால் பிடிக்கவே பிடிக்காது.''

''நடனத்துக்கு உங்களை விளக்கம் கேட்கவில்லை. நான் ஆடியதைப் பற்றிக் கேட்கிறேன்.''

''நீ ஆடியது கூத்துத்தான்.''

மல்லிகா கால்களைக் கோபத்தோடு உதைத்துக் கொண்டாள். அதில் கட்டப்பட்டிருந்த சதங்கைகள் 'கலீர் கலீர்' என்று ஒலித்தன. கையில் கண்ணாடி வளையல்கள் குலுங்கின. அதரங்கள் வெறுப்பில் குவிந்தன.

''உங்கள் அபிப்பிராயத்தை யார் கேட்டார்கள்?'' என்றாள்.

''நீதான் கேட்டாய் சற்று முன்னால்.''

''கேட்டது தப்புத்தான் போங்கள்.''

''சரி, போய் வருகிறேன்.''

''இல்லை, இல்லை, சற்று இருங்கள். நான் உங்களிடம் பேச விரும்பியதைச் சொல்லி விடுகிறேன். அப்புறம் நீங்கள் தாராளமாகப் போகலாம்.''

நடராஜன் திரும்பினான். ''சொல்லு, மல்லிகா!'' என்று மிகுந்த ஆவலுடன் கேட்டான்.

மல்லிகா ஒரு நிமிஷம் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். பின்னர், ''எனக்கு நல்ல நடனங்கள்கூட ஆடத் தெரியும்'' என்று கூறினாள்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். விஷயத்தைச் சொல்லு.''

மல்லிகா அழகு காட்டி முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டாள். ''அடடா! உங்களுக்கு என்ன அவசரம்? என்ன அவசரம்?''

''நேரத்தைப் பொன்னாக மதிப்பவன் நான்.''

''ஓ அப்படியா! உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்கிவிட்ட என்னை மன்னித்து விடுங்கள்'' என்று மல்லிகா திரைப்படப் பாணியிலே பேசினாள். பின்னர் விருட்டென எழுந்து நின்று, ''உங்கள் அத்தை மகளைக் காதலிப்பதையும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதையும் ஏன் என்னிடம் நீங்கள் முன்பேசொல்லவில்லை?'' என்று கேட்டாள்.

நடராஜன் தடுமாறிப் போனான். இந்தத் திடீர்த் தாக்குதலை அவன் எதிர்பார்க்கவே யில்லை. ''அதற்குச் சந்தர்ப்பம் நேரவில்லை. அதனால் என்ன?''

''அதனால் என்னவா? அந்த அசட்டுப் பெண் நான் உங்களைக் காதலிப்பதாகவும் நீங்கள் என்னிடம் மயங்கி அவளை உதாசீனம் செய்வதாகவும் நினைக்கிறாள், பாவம்! நெஞ்சு வெடிக்க விம்முகிறாள்.''

''யார் இதையெல்லாம் உன்னிடம் வந்து சொன்னது?''

''நேற்று இங்கு வந்திருந்த போது அவளாகவேதான் சொன்னாள். நான் சொன்னதைப் போல் தெளிவாகப் பேசவில்லை. ஆனால் நான் கலபமாகப் புரிந்து கொண்டு விட்டேன்.''

''விமலா இங்கே வந்திருந்தாளா?''

வேப்பங்காயைக் கடித்துச் சுவைப்பது போல் இருந்தது நடராஜனுக்கு. 'இவள் விரித்த வலையிலே நான் சிக்கி விடுவதாம். அவள் வந்து விடுவிக்கும்படி வெட்கத்தை விட்டுக் கெஞ்சுவதாம். கற்பனையைச் சிறகடித்துப் பறக்கவிட்டு அழிக்க முடியாத அவமானத்தை அல்லவோ தேடித் தந்து விட்டாள்? விமலாவை மன்னிக்கவே முடியாது!'

இதயத்தின் ஒரு மூலையிலே விஷயத்தை விவரமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை கிளர்ந்தது. ''அதற்கு நீ என்ன பதில் கூறினாய்?''

'''நான் நடித்த படத்தைப் பார்த்தாயா?' என்று கேட்டேன். 'இல்லை' என்றாள். அதிலும் இதே போல் தான் இளம் காதலர்களின் வாழ்க்கையில் புகுந்து படாதபாடு படுத்துகிறேன். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். படத்தில் தோல்வி அடைந்தேன். இங்கே வெற்றி பெறுவேன்!' என்றேன்.''

''எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?''

''உங்களுக்கே நான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை இல்லையா?''

''தெரியவில்லை, மல்லிகா! எனக்கு ஒன்றுமே புரியவும் இல்லை.''

மல்லிகா சிரித்துக் கொண்டே, ''அந்தப் பெண்ணைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. போய் ஆறுதல் சொல்லுங்கள்'' என்றாள்.

விளையாட்டுக்கு ஒரு மாதிரி பேசிய அவளுடைய உண்மையான உள்ளக் கருத்து தெரியாமல் தவித்தான் நடராஜன். என்னைக் கைப்பொம்மையாக்கி விளையாடுகிறாளா? அல்லது சித்தத்தைக் கலக்கிப் பைத்தியமாக்குகிறாளா?

விடைபெற்றுக் கொண்டு அவன் புறப்பட்ட சமயம், ''இன்னொரு விஷயம் கேட்க மறந்தே போய் விட்டேனே என்றாவது ஒரு நாள் நர்ஸிங்ஹோமில் நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது என்னைப் பார்க்க யாராவது வந்தார்களா?'' என்று கேட்டாள் மல்லிகா.

மல்லிகா தூங்கும்போது அவளைப் பார்த்தே ஆகவேண்டும் என்று சொல்லிக் கொண்டு பிடிவாதமாக அவள் அறையில் நுழைந்த ஒருவனின் ஞாபகம் வந்தது நடராஜனுக்கு. தர்வானைக் கூப்பிட்டுப் பலாத்காரமாக அவனை இழுத்துச் சென்று வெளியேவிட நேர்ந்தது. அதை இப்போது மல்லிகாவிடம் சொன்னான்.

''தன் பெயரை அவர் சொன்னாரா?''

''ஆமாம். சங்கர் என்று சொன்னதாக ஞாபகம்.''

''சங்கரா? சேகரா?''

''சேகர்தான். சேகர்தான்.''


''எனக்கு ஒரு உதவி செய்வீர்களா? நான் இலங்கை போயிருக்கும் போது அவர் மறுபடியும் உங்களிடம் வந்து என்னைப் பற்றிக் கேட்டால் அவரைச் சந்திக்க ஆவலாக இருக்கிறேன் என்று சொல்வீர்களா?''

''கண்டிப்பாகச் சொல்கிறேன். ஆனால் தூங்கும்போது உன்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் முரட்டுத்தனமாக நடந்துகொண்ட அவன் யார்?''

''என்னுடைய பழைய காதலன்!'' என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தாள் மல்லிகா.

தன்னைப் பைத்தியமாக அடிக்கிறாளா? அல்லது அவளுக்கே சித்த சுவாதீனம் இல்லாமல் போய் விட்டதா? ஒருவேளை அப்படி நடிக்கிறாளோ? அதற்கு மேல் அங்கு நின்றால் நிச்சயமாகப் பித்தம் தலைக்கேறி விடும் என்று ஓட்டமும் நடையுமாகச் சென்று விட்டான் நடராஜன். காரைக் கிளப்பும் வரை மல்லிகாவின் சிரிப்பொலி கேட்டுக் கொண்டே இருந்தது. (தொடரும்)


டெக் டூத்பிரஷ் வாங்க
3 தகுந்த காரணங்கள்
1 மிருதுவான நீட்டன் முடிகள்
ஈறுகளை புண்ணாக்காமல் பற்களை சுத்தம் செய்கின்றன
2 தேர்ந்தெடுக்க 2 வித தலைப்பாகம்
'ஓவல்' மற்றும் 'ஷார்ட் ஓவல்' வடிவங்களில் கிடைக்கும்
3 கைக்கு அடக்கமான பிடி
விஞ்ஞான முறைப்படி பிரத்தியேக வடிவம் கொண்டது
நினைவிலிருக்கட்டும்:
இந்த மூன்று விசேஷ அம்சங்கள் பொருந்தியது புது மாதிரி டெக் ஒன்றே!
Tek
Johnson & Johnson OF INDIA PRIVATE LTD.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா
பிரைவேட் லிமிடெட்
TLK 6766



76. நீரிழிவு (3)

நீரிழிவு ரோகத்தில் பயன்படக் கூடியதும் நாமே செய்து கொள்ளச் சாத்தியமானதுமான சில மருந்துகளையும் தெரிவித்து விடுகிறேன்.

''அப்படியா? டயாபிடீஸுக்கா? நாட்டு வைத்தியத்தில் இதற்கு ஏதாவது ஒரு 'ஸ்பெசிபிக்' (கைகண்ட) மருந்து இருக்கிறதோ?'' என்கிறீர்களா?

'ஸ்பெஸிபிக்' என்றால் என்ன அர்த்தம் என்று முதலில் தெரிவித்தால் பெரிய உபகாரமாயிருக்கும்.

'ஸ்பெஸிபிக்' என்றால் ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு ஒரு குறிப்பிட்ட மருந்து என்ற நிச்சயம். இம்மருந்து நிச்சயமாக அந்த வியாதியைக் குணப்படுத்தும். சந்தேகமே இல்லை. அந்த வியாதிக்கு இந்த ஒரு மருந்தைத் தவிர வேறு மருந்து கிடையாது. அல்லது இதைப் போல நிச்சய பலனைத் தரக்கூடிய வேறு மருந்து கிடையாது. அப்படிப்பட்ட மருந்துக்குத்தான் 'ஸ்பெஸிபிக்' என்று சொல்வது.''

அப்படியா! சந்தோஷம். நாட்டு வைத்தியம் கிடக்கட்டும். மேநாட்டு வைத்தியத்தில் இவ்வித 'ஸ்பெஸிபிக்' மருந்து இருக்கிறதா?

''ஏன் இல்லை? இன்ஸுலின் என்ற மருந்து இருக்கிறது. இன்னும் முன்னேறிவரும் விஞ்ஞானத்தின் விளைவாக, ஆராய்ச்சியின் பலனாகச் சமீபத்தில் நாடிலான் முதலான சில புதிய மருந்துகளும் வந்துள்ளன. இப்படி....''

'ஸ்பெஸிபிக்' என்பதற்கு நீங்கள் தெரிவித்த விளக்கப்படி ஏதாவது ஒன்றுதானே இருக்க முடியும்? அல்லது இவற்றுள் ஒன்று 'ஸ்பெஸிபிக்'காக இருக்குமானால் மற்றவை ஆராய்ச்சி மூலம் தேடவேண்டிய அவசியமே ஏற்பட்டிராதே! மேலும் இந்த ஆராய்ச்சிகளோ......! தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றனவே. ஆகவே ஒரு குறிப்பிட்ட மருந்து இக் குறிப்பிட்ட வியாதிக்கு 'ஸ்பெஸிபிக்' என்று இது வரையில் நிச்சயிக்கப்படவில்லை.

'அதைப் பற்றி விமர்சனம் செய்ய உமக்கு என்ன உரிமை?' என்று கேட்கிறீர்களா? மன்னிக்கவும். அவ்வித உரிமை உங்களுடைய ஏகபோகச் சொத்து என்பதாக நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள் போலும்! நாட்டு வைத்தியத்தைப் பற்றிப் பேசமட்டும் எல்லாருக்கும் உரிமை அளித்தாக வேணும்! இதுதானே உமது கட்சி?

ஐயா! டயாபிடீஸுக்கு நாட்டு வைத்தியத்தில் ஏதாவது 'ஸ்பெஸிபிக்' இருக்கிறதா என்ற கேள்விக்குப் போதுமான பதிலைச் சொல்ல முடியுமா? முடியாதா? ஏன் குறைப்பட்டுக் கொள்கிறீர்கள்? உங்களுடைய கேள்விக்குப் போதுமான பதிலையும் அளிக்கிறேன்.

இரண்டு பேருடைய சரீர தத்துவம் ஒரு மாதிரி இருக்கவே முடியாது. எட்டளவிலாவது இதை ஒப்புக்கொண்டுதானாகவேண்டும். ஆகவே ஒரே வியாதி இருவருக்கு வருமானால் ஒரே மருந்து முழுதும் சரிக்கட்டப் போதாது. மிச மிக நுட்பமான வகையிலாவது வித்தியாசம் இருந்துதானாகவேணுமென்பது மேற்சொன்னவிதமே எட்டளவிலாவது ஒப்புக் கொண்டே தீரவேண்டிய விஷயமாகும். ஆகவே சரீர தத்துவத்தில் ஒருவருக்கொருவர் மிக மிக நுட்பமான வகையிலாவது வேறுபாடு உண்டு என்பதால்...

ஒரே வியாதி இரண்டு பேருக்கு வருமானால் மருந்து — ஆகாரம் இவற்றிலும் மிக மிக நுட்பமான வித்தியாசமாவது இருந்துதானாக வேணும்.

அப்படியானால் 'ஸ்பெஸிபிக்' என்று சொல்லக்கூடிய மருந்து ஒரு வியாதிக்குமே இருக்க முடியாதென்றாகிறது!

உங்களுக்கு இது தெளிவானால் அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். என்னைப் பற்றியவரையில் நாட்டு வைத்தியத்தில் 'ஸ்பெஸிபிக்' என்ற சொல்லே கிடையாது. ஆகவே...

ஆகவே, நாங்கள் நாட்டு வைத்தியத்தில் ஒரே வியாதிக்குப் பல மருந்துகளைத் தெரிவிக்கிறோம். பல அனுபானங்களை (துணை மருந்துகளை)த் தெரிவிக்கிறோம். ஆகார பேதங்களையும் தெரிவிக்கிறோம். அவரவருடைய சரீரக் கூறு அல்லது இயல்பு அல்லது பிரகிருதியை உத்தேசித்தும், அவரவருடைய வயது சரீர பலம், ஆகாராதிகளில் உள்ள பழக்கம், அவரவர் வாழும் பிரதேசத்தின் நிலைமை, இன்னும் பருவங்களின் மாற்றம் முதலிய பல விஷயங்களையும் உத்தேசித்து ஒரு வியாதிக்குச் சொன்ன பல மருந்துகளில் எந்த மருந்து என்ன அனுபானத்துடனும்,

எவ்வித பத்திய ஆகாரங்களுடனும் ஒரு குறிப்பிட்ட நோயாளிக்குப் பலன் தரத் தக்கதாகும் என்று நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

ஓஹோ! அப்படியா? சரி! சரி! நீரிழிவுக்கு நாட்டு வைத்தியத்தில் தெரிவித்துள்ள 'பல' மருந்துகளில் நாமே செய்து கொள்ளக்கூடிய சிலவற்றையாவது தெரிவியுங்களேன்!

1 கொம்பு பாகற்காய் சூர்ணம், 2 நெல்லிக் கனியின் ரஸத்தில் தேனும் மஞ்சள் பொடியும் சேர்த்துக் கலக்கிக் குடித்தல், 3 அல்லது நெல்லிக்காயின் சூர்ணத்துடன் மஞ்சளின் சூர்ணத்தையும் சேர்த்துத் தேனில் கலக்கிக் குடித்தல், 4 தார்வி தேவதார்வாதி கஷாயம் 5 சித்ரசாதி கஷாயம், 6 குடூசியாதி கஷாயம் 7 சிறு குறிஞ்சான் என்றும் சர்க்கரைக் கொல்லி என்றும் சொல்லப்படும் பச்சிலையின் சூர்ணம் என்று இப்படிப் பல மருந்துகளை இந்நீரிழிவில் உபயோகித்துப் பலன் பெறலாமென்ற தகவலைப் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளேன். 8 திருச்சி நேயரின் கடிதத்திலிருந்து கருவக்காய் என்னும் கருவேலங்காயின் சூர்ணமும் நீரிழிவு ரோகத்தில் பயனுள்ளதாகலாம் என ஒரு ஹேஷ்யம் ஏற்பட்டதையும் நேயர்களுக்குத் தெரிவித்துள்ளேன். அவ்வித குணம் இக்காயின் சூர்ணத்துக்கு இருக்கிறதா எனத் தெளிய ஒரு நண்பர் ஆராய்ச்சி செய்தும் வருகிறார் என்ற தகவலையும் நேயர்களுக்குத் தெரிவித்துள்ளேன்.


9 கோமூத்ர சிலாஜது என்ற மருந்து நீரிழிவில் மிகவும் நல்ல பலனையளிப்பதாகும். வேறு மருந்துகளைக் கொடுத்து வீண் பிரயாசைப்படாமல் முதலில் இதையே நீரிழிவில் உபயோகிப்பது விரும்பத் தக்கது என்றும் மற்ற மருந்துகளைக் கொடுப்பது பலனில்லை என்று சலிப்புற்ற நேரத்திலும் கோமூத்ர சிலாஜது கட்டாயமாகப் பலனளிக்கத் தக்கது. இவ்விதம் நம்பி ஏற்க வேண்டுமென்று பொருள்படும் வகையில் இம்மருந்தைப் பற்றிச் சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.

மலைகளின் பெரும் பாறைகளிலுள்ள தாதுப் பொருள்கள் கோடை காலத்தின் உஷ்ணத்தினால் உருகவும், அப்பாறைகள் வெடிக்க அவ்விடமிருந்து ஒரு வகைப் பிசினி போல் இத்தாதுப் பொருள்கள் ஒழுகவும் நேரிடுகிறது. உண்டாகும் போதே இதில் ஒரு வகை கோமூத்திரத்தின் நாற்றம் இருக்கிறது. இதை எடுத்து வந்து தண்ணீரிலோ, திரிபலைக் கஷாயத்திலோ கரைத்து. கரையாத கல் துண்டுகள், மணல் மண், குச்சி, புல் முதலிய அசுத்தங்களை வடிகட்டிக் களைந்து திரவத்தை வெய்யிலில் உலர்த்தி எடுத்துக்கொள்வர். இது தான் சுத்தி செய்யப்பட்ட கோமூத்ர சிலாஜது. இதை இப்படியே வேறு யாதொரு பாகமும் செய்யாமல் தனியாகவும், வேறு மருந்துகளுடன் சேர்த்தும் உபயோகிப்பது வழக்கம்.

கோமூத்ரசிலாஜது கூட்டிய சதாவரீ [தண்ணீர் விட்டான் கிழங்கு] ரஸாயனம் என்று அடிக்கடி தெரிவித்து வரும் லேஹியத்தில் இம்மருந்து சேர்கிறது. சுத்தி செய்த கோமூத்ர சிலாஜது கடைகளில் கிடைக்கிறது.

இதில் ஒரு விசேஷமுண்டு. இதிலுள்ள கோமூத்திரத்தின் நாற்றம் என்ன செய்தாலும் நீங்காததாய், இத்துடன் ஒன்றி நிற்பது இம்மருந்துக்குள்ள தனிச் சிறப்பு. இந்த நாற்றம் அமோனியா என்னும் பொருளுக்கு இயல்பானது. இந்த அமோனியாவைத் தனித்துத் திரட்ட இயலாது. கந்தகம் போன்ற வேறு பொருள்களுடன் கூடிய அமோனியம் ஸல்பேட் என்பது போன்ற பொருள்களாகத்தான் இது கிடைக்கும். உஷ்ணம் தட்டினால் இதிலுள்ள அமோனியா தனிப்பட்டுப் பிரிந்து காற்றில் கலந்து விடும். சிறு நீர் உலரும் போது அதிலிருந்து பிரிக்கப் பட்டுக் காற்றில் கலக்கும் அமோனியாவின் நாற்றத்தைத் தான் நாம் சாதாரண பாஷையில் மூத்திர நாற்றம் என்கிறோம். ஆனால், என்ன செய்தாலும் விட்டுப் பிரியாத நிலையில் ஒன்றியதாக இந்த அமோனியா கோமூத்ர சிலாஜதுவில் உள்ளது. (Stable) ஆராய்ச்சியில் ஆற்றலுள்ளவர் கவனிக்கத் தக்கது. சமீப காலத்தில் மருத்துவத் துறையில் ஆராய்ச்சி செய்தவர் நீரிழிவில் பயன் தரும் 'லேடஸ்ட்' மருந்துகளென்று தெரிவித்துள்ளவற்றில் இந்த அமோனியா சம்பந்தப்பட்ட பொருள்கள் உள்ளதைக் காண்கிறோம். ஸ்திரமாக ஒன்றியுள்ள அமோனியாவுடன் கூடிய கோமூத்ரசிலாஜது இந் நீரிழிவில் அதிகரித்த பலனைத் தரக்கூடுமென்று இதிலிருந்து ஊகிக்க இடமுண்டு. ஆராய்ச்சியில் ஆற்றலுள்ளவர் இச்செய்தியை ஏற்றுத் தமது ஆராய்ச்சிகளை மேலும் தொடர்ந்து நடத்திக் கடைசியில் தெளியும் முடிவைத் தெரிவிப்பாரானால் உலகத்துக்குச் செய்யும் உதவியாகும். அதுவரையில் நாங்கள் இத்தனை காலமாக எம்முறையில் இக் கோமூத்ர சிலாஜதுவை நீரிழிவு ரோகத்தில் உபயோகித்து வந்தோமோ, அப்படியே பின்பற்றி வருவோம். **(தொடரும்)**





மோட்டார் சைக்கிளில் போகும் மனிதர்

ஆண்மையும் வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் கவருகிறார். எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக் கவருகிறார். கம்பீரத்துடன் எல்லோரையும் தாண்டி முன்னேறுகிறார். இவர் போன்றவர்க்கே வெற்றி தயாராகக் காத்திருக்கிறது.



ராயல் என்பீல்ட்

பகுதியாக தயாரிப்பவர்கள்:
தி என்பீல்ட் இந்தியா லிமிடெட்,
மதராஸ்-19

பூரண விற்பனையாளர்கள்:
சுந்தரம் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
மதராஸ் - பெங்களூர் - டில்லி

[illegible] அமெரிக்கன் ஆட்டோமொபைல்ஸ், திருநெல்வேலி ● மரைக்கார் மோட்டார்ஸ் லிட். திருவனந்தபுரம், எர்ணாகுளம், கோட்டயம், திருச்சூர், ஆல்வாய், ஆலப்புழை, [illegible], பெருமாவூர் ● அசோசியேடட் டிரேடர்ஸ் (டெக்கான்) [illegible] ரோடு செகந்தராபாத் ● கோவண்டர் அண்டு கோ. பிரைவேட் லிட்., கோயமுத்தூர் ● ராஜா மோட்டார்ஸ், திருச்சி ● [illegible], மதுரை ● தி இங்கிலீஷ் சைக்கிள் அண்டு மோட்டார் இம்போர்ட்டிங் கோ. பிரைவேட் லிட்., கும்பகோணம் ● பி. எஸ். அனுமந்த ராவ், சேலம் ● வி. சுப்ராய நாயக், மங்களூர் ● ஸ்ரீ வேல் மோட்டார்ஸ், திருவனந்தபுரம் ● ராவோ (மதராஸ்) லிட்., கோழிக்கோடு ● பத்மஜா கமர்ஷியல் கார்ப்பொரேஷன், விஜயவாடா ● ஆர். எஸ். மோட்டார்ஸ், காக்கிநாடா ● [illegible] அண்ட் சன்ஸ், பாண்டிச்சேரி ● டி. வி. கோவிந்தராவ் அண்டு பிரதர்ஸ், திருப்பத்தூர்

நன்றிக்கு உரியவன்?



கிழவி ரஹ்மீன் பச்சிளம் பாலகனின் கையைப் பிடித்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டாள். பாட்டியின் உலர்ந்து வறண்ட கரங்களிலே பேரனின் மிருதுவான விரல்கள், இலையுதிர் காலத்துப் பழுத்த இலைகளினூடே இளந்துளிரெனக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன.

ரஹ்மீனின் முதுகு கூனிக் குறுகிப் போய் இருந்தது. முகத்திலே கணக்கற்ற சுருக்கங்கள் விழுந்திருந்தன. கன்னங்களைச் சுற்றி நுணுக்கமான கோடுகள் காலதேவன் இட்டுச் சென்ற அடையாளமாகத் திகழ்ந்தன. பற்கள் போய் விட்டதனால் கன்னங்கள் ஒட்டிப் போய்ப் பொக்கை வாயைப் பெரிதாக எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன. கன்னக் கதுப்புகள் கிட்டத்தட்ட இல்லை என்ற நிலையை அடைந்து விட்டன. தாவாக்கட்டை போயிருந்த போக்கைச் சொல்லி முடியாது. கால்கள் திடம் திராணியற்று நடுங்கிக் கொண்டிருந்தன. அவள் அணிந்திருந்த ஆடையோ கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. அதன் கீழ்ப் பகுதி அழுக்கேறிச் சகதியாகக் கிடந்தது. கால்களைப் பழைய காலத்துப் பல தையல்கள் போட்ட செருப்பு அலங்கரித்தது.

சின்னஞ்சிறு பாலகனான ஹமீத் தலைகுனிந்த வண்ணம் கூடவே நடந்து கொண்டிருந்தான். அவன் குரல் தழுதழுத்துப் போயிருந்தது. கண்களில் நீர் கோத்து நின்றது. அவன் முகத்திலே பரவியிருந்த பரிதாபக் களையை அவன் உடுத்தியிருந்த கிழிந்த கந்தல் துணி அதிகமாக எடுத்துக் கொண்டிருந்தது. இல்லாமை என்னும் பேய் கோரத் தாண்டவமாடிப் பச்சிளம் பாலகனைப் படாதபாடு படுத்தி வைத்துக் கொண்டிருந்தது.

"அப்பா, குழந்தாய்! எட்டு ஒன்பது வயதுக்குள்ளேயே வேலை கிடைப்பது என்பது சாதாரண விஷயமல்ல. ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணியிருந்தால்தான் கிடைக்கும். ஆண்டவன் இந்தக் கிழவியின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து விட்டான். ஆண்டவனின் அந்த அருளுக்கு நீயும் நன்றி செலுத்து, அப்பா!" என்றாள் கிழவி.

ஹமீத் தலைகுனிந்த வண்ணமே, "சரி, பாட்டி!" என்று பதில் சொன்னான்.

"அப்புறம்...குழந்தாய்... வரப் போகிற பண்டிகை. திருவிழாவிலே நீ உனக்காக நாலு காசுக்கு விற்கும் தொப்பி ஒன்று வாங்கிக் கொள்ளு. ஆண்டவன் தான் அருள்பாலிக்க வேண்டும், திருஷ்டிப் படாமல் இருக்க. உனக்கும் வேலை என்று ஒன்று கிடைத்து நீயும் ஒரு வேலைக்காரனாகி விட்டாய் அல்லவா?" என்றாள்.

ஹமீத் முன் போலவே, "சரி, பாட்டி!" என்று பதிலளித்தான்.

"அப்புறம் இதோ பார், குழந்தாய் நீ போட்டுக் கொண்டிருக்கிறாயே, செருப்பு, இதைக் கழற்றி வைத்து விடு. ஈத், பக்ரீத் போன்ற பண்டிகையின் பொழுது மட்டும் போட்டுக் கொள்ளு. நீ சமர்த்து அல்லவா? அதனால் நம் நிலைமையை நன்கு நினைவில் வைத்துக்கொள்ளு. அப்பொழுதுதான் மற்றவர்களும் உன்னைச் சமர்த்து என்று சொல்வார்கள். சாதாரண நாட்களில் வெறுங் காலோடு நடப்பதில் தவறு இல்லை. இந்தச் செருப்பு இப்படியே இருந்தால், பண்டிகைக் காலங்களில் உபயோகப்படும். அதனால்தான் சொல்கிறேன். புரிந்து கொண்டாயா, குழந்தை?" என்றாள் பாட்டி.

குனிந்த ஹமீதின் தலை மேலும் குனிந்து விட்டது. அவன் தழுதழுத்த குரலில், "ரொம்ப சரி, பாட்டி!" என்று பழைய பல்லவியையே மீண்டும் பாடினான்.

காலை நேரம். கிழக்கு வெளுத்துப் பூமி தெரியத் தொடங்கியிருந்தது. கோழிகள் கூவி முடித்து விட்டன. மசூதிகளிலிருந்து தொழுகை மந்திரங்களும் கோவில்களிலிருந்து ஆலாட்சி மணி, சங்கு ஆகியவற்றின் ஒலிகளும் வந்து கொண்டிருந்தன.

கிராமத்துப் பெண்கள் இருவர் இருவராகவோ, அல்லது நால்வர் நால்வராகவோ பாத்திரமும் கையுமாக, திரையிட்டு முக மலரை மறைக்க முயன்றவாறு அலுவல் நிமித்தம் தெருவில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். எதிர்ப்படும் இடத்தில் பேசிக் கொள்ளவும் செய்தார்கள். ஒவ்வொருவரும் ரஹ்மீனும் அவள் பேரனும் அந்த விடியற்காலையில் எங்கேயோ அவசரம் அவசரமாகப் போய்க் கொண்டிருப்பதைக் காணவும் செய்தார்கள். ஆனால் போகிறவர்களை, 'எங்கே போகிறாய்?' என்று கேட்பது அபசகுனம் என்பதனால் வாய் திறந்து கேட்கத் தயங்கினார்கள். ஆனால் திரும்பித் திரும்பி அந்த இருவர் மீதும் தங்கள் பார்வையைச் செலுத்தியவாறே சென்றார்கள்; வீட்டுக்குள் நுழையும்பொழுதும் கூட அவர்களது பார்வை,

பீவி ரஹ்மாவையும் அவனது பேரன் ஹமீதை யும் பார்க்கத் தவறவில்லை.

பாட்டியும் பேரனும் வயல்-வழியே மெது வாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். பீவி ரஹ்மாவின் சின்னஞ்சிறு பாலகனை ஹமீ துக்கு, வேலை; வேலையில் உள்ள கடமை; எசமானர் வேலைக்காரர்களுக்குள்ள தொடர்பு, கடவுள் தன் அடியார்களிடம் காட்டும் அருட்பார்வை முதலியவற்றைப் பற்றிச் சின்னஞ்சிறு வாக்கியங்களில் புரியும் படியாகக் கூறிப் புரிய வைத்தாள். கூற வேண்டியதை யெல்லாம் கூறி முடித்த பின், வாய்மூடி மௌனமாகி விட்டாள். ஹமீத் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டான். பீவி கேட் கும் ஒவ்வொரு கேள்விக் கும், 'சரி பாட்டி! ரொம்ப சரி, பாட்டி!' என்ற பதில் களையே சொல்லி வந்தான்.

அத்தனை உபதேச மொழி களையும் கேட்டு முடித்தபின் ஹமீத் தலை நிமிர்த்திப் போகும் பாதையைப் பார்த் தான். அப்பப்பா! அந்தப் பாதைதான் எதிர்த்தாற் போல் எப்படி நீண்டுவிரிந்து கிடந்தது! சேர வேண்டிய இடம் சமீபித்து விட்டது என்பதற்கான அறிகுறியே பல மைல்களுக்கு அப்பா லும் காணவில்லை.

சூரியன் தன் பொன்னிறப் போர்வைக்குள்ளிருந்து எட் டிப் பார்க்கத் தொடங்கி னான். கிராமத்துக் குடியான வர்கள் மாடுகளை ஓட்டிக் கொண்டு, ஏர் கலப்பைகளைத் தோளில் சுமந்து கொண்டு வயற்புறங்களில் காணப்பட்டனர். ஒருவன் தெம்மாங்கு பாடிக்கொண்டு நடந்து கொண் டிருந்தான். இன்னொருவன் உழவு மாடுகளை 'தே! தே! தேஹ, தேஹ' என்று ஓட்டிக் கொண்டிருந்தான். மற்றொருவன் எதிர்ப் படும் பெண்களைப் பரிகாசமாகப் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தான்.



பீவியும் ஹமீதும் குறுகிக் குறுகி அடி எடுத்து வைத்த வண்ணம் போய்க் கொண் டிருந்தார்கள். அவர்கள் எதிரே வழி வெகு தூரம் வரை பொன் தகடெனப் பிரகாசித் துக் கொண்டிருந்தது. ஆனால் போய்ச் சேர வேண்டிய இடத்தின் அறிகுறி சிறிதாவது தென்பட்டால்தானே?

எதிர்த்தாற்போல் மங்கலு சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். தோளிலே தடி சாத்தி யிருந்தான். அதன் நுனியிலே புதிய செருப்பு ஒன்றைக் கட்டித் தொங்க விட்டிருந்தான். தலையிலே சிறு முண்டாசு கட்டியிருந்தான். அவனது உடலை ஒரு மல் சட்டையும் மஞ்சள் நிற வேட்டியும் அலங்கரித்திருந்தன. ஏதோ பாட்டை முணுமுணுத்தவாறு முறுவலித்துக் கொண்டே அவன் நடந்து கொண்டிருந்தான். பீவியைப் பார்த்ததும், "ஏன் அத்தை? எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"குளாயிபுர் போய்க் கொண்டிருக்கிறேன். ஆண்டவன் அருளாலே அங்கே நம் ஹமீதுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்து விட்டது!" என்றாள் பீவி மகிழ்ச்சியுடன்.

"என்ன அத்தை இது! இந்த வயதில் வேலையா? இது ஓடி ஆடி விளையாட வேண் டிய வயசே ஒழிய, வேலை செய்கிற வயதில் லையே!" என்றான் வியப்புடன்.

"உண்மைதான், அப்பா! ஆனால் என் வீட்டில் இவனை விட்டால் வேறு ஆண் பிள்ளையே கிடையாதே! என்ன செய்ய?" என்றவள், "ஏன் அப்பா! நீ எங்கிருந்து வந்துகொண்டிருக்கிறாய்?" என்றுகேட்டாள்.

மங்கலு வெட்கத்தினால் உதடுகள் குழைய இலேசாகச் சிரித்தான். "மாமியார் வீட்டி லிருந்து வந்து கொண்டிருக் கிறேன், அத்தை!" என்றான்.

அதற்குள் பாட்டியின் விரல்களைப் பிடித்து இழுத் தான் ஹமீத். தொடர்ந் தாற்போலவே, தலைநாக்கி யும் பார்த்தான். எதிரே பரந்து கிடந்த பாதை குளாயிபுர் வெகு தொலை வில் இருக்கிறது என்பதைக் கூறாமல் கூறி விளங்க வைத் தது. இருவரும் நடக்க ஆரம்பித்தார்கள். அடிகளை அவர்கள் குட்டக் குட்ட வேகமாக வைக்கலாயினர்; அதற்காகத் தொலைவில் இருக்கும் போய்ச் சேர வேண்டிய இடம் கிட்ட நெருங்கி வந்து விடுமா, என்ன?

இன்னும் சிறிதுமுன்னேறி யதும் மௌல்வி சாகப் எதிர்ப்பட்டார். கான் சாகபின் மகனைப் படிக்க வைக்க அன்றுதான் நாள் பார்த் திருந்தார்கள். மௌல்வி சாகப் 'பிஸ்மில் லாஹ்' செய்து வைக்க, அதாவது ஆரம்பித்து வைக்கப் போய்க் கொண்டிருந்தார். பீவி ரஹ்மாவை வழியில் கண்டதும், "அடா! இத் தனை விடியற் காலையில் நீ எங்குபோய்க் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

பீவி மௌல்வி சாகப்புக்கு வணக்கம் தெரி வித்து, "இந்தக் குழந்தையை வேலையில் சேர்ப்பதற்காகப் போய்க் கொண்டிருக் கிறேன்!" என்றாள்.

மௌல்வி சாகப் தாடியைக் கையால் கோதியவண்ணம், "ஆண்டவனே! இந்தச் சின்னஞ்சிறு பிராயத்தில் இவன் சம்பாதிக்கப் போகிறானா? நன்றாயிருக்கிறதே, நீ சொல் வது?....ஆமாம், இவனுக்கு நீ 'நமாஸ்' தொழச் சொல்லி வைத்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

பீவியின் வெளிறிய முகத்தில் சிறிது தெம்பு ஏறியது. "சொல்லி வைத்திருக் கிறேன், மௌல்வி சாஹப்! நானே சொல்லி வைத்திருக்கிறேன். ஏழைகளாகிய நாங்களும் ஆண்டவன் பெயரைச் சொல்லக் கற்றிருக் கிறோம்! இதில் தவறு ஒன்றும் இல்லையே!" என்று கேட்டாள்.

மௌல்வி சாஹப் நிலை மிதித்தவர் போலத் துடித்து விட்டார். "இல்லை, இல்லை, ஆமாம், ஆமாம், எல்லாம் ஆண்ட

எச்சரிக்கை!


உங்கள் ஜலதோஷம் அபாயகரமாகக் கூடும்!



வியாதி ஆரம்பமாகு முன்னரே,
ஜலதோஷ அவஸ்தைகளை இந்த நல்ல,
சக்திவாய்ந்த ஆயின்மெண்ட்டால் ஒழியுங்கள்!

உங்கள் சளித்தொந்திரவுகளை லகுவில் ஒழிக்க வழியிருக்கும்போது, வியாதி ஏற்பட ஏன் விடவேண்டும்? படுக்கும் முன், விக்ஸ்வேபோரப்பை மார்பிலும், தொண்டையிலும், முதுகிலும் தேயுங்கள். உடனேயே உபாதை இருக்கும் இடத்திலேயே ஆஸ்வாஸம் ஏற்படுவதை உணர்வீர்கள்! நீங்கள் நிம்மதியாக தூங்கும் சமயம், விக்ஸ் வேபோரப் சளி உபாதைகளை விரட்டியடிக்கிறது! மறுநாட் காலையிலேயே நீங்கள் சுகம் பெறுகிறீர்கள்!

ஜலதோஷத்திலிருந்து 2 விதங்களில் நிம்மதி தருகிறது!



1

மூக்கின் வழியே வேலை செய்கிறது. விக்ஸ் வேபோரப் சக்திவாய்ந்த மருந்து ஆவிகளை வெளியிடுகிறது. நீங்கள் சுவாசிக்கும்போது மூக்கிலும் தொண்டையிலும் உள்ள சளி உபாதைகளை அகற்றுகிறது



2

சருமத்தின் மூலமும் வேலை செய்கிறது. விக்ஸ் வேபோரப்பின் நிம்மதி தரும் உஷ்ணம் மார்பகத்தை ஊடுருவித் தேற்றுகிறது.

மார்பு, தொண்டை, முதுகில் தேய்த்தாலே போதும்.

விக்ஸ் வேபோரப்

327

''விக்ஸ் வேபோரப்'' டிரேட் மார்க்

<u>இன்றே</u> விக்ஸ்வேபோரப்பை உபயோகித்து பாருங்கள்!

புதிய கைக்கடக்கமான பரீட்சார்த்த சைஸ் டின் 40 ந.பைசா தான்

வரி எக்ஸ்ட்ரா



வன் அருள்'' என்று ஏதோ உளறிக் கொட்டிக் கிளறி முடினார். பிறகு இரு பிரயாணிகளும் முன்னேறி விட்டனர்.

குலாயிபுர் சமீபித்து விட்டதன் அறிகுறி தென்பட்டது. நற்சாந்துக் கட்டடங்களும், வானளாவிய மாட மாளிகைகளும் காட்சி அளித்தன. நகரத்துப் பிரதான வாசலை ஒட்டினாற் போலிருந்த மாமரத்தடியிலே ஒரு குருட்டுப் பக்கிரி உட்கார்ந்து கொண்டிருந்தான்.

''கண்ணில்லாக் கபோதி, தாயே!
பிடி அரிசி போடு, தாயே!
காலணாக் காசு கொடு, தாயே!
கண்ணில்லாக் கபோதி, தாயே!''

பிச்சைக்குரல் அடிக்கொரு தரம் ஒலித்துக் கொண்டிருந்தது. பழுப்பேறிய இரு முன்பற்கள் மட்டும் 'இருக்கிறேன்' என்று அவர் வாய் திறக்கும் பொழுதெல்லாம் தன்னைக்காட்டிக் கூறிக் கொண்டிருந்தது; அழுக்கேறிய அவன் தாடி மயிர் சிக்கெடுக்க முடியாத வண்ணம் செடுக்குப் போட்டுக் கொண்டிருந்தது. அவன் கண்களில் விழிகள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு குவளைகளும் குவளைகளிலே பீளையும் மட்டுமே காட்சி அளித்துக் கொண்டிருந்தன.



அவன் நடந்து களைத்துப் போன இரு பிரயாணிகளின் காலடிச் சத்தத்தைக் கேட்டதுமே, சத்தம் கேட்ட பக்கம் திரும்பினான். தனது உலர்ந்து வறண்டு கிடந்த கையை நீட்டி, ''அப்பனே! உனக்கு நன்மை உண்டாகும். கண்ணில்லாத கபோதி கேட்கிறேன். காலணாக் காசு கொடு அப்பா. அல்லது கையளவு மாவு போடு, அப்பா!'' என்று கேட்டான்.

பழக்கப்பட்டுப்போன அவன் வாய் முணுமுணுத்தது.

கிழவி தனது பேரனின் கையைப் பலமாகப் பிடித்துக் கொண்டாள். பக்கிரியின் அருகில் சென்று, ''பெரியவரே! உங்களுக்கு வேலைக்காக ஒரு பையன் வேண்டும் என்று கேள்விப்பட்டேன்!'' என்றாள்.

உடனே பக்கிரியின் குரலிலும் பேசும் தொனியிலும் ஒரு வேறுபாடு தோன்றியது. முதலில் பரிதாபம் தொனித்த குரலில் இப்பொழுது அதிகாரத் தொனியும் ஆணவமும் தாண்டவமாடின.

''ஆமாம், எனக்கு ஒரு ஆள் வேண்டும் தான். நீ அழைத்து வந்திருக்கிறாயா?'' என்று கேட்டவன் கைகளை நீட்டினான். ஹமீதை அவன் அருகில் தள்ளி நிறுத்தினாள் கிழவி. ''ஆமாம், ஆண்டவன் அருளில் இவனுக்கு வயது ஒன்பதுதான் நடந்து கொண்டிருக்கிறது. இவன் ரொம்ப நல்ல பையன்!'' என்றாள்.

குருட்டுப் பிச்சைக்காரன் ஹமீதைத் தலையிலிருந்து கால்வரை தொட்டுத் தடவிப் பார்த்தான், ஆடுமாடுகளை விலை பேசுபவன் போல. பிறகு, ''உம்! பலசாலியாகத் தான் தோன்றுகிறான். ஆமாம், இவனுடைய பெயர் என்ன?'' என்று கேட்டான்.

சிறுவன் ஹமீதே தழுதழுத்த குரலில், ''என் பெயர் ஹமீத்!'' என்றான்.

''நீ என்னைப் பிடித்து ஊர் ஊராக அழைத்துச் செல்வாயா?'' என்று கேட்டான் குருடன்.

'ஓ!' என்றான் ஹமீத் உற்சாகமாக.

''நீ என்னோடு பாடுவாயா? உனக்குப் பாட வருமா?'' என்று கேட்டான் குருடன்.

''நீங்கள் கற்றுத் தந்தால் பாடுவேன்!''

குருடன் கீழே விரித்திருந்த தன் பையைச் சுருட்டி எடுத்துக் கொண்டான். தன் தடிக் கம்பையும் இன்னொரு கையில் எடுத்துக் கொண்டான். பிறகு குழந்தையின் தோள்பட்டையில் கையை வைத்து எழுந்து நின்று, ''வா, இங்கே! இப்படி உட்கார்ந்திருந்தால் ஒன்றும் கிடைக்காது. சுற்றினால்தான் ஏதாவது கிடைக்கும்!'' என்றான்.

ஹமீத் பாட்டியைப் பரிதாபமாக ஆசைபொங்கும் விழிகளோடு பார்த்தான். பிறகு நீண்டு கிடந்த சாலையை ஒரு நோட்டம் விட்டான். அப்பப்பா! அதுதான் எப்படி நீண்டு முடிவு தெரியாமல் பரந்து விரிந்து கிடந்தது! அடிமுடி தெரியாத ஆண்டவனின் அருவமான திருவுருவம் போல!

குருடனுக்கு முன்னால் நடக்கலானான். கிழவனின் ஒட்டி உலர்ந்துபோன ஒரு கை பாலகன் ஹமீதின் தோளைப் பற்றியிருந்தது. கிழவனோடு குரல் சேர்த்து அவன் பாடிக் கொண்டிருந்தான்.

''புண்ணியமுண்டு, தாயே!
பிச்சை போடு, தாயே!
கண்ணில்லாத கபோதி, தாயே!
கருத்தறியாக் குழந்தை, தாயே!
காலணாக் காசு கொடு, தாயே!

இருவர் குரலும் ஒன்றிப் பிச்சை கேட்டன. கிழவி ரஹ்மீன் ஒளி மங்கிய தன் விழிகளால் கண்பார்வையிலிருந்து மறையும் பேரனின் உருவத்தைப் பார்த்துக்கொண்டே நின்றாள். பிறகு தனது முந்தானையினால் கண்களைத் துடைத்துக்கொண்டு வானத்தை அண்ணாந்து ''ஆண்டவனே! உனது அருளே அருள்! பூப்போன்ற எனது பிஞ்சுக் குழந்தையை எத்தனை பாக்கியசாலியாகப் படைத்தாய்! வயது ஒன்பது நிரம்புவதற்குள்ளாகவே அவனுக்கு வேலை கிடைத்துவிட்டதே! அவனைப் போன்ற அதிர்ஷ்டசாலிகள் பரந்த இந்த உலகில் யாரேனும் உண்டா?'' என்று கரம் குவித்துக் கேட்டாள். பச்சிளம் பாலகனின் அதிர்ஷ்டம்தான், என்னே!

— 'நவநீதத்'திலிருந்து.

மூன்று நண்பர்கள்

வாண்டுமாமா

இறந்தவர் எதிரில் வந்தால்...!

ரங்கசாமி தன் டார்ச் விளக்கினால் ஆராய்ந்ததில் மூலையில் கிடந்த கைக்குட்டை ஒன்று கிடைத்தது. அது அந்தக் காயம் பட்ட மனிதனின் வாயில் திணிக்கப்பட்டிருந்த துணியாகத்தான் இருக்க வேண்டும் என்று கிட்டு முடிவு கட்டினான். ரங்கசாமிக்கும் உற்சாகம் குன்றிப் போய்விட்டது.

"சரி, தம்பி! வாங்க போகலாம். மணி பன்னிரண்டுக்கு மேலே ஆவுது! ஐயாவுக்குத் தெரிஞ்சா கோபிப்பாரு. இதெல்லாம் போலீஸ்காரங்க ஜோலி. நமக்கேன் வம்பு" என்று இருவரையும் அழைத்துச் சென்றான். கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் அந்த மனிதன் மறைந்த மர்மத்தை ஆராய வேண்டுமென்று ஆசை. ஆனால் ரங்கசாமி "எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம்" என்று கிளம்பி விட்டான்.

தங்கள் வீடு அருகே வந்ததும் கிட்டுவும் பட்டுவும் கீழே இறங்கிக் கொண்டு ரங்கசாமிக்கு விடை கொடுத்து அனுப்பினார்கள். இதைப் பற்றி யாரிடமும்—முக்கியமாகப் போலீசில் தெரிவிக்க வேண்டாம் என்று அவனிடம் உறுதியாகச் சொல்லி அனுப்பினார்கள்.

ரங்கசாமி போனதும் கிட்டு பட்டுவுடன் தெரு முனைக்கு வந்து சேர்ந்தான். "பட்டு! நீ போய்ப் படுத்துக் கொள். நான் மணியின் வீடு வரை போய் வருகிறேன். ஒரு வேளை அவன் அம்மா அவன் வரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், அவன் நம் வீட்டில் படுத்திருப்பதாகச் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று மணியின் தெருவுக்குப் போகத் திரும்பினான். பட்டுவுக்குக் கொட்டாவி வந்தது. "சீக்கிரம் வந்துவிடு" என்று சொல்லி விட்டுத் தன் வீட்டை நோக்கித் தனியாக நடந்தாள்.

வானத்திலே மேகங்கள் திரண்டு நிலவை மறைக்க ஆரம்பித்தன. பட்டு தன் வீட்டை நெருங்கி விட்டாள். அப்போது வெகு வேகமாக ஒரு கார் பறந்து வந்தது. பட்டுவின் அருகே வந்ததும் சட்டென்று பிரேக் போட்டு நின்றது. அதிலிருந்து இரண்டுபேர்கள் வெளிப்பட்டார்கள். திகைப்புடன் திரும்பிய பட்டு பீதியினால் கூச்சலிடுவதற்குள் மிருதுவான ஏதோ ஒன்று அவள் மூக்கையும் வாயையும் சேர்த்து அழுத்திக் கொண்டிருக்க, யாரோ அவளைத் தூக்கினார்கள். பட்டு தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடினாள். ஆனால் முடியவில்லை. பட்டுவை அந்த இரு உருவங்களும் காருக்குள் தூக்கிப் போட்டதும் அவள் நினைவிழந்தாள். காரும் இருளைக் கிழித்துக் கொண்டு வெகு வேகமாகச் சென்று மறைந்தது. மறு விநாடி அந்தத் தெருவில் பூரண அமைதி குடிகொண்டது.

கிட்டுவின் அறையில் அவன் படுக்கையில் படுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் மணி அயர்ந்த தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான். அத்தனை உடல் அசதி அவனுக்கு.



திடுக்கிட்டுக் கண் விழித்தான் மணி. தன் அறையில் யாரோ நடமாடுவது போன்ற ஒரு உணர்வுதான் அவனை அப்படி விழிக்கச் செய்தது. தன் படுக்கை அருகில் யாரோ நிற்பது போலிருந்தது. வெளியிலே நிலவு காய்ந்து கொண்டிருந்தாலும் அறைக்குள் இருள் படர்ந்துதானிருந்தது. ஒரு வேளை பிரமையோ! கண் விழித்த மணிக்கு ஒரு விநாடி ஒன்றுமே தென்படவில்லை. தலையணைக்கருகிலுள்ள மின்சார விசையை அழுத்தினான். பளீரென்று கண்ணைக் கூச வைக்கும் ஒளி அறை முழுதும் பரவியது. சுருங்கிய கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான் மணி. அது கனவல்ல; அவன் படுக்கை அருகே ஒரு உருவம் நின்று கொண்டுதான் இருந்தது! அந்த உருவத்தின் தலை மயிரிலிருந்து வடிந்து கொண்டிருந்த தண்ணீர் முகத்தில் வழிந்து கொண்டிருந்தது. மணியின் பார்வை அந்த உருவத்தின்மீது பதிந்ததும் அப்படியே அவன் விழிகள் நிலைத்து நின்று விட்டன.

அது அவனுக்கு மிகவும் பழக்கமான, அவன் அன்புக்குப் பாத்திரமான உருவம். அவன் மாமா சேகர்தான். ஆனால் அந்த உருவத்தைப் பார்த்ததும் மணியின் உடல் சில்லிட்டது. பயத்தினால் கூச்சலிட முயன்ற அவன் வாயை ஈரமான தன் கரங்களால் அந்த உருவம் அழுத்தி மூடியது. மணியின் பீதிக்குக் காரணம் இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்துவிட்ட அவன் மாமா சேகர் இப்போது அவன் படுக்கை அருகே நின்று கொண்டிருந்ததுதான். பத்ராசலத்துக்கு ஏதோ காரியமாகச் சென்றிருந்த அவன் மாமா கோதாவரி நதியில் படகு விபத்தில் மாண்டு விட்டதாக வந்த செய்தி குடும்பத்தையே துக்கத்தில் ஆழ்த்திய அந்த நாளை மணி மறந்து விடவில்லை. அப்படியானால் இந்த உருவம்......சேகரின் ஆவியா? அப்படித்தான் இருக்கவேண்டும். நீரில் மூழ்கித்தானே இறந்தார். அதனால் தான் தலைமயிரிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருக்கிறதோ? கைகளும் கூட நனைந்து ஜில்லென்று இருக்கிறதே!

இத்தனையும் ஒரு நொடியில் மின்னலென மணியின் மனத்தில் பளிச்சிட்டு மறைந்தது. அந்த உருவமோ மணியின் வாயை அழுத்தி இருந்த தன் கரங்களைத் தளர்த்தவே இல்லை.

"கூச்சலிடவில்லை என்று உறுதியளிப்பதற்கு அடையாளமாகக் கண்களை மூன்று தடவைகள் கொட்டு" என்றது சேகரின் ஆவி கரகரத்த குரலில். மணி அந்த உருவத்தின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தான். உருவமும் மணியின் வாயை அழுத்திக் கொண்டிருந்த தனது கையை எடுத்தது. மணி ஏதோ பேச முயன்றான். முடியவில்லை. வார்த்தைகள் தொண்டைக் குழியிலேயே மூழ்கிப் போயின. மறுபடியும் முயன்று கேட்டே விட்டான்.

"நீங்கள் ஆவி உருவம்தானே?"

"அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்" என்று சொல்லியபடியே அந்த உருவம் மேஜையின் மீதிருந்த ஒரு டவலை எடுத்து முகத்தில் வழிந்திருந்த நீரைத் துடைத்துக் கொண்டது.

"அப்படி என்றால்...?" என்று குழறினான் மணி.

"அப்படி என்றால் உன் முடிவுப்படி எனக்கு உருவம் கிடையாது. அருபமான பேய் என்று அர்த்தம்!" அந்த உருவம் தன் தலையை வேகமாகத் துவட்டிக் கொண்டே இதைக் கூறியது.

மணிக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. "ஆனால் நீங்கள் பூரண உருவத்தோடே தானே இருக்கிறீர்கள்?" என்றான் மணி.

'சீப்பு ஏதாவது இங்கிருக்கிறதா?' என்று கேட்டுக் கொண்டே மேஜையின்மீது கண்ணாடிக்குப் பின்னாலுள்ள சீப்பைப் பார்த்து



விட்டு அதை எடுத்துக் கண்ணாடிமுன் நின்று வாரிக் கொண்டது அந்த உருவம். மணி அந்த உருவத்தின் நிழலைக் கண்ணாடியில் கண்டான். ஆவிகளின் உருவத்தைக் கண்ணாடியில் காண முடியாது என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறான். ஆகவே அவன் பயம் நீங்கியது. தன் முன்னால் நிற்பது பிசாசல்ல என்ற முடிவுக்கு வந்ததும், "நீங்கள் கோதாவரியில் படகு மூழ்கி இறந்ததாகச் செய்தி வந்தது. அதன்படி என் முன்னால் இப்படிச் சொட்டச் சொட்ட வந்து நின்றதும்..." என்று முழுச் சந்தேகமும் தீராத நிலையில் வார்த்தையை முடிக்காமல் இழுத்தான் மணி. அந்த உருவம் ஜன்னல் வழியே கையை நீட்டி அதை மறுபடியும் மணியின் முன் காட்டியது. மணியின் கண்கள் வியப்பினால் மலர்ந்தன. "வெளியே மழையா பெய்கிறது?" என்று எட்டிப் பார்த்தான். பிறகு "அது சரி மாமா! நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?" என்று கேட்டான் மணி பூரண பயமும் தெளிந்தவனாக.

"நீ எப்படி இங்கு வந்தாயோ அதே வழியாகத்தான் நானும் இங்கு வந்தேன்" என்றார் சேகர். மணி பால்கனிக் கதவைத் திரும்பிப் பார்த்தான். தூக்க மயக்கத்தில் தான் கதவை மூடாமல் படுத்துக் கொண்டது அப்போதுதான் நினைவுக்கு வந்தது.

"மணி, எனக்கு உதவ விரும்புகிறாயா?"

"என்ன மாமா அப்படிக் கேட்கிறீர்கள்? என்னால் என்ன உதவி தேவை, சொல்லுங்கள் இப்போதே" என்றான் மணி.


"இரு, இரு. அவசரப்படாதே. முதலில் நான் கேட்பதற்குப் பதில் சொல். நிலவறையை விட்டு நீ கிளம்பும்போது அதற்குள் யார் இருந்தார்கள்?"

"அதற்குள் யார் இருந்தார்களோ அது எனக்குத் தெரியாது. அது பாழடைந்த பங்களா என்றுதான் நாங்களெல்லாம் இதுவரை எண்ணி இருந்தோம். ஆனால் இன்று இரவுதான் அதை யாரோ தங்களது பதுங்குமிடமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை தெரிந்தது" என்றான் மணி. (தொடரும்)

வேடிக்கை விளையாட்டு

மந்திரவாதியாக!

உங்களை உன் தோழர்கள் பெரிய மந்திரவாதியாக மதிக்க வேண்டுமானால் இதோ! இந்தத் தந்திர வேலையைச் செய்து அவர்களைத் திகைக்க வையுங்கள். இதற்கு வேண்டியதெல்லாம் ஒரு காலி நெருப்புப் பெட்டிதான். அதன் செருகும் பாகத்தின் பின்னடியால் படம் 1-ல் காட்டியது போல் வெட்டிக் கொள்ளுங்கள். பத்து நயே பைசே நாணயத்தைப் பெட்டிக்கும் மூடிக்கும் இடையே படம் 2-ல் காட்டியபடி செருகி நிற்க வையுங்கள். பாதி திறந்துள்ள நெருப்புப் பெட்டியில் சில நெருப்புக் குச்சிகளைப் போட்டு, பார்க்கத் தத்ரூபமாக்குங்கள்.



"இனி உங்கள் நண்பனை அழைத்து, இதற்குள் 2 நயே பைசே நாணயத்தைப் போடு. நான் அதை 10 நயேபைசேவாக்கித் தருகிறேன்" என்று சொல்லுங்கள். அவன் உன் பேச்சை நம்ப மாட்டான். நீ சவால்விடு. பெட்டியிலுள்ள குச்சிகளை எடுத்துவிட்டு அதனுள் 2 நயே பைசே நாணயத்தைப் போட்டு அவனிடம் காட்டு. பிறகு மந்திரம் உச்சரிப்பது போலக் கண்களை மூடியபடி பெட்டியைச் செங்குத்தாக்கிக் கையை உயர்த்தினால் 2 நயே பைசே பெட்டியிலுள்ள துவாரத்தின் வழியே உன் உள்ளங்கைக்கு வந்துவிடும். (படம் 3) இந்த 2 நயே பைசேவை நெருப்புப் பெட்டிக்கும் உங்கள் உள்ளங்கைக்கும் இடையே மறைத்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்த நாணயம் உங்கள் கையில் மறைந்திருப்பது உங்கள் நண்பனுக்குத் தெரிந்து விடக் கூடாது.

இனி, நெருப்புப் பெட்டியை மூடினால் அதன் இடையிலே செருகி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 10 ந. பைசே நாணயம் பெட்டிக்குள் நழுவி விழுந்துவிடும். இரண்டு மூன்று தடவைகள் குலுக்கிவிட்டு நண்பனிடம் தீப் பெட்டியைத் திறந்து காட்டுங்கள். 'அப்பா! எப்படி இந்த அபூர்வ வித்தையைச் சாதித்தாய்!' என்று கூறி போய்விடுவான். உங்களையும் மந்திரவாதி என்று [illegible] அவனை ஏய்த்துக் கொள்ளுவான்.

—"மூர்த்தி"

சீதாலக்ஷ்மி சங்கரய்யர் இயற்றிய

நடன கீதங்கள்

1. விநாயக ஸ்துதி, தியாகராஜ சரித்திரம், குறத்திப் பாட்டு, குடியானவர்கள் வாழ்வு. (ஞானம்) அடங்கியுள்ளது. தெளிவாக ஸ்வரப்படுத்தப்பட்டது. நாட்டியத்துக்கு ஏற்றது. அணா 12

★

சீதாலக்ஷ்மி சங்கரய்யர் இயற்றிய

'ராமன் நூல் வேலை புத்தகங்கள்'

1. ஆரம்ப புத்தகம் (படங்களுடன்) அணா 3½
2. தொ. 1. பெண்களின் ஜம்பர் (3லிருந்து 4 வயது வரை) அணா 6
3. தொ. 2. பிள்ளைகளின் ஸ்வெட்டர் (9லிருந்து 11 வயது வரை) அணா 6
4. தொ. 3. குழந்தைகளின் கோட்டும் சாக்ஸும் (1-2 வயது) அணா 6
5. தொ. 4. பெண்களின் ஸ்வெட்டர் (9-11 வயது வரை) அணா 6
6. தொ. 5ம் 6ம் சேர்ந்து ஒரு புத்தகம். 6 மாதக் குழந்தைக்கு ஸ்வெட்டர், குல்லா, சாக்ஸும், புருஷர்களின் ஸ்வெட்டரும் அணா 10
7. தொ. 7ம் 8ம் சேர்ந்து ஒரு புத்தகம். 6 மாதக் குழந்தைக்கு, கோட்டு நிக்கர், சாக்ஸ், குல்லா, (6 மாதத்திலிருந்து ஒன்றரை வயது வரை பிராக்கு (FROCK) அணா 10
8. தொ. 9ம் 10ம் சேர்ந்து ஒரு புத்தகம். சிறிய ஸ்திரீகளின் ஜம்பரும், புருஷர்களின் மூடுகழுத்து ஸ்வெட்டரும் அணா 10
9. தொ. 11ம் 12ம் சேர்ந்து ஒரு புத்தகம். ஸ்திரீகளின் கோட்டும், புருஷர்களின் ஸ்வெட்டரும் அணா 10
10. தொ. 13. ஸ்திரீகளின் ஜம்பரும் ஸ்திரீகளின் சால்வை கோட்டும் அணா 10
11. தொ. 1ம், தொ. 3லிருந்து 13 வரையுள்ள புத்தகங்களின் பிரதிகள்; ஆங்கிலத்தில் ஸ்ரீமதி பீ. ஜி. சீதாராமனும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. ஒரு புத்தகத்தின் விலை அணா 4


(தபால் செலவு பிரத்தியேகம்)

விவரங்களுக்கு

Mrs. SEETHALAKSHMI SANKARA AIYAR
9, Promenade Road
CANTONMENT :: TRICHINOPOLY

4 ஸ்டார் சோப்

வெண்ணுரை கொழிக்கும் இந்த சோப்பு, துணிகளை வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது




8 அணா : 1 அணா : ½ அணா வில்லைகளும் பார் சோப்பும் தயார் செய்கிறோம்

விற்பனை ஏஜண்டுகளும் ஸ்டாக்கிஸ்டுகளும் தேவை

விபரங்களுக்கு எழுதவும்:

4 ஸ்டார் சோப் ஒர்க்ஸ், நெல்பத்தூர்
(via) சீர்காழி, தஞ்சை ஜில்லா


உயர்தரமான...



வைரங்கள்

முத்துக்கள் & நகைகளுக்கு

சாந்திலால் P. மேத்தா
வைர வியாபாரம்
15/522, பெரியகடை வீதி, கோயமுத்தூர்



TSR
SPECIAL Thick
GOKUL
MALA BATHI
Made by T.S.R & Co. KUMBAKONAM
T.S.R & Co., PERFUMERS, KUMBAKONAM
தயாரிப்பவர்கள்
டி.எஸ்.ஆர்.& கோ.
கும்பகோணம்
மேனகா
மட்டிப்பால்
ஜகன்மோகன்
கோதல் மாலா
A.K.GOPAL & CO.

சாரங்கதாரா

காந்தன்



"என்ன மிஸ்டர் காந்தன்! உங்களுக்கு ஒரு கடுமையான சோதனைக் காலம் போலிருக்கிறதே!" என்று கேட்டுக் கொண்டே என் நண்பர் உள்ளே நுழைந்தார்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

"என்ன ஸார், விழிக்கிறீர்கள்? பழைய படங்களே மீண்டும் மீண்டும் வருவதைத் தாக்கிப் பல முறை எழுதினீர்கள். ஆனால் பலன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நேற்று மினர்வா பிக்சர்ஸ் தயாரிப்பான "சாரங்கதரா" பார்த்தேன். சிவாஜி கணேசன் நடித்திருக்கிறாரே என்றுதான் முக்கியமாகப் படத்துக்குப் போனேன். ஆனால் படம் சுவாரஸ்யமாயில்லை. நீங்கள் இந்தப் படத்தைப் பார்த்து என்ன விமரிசனம் எழுதப் போகிறீர்களோ என்று உங்களைப் பற்றி அநுதாபப்பட்டுக் கொண்டே படம் பார்த்தேன்!" என்றார் என் நண்பர்.

படத்தைப் பார்த்ததும் அவரது அநுதாபம் மிகவும் சரியானது என்று தோன்றியது. என் மீதே எனக்கு அநுதாபம் உண்டாயிற்று.

பட்டுச் சேலையின் நெசவு எவ்வளவு உயர்ந்ததாயிருந்தாலும், அதன் கரை, தலைப்பு முதலியவை பழையகால மோஸ்தரில் இருந்தால் அதை யாரும் விரும்பி வாங்க மாட்டார்கள்.

அது போலத்தான் படத்தின் கதைகளும். "சாரங்கதரா" நாடகம் ஆரம்பப் பள்ளிக் கூடத்திலிருந்து ஆரம்பமாகி, உயர்நிலைப் பள்ளியில் வளர்ந்து, கல்லூரியில் செழித்து, வழிவழி வாழ்ந்து வரும் பழைய காலக் கதை. இவ்வளவும் போதாக்குறைக்கு அந்தக் கதை ஏற்கனவே இரண்டு முறை படமாக வேறு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி பழைய கதைகளைத் தற்காலத்துத் திரைக்கு ஏற்பத் தயாரிக்க வேண்டுமானால், அதன் அஸ்திவாரத்தையும், அமைப்பையும் ஆதாரமாக வைத்துக் கொண்டு நவீன முறையில் கதையைத் தயாரிக்க வேண்டும். அப்படிப் பார்க்கப் போனால், "சாரங்கதரா" கதை ஏற்கனவே அந்த முறை யிலும் உருவாகி விட்டது. அதுதான் சிவாஜி கணேசன் — பத்மினி நடித்த "எதிர்பாராதது" என்ற பல்லோராலும் பாராட்டப்பட்ட வெற்றிப் படம். மகன் மணக்க இருந்த பெண்ணைத் தந்தை மணந்து கொள்ளுகிறார். கடைசியில் அவளுக்குப் புனர்வாழ்வளிக்க அவர் உயிர்த்தியாகமே செய்து விடுகிறார்.

"சாரங்கதரா" கதையின் சாரத்தை அந்தப் படத்தில் அப்படியே பிழிந்து தந்து விட்டார்கள். சாரத்தைப் பிழிந்தெடுத்த பிறகு சக்கைதானே மிஞ்சும்? அந்தச் சக்கையை வைத்துக் கொண்டு மீண்டும் படம் தயாரிக்க முயன்றால் அதில் என்ன மிஞ்சும்?

படம் ஆரம்பத்திலிருந்தே மந்த கதியில் செல்லுகிறது. இந்தப் படத்தில் நடித்திருக்கும் நடிகர்கள்கூட உற்சாகமாக நடிக்கவில்லை போலத் தோன்றுகிறது. விறுவிறுப்போ, சுறுசுறுப்போ எதுவும் காணப்படவில்லை.

சிவாஜி கணேசன் சாரங்கதரனாக வருகிறார்; குதிரையில் கொஞ்ச தூரம் சவாரி செய்கிறார்; தந்தை நிச்சயித்த மணத்துக்கு இசையாமல் மறுக்கிறார்; பிறகு புறா விடு பந்தயத்தில் கலந்து கொள்கிறார்; சித்ராங்கியின் மாளிகைக்குச் சென்று புறாவைக் கேட்கிறார். இந்த இடத்தில் அவருடைய ஜீவனுள்ள நடிப்பு கொஞ்சம் பளிச்சிடுகிறது. கடைசியில் மரண தண்டனையை ஏற்று, தாயாரைப் பார்த்து விட்டுப் போக வந்தபோது அவருடைய நடிப்பு பளிரென்று ஒளிவிடுகிறது.

படங்களில் வீரமான காட்சியோ, விபரீதமான சம்பாஷணையோ வந்தால் தியேட்டரின் முன்னணியிலிருந்து படம் பார்க்கும் ரஸிகர்கள் உடனே கொதித்தெழுவதைப் பார்க்கும் போது நம் தமிழகத்தினுடைய பண்பாட்டின் உயர்வு நன்கு புலனாகிறது. மேற்படி ரஸிகர்கள் பண்புக் குறைவான காட்சிகளைக் காணச் சிறிதும் சகிப்பதில்லை. சினிமாப் படத் தணிக்கையாளர்களை விட ரஸிகர்களுடைய சுவை உயர்ந்திருப்பதை நான் பல முறை கண்டிருக்கிறேன்.

படம் பார்க்கிறவர்களின் சுவையைக் கண்டுபிடித்து விட்டவர்கள் மாதிரி படாதிபதிகள், என்னென்னவோ காட்சிகளை யெல்லாம் படத்தில் புகுத்தி விடுகின்றனர்



மேற்படி காட்சியை படம் பார்ப்பவர்கள் எப்படி ரசிக்கிறார்கள் என்பதையும் அவர்களுடைய பிரதிபலிப்பையும் படாதிபதியும், டைரக்டரும், கதாசிரியரும் தியேட்டருக்குப் போய்ப் பார்க்க வேண்டும். ''சாரங்கதரா''வில் அத்தகைய ரசிகப் பெருமக்களின் ஏகோபித்த பிரதிபலிப்பை ஒரு குறிப்பிட்ட காட்சியில் காண முடிந்தது.

ஆஸ்தானக் கவிஞரின் மகள் கனகாங்கியுடன் சாரங்கதரன் காதல் புரியும் காட்சியில் ரசக் குறைவு ஏற்பட்டு, ரசிகப் பெருமக்களின் 'கசமுச' ஆரவாரம் கிளப்பி விடுகிறது. சினிமாப்படத் தணிக்கை போர்டு அத்தகைய காட்சிகளுக்கு எப்படி அனுமதி அளிக்கிறதென்பது புரியாத புதிராயிருக்கிறது. ''கள்வனின் காதலி'', ''அம்பிகாபதி'' முதலிய படங்களுக்குப் பிறகு சிவாஜி கணேசன் காதல் காட்சிகளில் நடிப்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பானுமதி சித்திராங்கியாக வருகிறார். காதல் கொண்ட இள நங்கையைப் போலவே நடித்து, கடைசியில் சோகத்தில் குமுறி இறந்து போகிறார். ஆனால் அவர் பாடும் பாட்டுக்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன. அவற்றுள் ''கன்னால் நல்லாப் பாரு—உன் எண்ணம் என்ன கூறு'' என்ற பாட்டும், ''வந்திடுவார் அவர் என் மனம் போலே'' என்ற பாட்டும் மிக மிக நன்றாயிருக்கின்றன.

கவிஞர் மகள் கனகாங்கியாக வரும் ராஜசுலோசனா கனகச்சிதமாக நடித்திருக்கிறார்.

மன்னன் நரேந்திரன் பாகத்தை எஸ். வி. ரங்காராவ் ஏற்று வேட்டைக்குப் போகிறார்; சித்திராங்கியுடன் சிரித்துப் பேச முயல்கிறார்; அவனால் பழி சுமத்தப்பட்ட மகனுக்குக் கொடுந்தண்டனை விதிக்கிறார். அவர் நடிப்பில் பாராட்டிச் சொல்ல எதுவும் இல்லை.

மந்திரி மகாதேவனாக வரும் நம்பியார் வழக்கம் போலத் தம் சதி வேலைகளைச் செய்கிறார். மாறுதல் எதுவும் இல்லை.

சாரங்கதரனின் தோழன் சுமந்திரனாக வரும் 'வசீராபதி' ராத்தகிருஷ்ணன் சிற்சில இடங்களில் மட்டுமே வந்தாலும் உணர்ச்சியோடு நன்றாய் நடித்திருக்கிறார்.

கருணாநிதியும் முத்துலட்சுமியும் படத்தில் ஹாஸ்யத்தைப் புகுத்தப் பலவிதத்திலும் முனைந்திருக்கின்றனர்.

இந்தப் படத்தில் பார்த்து ரசிக்கக்கூடிய அம்சம் ஒன்று உண்டு என்றால் அது கமலா லக்ஷ்மணன் ஆடியிருக்கும் நடனம்தான். ''ஏதுக்கு இத்தனை மோடிதான் உமக்கு'' என்ற பாட்டுக்குக் கமலா லக்ஷ்மணன் அதிஅற்புதமாகஅபிநயம் பிடிக்கிறார். அந்தப் பாட்டை ராதா, ஜெயலட்சுமி இருவரும் பாவம் ததும்பப் பாடுகிறார்கள். அந் நடனத்தில் திருப்தியடையாதவர்கள் இருந்தால் அவர்களுக்கும் திருப்தி உண்டாகும் பொருட்டு, ஒரு ஜிப்ஸி நடனத்தையும் சேர்த்திருக்கிறார்கள். ஈ. வி. சரோஜா ஆடுகிறார். அந்த மாதிரி நடனங்கள் நம் படங்களில் வரவர அதிகமாகி வருகின்றன. அது நம்மை எதில் கொண்டு விடுமோ என்று பயமாயிருக்கிறது. மேற்படி நடனம் இல்லாவிட்டால் இந்தப் படம் ஒன்றும் குறைந்து விடாது. படத்தில் சிலநூறு அடிகள் குறைந்திருக்கும். படம் பார்க்கிறவர்களின் மனவேதனையும் குறைந்திருக்கும்!

திரைக் கதையை அமைக்கும் பொறுப்பை எஸ். டி. சுந்தரமும், டி. என். கே. பெருமாளும் ஏற்றிருக்கின்றனர். பழைய கட்டடத்தை இடித்துத் தரை மட்டமாக்கிப் புதுக் கட்டடம் கட்டாமல் அப்படியே அதை வைத்துக் கொண்டு ஒட்டு வேலையும் பூச்சு வேலையும் செய்து புதுப்பிக்க முயன்றது போல இருக்கிறது, திரைக் கதை அமைப்பு.


காட்சி ஜோடனைகள்கூடச் சாதாரணமாகத்தான் இருக்கின்றன. படப் பிடிப்பிலும் புதுமையாகக் கூற எதுவும் இல்லை.

நண்பரொருவர் புதிதாகப் பத்திரிகை ஒன்று நடத்த ஆரம்பித்தார். அது அதிக நாள் நடக்கவில்லை. அதை நிறுத்த நேர்ந்த போது அவர் மிகவும் துக்கப்பட்டார். அப்பொழுது நான் அவருக்கு ஆறுதலாக, ''நீங்கள் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம். நீங்கள் பத்திரிகை ஆரம்பித்ததே அநேகம் பேர்களுக்குத் தெரியாது. அப்படியிருக்கும் போது அதை நிறுத்தி விட்டால் யாருக்குத் தெரியப் போகிறது?'' என்று சொன்னேன். அதே போல இந்தப் படத்தைப் பற்றி நாம் திருப்திப்பட்டுக் கொள்ள ஒரே ஒரு அம்சம் இருக்கிறது. படம் அதிக நாள் ஓடி மனத்தில் பதிந்து விடுமோ என்று யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. வந்த வேகத்தில் ஓடியே போய் விடும். மக்களும் மறந்து விடுவார்கள். ஆகவே, இந்தப் படத்தின் தோல்வியைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், அடுத்த தயாரிப்பிலாவது நல்ல முயற்சியை மேற்கொண்டு வெற்றியைக் காண முயலலாம்.



...பரிபூர்ண மாக நம்புவ தற்க்கும்...
...கவர்ச்சிகர மான அமைப் புக்கும்...
... உட்பூச்சு க்கும், வெளிப் பூச்சுக்கும் ...
...நேர்த்தியான வர்ணவேலைக ளுக்கும்...
... அதைப்பற்றி சந்தேகமே இல்லை அதுதான் ஷாலிமார் ஸுபர்லாக்... எல்லோரும் விரும்பும் நேர்த்தியான ஸிந்தடிக் எனமல்
ஒரு காலனைக் கொண்டே அதிகமான இடத்திற்குப் பூசமுடியும்
உட்புறமோ, வெளிப்புறமோ, எந்தப்புறமானாலும் பூசலாம்
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
CALCUTTA • BOMBAY • MADRAS • NEW DELHI • KANPUR.

ஸ்ரீஜயந்தி! ஸ்ரீ கண்ணன் திருவிளையாடல்கள்....



52



40



21

லிப்கோ குறைந்த விலைச் சிறு பதிப்புக்கள் [64]

[கலை மிக்க தமிழ்ப் பெரு நூல்களின் சுருக்கங்கள் (கைபடக்க அளவில்)]

ஒவ்வொன்றும் விலை அணா 4 (25 நயா பைசா) தான்!

1 வள்ளுவர் வாய்மொழி (குறள் மூலம்)
2 பொய்யாமொழிக்குப் பொழிப்புரை (குறள் தெளிவு)
3 வள்ளுவர் வகுத்த வழி (குறள் விளக்கம்)
4 வள்ளுவர் காட்டிய ஏர்
5 வள்ளுவர் கண்ட காதலர்
6 வள்ளுவர் காட்டிய இல்லறம்
7 நாலடியார் (மூலம்)
8 நாலடியார் (தெளிவுரை)
9 பிற்கால நீதி நூல்கள் (மூலமும் குறிப்புரையும்)
10 கடையெழு வள்ளல்கள்
11 இலக்கியச் சோலையிலே
12 பாரதியும் பைந்தமிழும்
13 வருக! வாழ்க! (அழைப்பும் வாழ்த்தும்)
14 சிலப்பதிகாரம்
15 சிலப்பதிகாரப் பெண்டிர்
16 மணிமேகலை
17 சீவக சிந்தாமணி
18 நளவெண்பா (மூலம்)
19 நளவெண்பா (சுருக்கம்)
20 அரிச்சந்திர புராணம்
21 குசேலோபாக்கியானம்
22 பன்னிரு ஆழ்வார்கள்
23 சூடிக்கொடுத்த சுடர்க் கொடி
24 திருவிளையாடற் புராணம்
25 பெரிய புராணம்
26 திருஞானசம்பந்தர்
27 திருநாவுக்கரசர்
28 சுந்தரர்
29 மாணிக்கவாசகர்
30-36 கம்பரது இராமாயணம் (7 நூல்கள்)
37-41 வில்லிபுத்தூராரின் மகா பாரதம் (5 நூல்கள்)
42 சில தனிப்பாடற் காட்சிகள்
43 கந்த புராணம் (முற்பகுதி)
44 கந்த புராணம் (பிற்பகுதி)
45 குமரேச சதகம் (மூலமும் குறிப்புரையும்)
46 வளையாபதி
47 குண்டலகேசி
48 நந்தனார்
49 பட்டினத்து அடிகள்
50 தாயுமான அடிகள்
51 இராமலிங்க அடிகள்
52 தசாவதாரம்
53 கம்பன் கண்ட பிரகலாதன்
54 தெய்வத் திருமணங்கள்
55 பழந்தமிழ்க் காதல் காட்சிகள்
56 தோத்திரத் திருப்புகழ்
57-59 சுகர் சொன்ன கதை - பாகவதம் (3 நூல்கள்)
60 பாரதியார் பாடல்கள் - சில பொறுக்கு மணிகள்
61 அறப்பளீசுர சதகம் (மூலமும் குறிப்புரையும்)
62 ஈசன் அருள் பெற்ற இளங்கன்றுகள்
63 புத்தி தரும் பத்தி தரும் சத்தி தரும் முத்தி தரும் புராணக் கதைகள்
64 மணிவாசகரும் மணிவாசகமும்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17; எம். தாமோதரம் & கோ., அப்பா பில்டிங்ஸ், சென்னை-1; எஸ். கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; எம். நடனசுந்தரம் பிரதர்ஸ், புதுமண்டபம், மதுரை; ஏ. கே. சுந்தரய்ய செட்டியார், கோட்டை, சேலம்-1; வி. ஆர். நடராஜன் & ஸன், கோயமுத்தூர்; கவிஞர் பதிப்பகம், 241, ராஜ வீதி, கோயமுத்தூர்; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மவுண்ட் ரோடு, சென்னை-2; ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் ஏனைய புத்தகக் கடைகள்.

லிப்கோ நடமாடும் புத்தக 'வான்'களிலும் கிடைக்கும்



அத்தியாயம் 19


எதிர்பாராத சில நிகழ்ச்சிகள்

இடையாற்று மங்கலம் மாளிகை ில் மறுநாள் பொழுது புலர்ந்தபோது ந்தக் கதையைப் படிக்கின்ற நேயர்கள் ற்கெனவே எதிர்பார்த்த சில நிகழ்ச்சி ளும், முற்றிலும் எதிர்பார்த்திருக்க டியாத சில நிகழ்ச்சிகளும் நடந்தன.

பாதாள மண்டபத்துச் சுரங்கத்தி ிருந்து வெளியேறித் தளபதி வல்லாள தவன் வசந்த மண்டபத்தில் பிரவே த்ததும், அலங்காரக் கிருகத்தில் பான்னாலும், மணியாலும் இழைத்த ப்ரமஞ்சக் கட்டிலில் உடலுக்குச் சுகம் தருவதைக் கொடுத் தவனாக எண்ண வண்டிய துறவி கொண்டாட்டத் தாடு படுத்துத் தூங்குவதைக் கண்ட தயும், வியந்து நினைத்ததையும், சென்ற பகுதிகளில் கண்டோம்.

அதன்பின் வசந்த மண்டபத்திலிருந்து வெளியேறிச் சென்று முன்பு படுத்

பாண்டிமாதேவி



ிருந்த விருந்து மாளிகைக் கட்டிலில் பாய்ப் படுத்துக் கொண்டான். உறக் ம் கண்களைச் செருக வைக்கும் நேரத் ில் யாரோ விளக்கும் கையுமாக ள்ளே நுழையவே ஒளி கண்களில் -றுத்தி விழித்துக் கொண்டான்.

விழித்துக் கொண்டு படுக்கையில் ழுந்து உட்கார்ந்து பார்த்தபோது ாராயணன் சேந்தன் விளக்கோடு திரே நின்று கொண்டிருந்தான். யார்? சேந்தனா? வா, அப்பா! ஏது ந்த நேரத்துக்கு இப்படி மறுபடியும் ந்தாய்? தளபதி நன்றாகத் தூங்கு ிறாரா; இல்லையா என்று பார்த்து ிட்டுப் போக வந்தாயோ? அல்லது கா மண்டலேசுவரரே போய்ப் ார்த்து விட்டு வா என்று அனுப்பி ரா?" என்று சிரித்துக்கொண்டே

நா. பார்த்தசாரதி

சற்றுக் குத்தலாகக் கேட்டான் வீரத் தளபதி வல்லாள தேவன்.

நாராயணன் சேந்தனும் பதிலுக்கு ஒரு சிரிப்பு சிரித்துக் கொண்டே, "தளபதி! உங்கள் கேள்வி விசித்திரமாக அல்லவா இருக்கிறது? 'தூங்குகிறவர்களைத் தூங்கிக் கொண்டிருக்கிறார்களா?' என்று பரிசோதனை செய்ய இங்கிருப்பவர்கள் இன்னும் பித்தர்களாகி விடவில்லை. வழக்கமாக நானும் இந்த மாளிகையில்தான் படுப்பது வழக்கம். இப்போது நான் படுக்க வந்திருக்கிறேன். நீங்கள் தூங்குகிறீர்களா, தூங்கவில்லையா என்பதைப் பார்ப்பதற்காக வரவில்லை" என்று குத்தலாகவே மறுமொழி கூறினான்.



"எங்கே அப்பா! இந்த இடையாற்று மங்கலம் மாளிகையில் சுலபமாக அப்படி எதையும் நம்பி விடவா முடிகிறது? இங்கே தூங்கி விட்டதாக நினைக்கப்படுகிறவர்கள் எல்லோரும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். இரவில் தூங்காமலோ, அல்லது தூங்க முடியாமலோ, செய்ய வேண்டிய எத்தனையோ முக்கியமான காரியங்களெல்லாம் மகா மண்டலேசுவரரின் நிர்வாகத்தில் இருக்கலாம்." வேணுமென்றேதான் மறுபடியும் நாராயணன் சேந்தனின் வாயைக் கிளறினான் தளபதி. ஆனால் அவன் எதிர்பார்த்தது போல் நாராயணன் சேந்தன் விசேடமான பதில் எதையும் சொல்லவில்லை.

"தளபதி! நீங்கள் எதை வேண்டுமானால் சொல்லிக் கொண்டிருங்கள். எனக்குத் தூக்கம் வருகிறது. நான் படுத்துத் தூங்கப் போகிறேன்" என்று சொல்லி மழுப்பி விட்டுத் தீபத்தின் ஒளியைக் குறைத்து ஒரு மூலையில் வைத்தபின் எதிர்ப்புறமிருந்த மற்றோர் கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டு விட்டான் அவன். உடனே தூங்கியும் விட்டான். சில விநாடிகளுக்குள் விருந்து மாளிகையின் பலமான சுவர்கள் பிளந்து விழுந்து விடும் போல் 'கர்புர்' என்று பிரமாதமான குறட்டை ஒலி நாராயணன் சேந்தனின் கட்டிலிலிருந்து கிளம்பியது.

வல்லாளதேவன் அந்த ஓசையைச் சகித்துக் கொள்வதற்காக இரண்டு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டான். அப்படியும் அந்த ஒலி செவிக்குள் புகுந்து தொலைத்தது. அப்படியே எழுந்திருந்து போய்க் கட்டிலில் மல்லாந்து கிடக்கும் அந்தக் குட்டைத் தடியனின் உச்சிக் குடுமியை ஒரு கையால் இறுக்கிப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் மொத்து மொத்தென்று மொத்தி விடலாமா என்று தோன்றியது அவனுக்கு. வேண்டுமென்றே ஏதோ ஒரு காரணத்துக்காகத் தனக்குக் காவலைப் போலத் தன்னருகே படுத்துக் கொள்ளச் சொல்லி மகாமண்டலேசுவரர் அவனை அங்கே அனுப்பியிருக்கலாமென்று தளபதி வல்லாள தேவனின் மனத்தில் ஒரு சந்தேக எண்ணம் உறைக்க ஆரம்பித்தது.

"இளவரசருக்கு மகா மண்டலேசுவரர் தம்முடைய மாளிகையிலேயே படுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்து விட்டார் போலிருக்கிறது? இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? கிளியைப் பிடித்துக் கூண்டுக்குள் அடைத்து வைத்துத் தம் சொந்த இன்பத்துக்காக அதற்குப் பாலும் பழமும் கொடுக்கின்ற மனிதர்களைப்போல, ஏதோ ஓர் பெரிய சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் குமார பாண்டியரை இடையாற்றுமங்கலம் தீவுக்குள் உலகத்துக்குத் தெரியாமல் இவர் ஒளித்து வைத்திருக்கிறார். இந்த இரகசியம் மகாராணியாருக்கோ, உலகத்துக்கோ தெரிந்து விட்டால் தன் குட்டு அம்பலமாகி விடுமோ என்று பயந்து "வடதிசை மூவரசருக்குப்



பயந்து 'இராசசிம்மன்' இலங்கைத் தீவுக்கு ஓடிவிட்டான்'' என்ற போலிச் செய்தியை இந்தப் பொல்லாத மனிதரே வெளியில் பரவ விட்டிருப்பார்.

''மகாமேதையாகவும் குலதெய்வமாகவும் இவரை எண்ணிக் கொண்டிருக்கும் மகாராணியிடம் இந்த இரகசியங்களை நான் அறிவித்தால் நம்பக் கூடத் தோன்றாது. காலம் வரும். அப்போது ஆதார பூர்வமான சான்றுகளோடு எல்லா உண்மைகளையும் விவரமாக வெளிப்படுத்துகிறேன்.''

நாராயணன் சேந்தனின் குறட்டை ஒலியால் தூக்கத்தை இழந்த வல்லாளதேவன் மேற்கண்டவாறு பலவகை சிந்தனைகளில் மூழ்கியிருந்தான்.

''அட, என்னதான் ஆசை இருக்கட்டுமே! மனிதருக்கு மானம், வெட்கம், ஆகிய பண்புகள் கூடவா ஆசை



வந்தால் இல்லாமல் போய் விடும்? யாரோ ஒரு சாமியாரை மயக்குவதற்கும் சொந்த மகளை அவனோடு சிரித்துப் பேசுமாறு செய்கிறார். இளவரசரை மயக்கிக் கைக்குள் போட்டுக் கொள்வதற்கும் மகளின் சிரிப்பும், பேச்சும் தான் இவருக்குச் சரியான சாதனம் போலும்! இவ்வளவு படித்தவருக்குப் பெண்களுக்கென்று இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக ஏற்பட்டுள்ள கட்டுப்பாடு, பண்பு, ஒழுக்கம் எல்லாம் மறந்தா போய் விட்டன? ஐயோ! இந்த மனிதருடைய அந்தரங்க வாழ்க்கையை நினைத்தால் எனக்குச் சிரிப்பாக வருகிறது. இன்னொரு புறம் பரிதாபமாகவும் இருக்கிறது. இவ்வளவும் ஆசை படுத்துகிற பாடு அல்லவா?''

இப்படியே இன்னும் என்னென்னவோ சிந்தித்துக் கொண்டே கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்த தளபதி வல்லாள தேவன் பொழுது விடிவதற்கு நான்கு நாழிகை இருக்கும்போது ஏதோ ஒரு முடிவான தீர்மானத்துக்கு வந்தவனாகச் சட்டென்று எழுந்திருந்தான்.

* * *

எவ்வளவு முக்கியமான காரியங்கள் குறுக்கிட்டாலும் தம்முடைய தினசரி வழக்கங்களைக் குன்றாமல் கடைப்பிடிப்பவர் இடையாற்றுமங்கலம் நம்பி. புலரிப் பொழுதாகிய வைகறையின் பனிக்காற்று நீங்குவதற்கு முன்பே எழுந்து போய்ப் பறளியாற்றில் நீராடி விடுவார். ஈர ஆடையைக் களையாமல் நந்தவனத்துக்குச் சென்று தம் கையாலேயே மலர்களைக் கொய்து கொண்டு வருவார். கிழக்கே கதிரவனின் செங்கிரணங்கள் பொன் வண்ணக் கோலமிடத் தொடங்கும் நேரத்தில் தான் அவர் பூஜையை முடித்துக் கொண்டு மாளிகையிலுள்ள சிவன் கோவிலிலிருந்து வெளிவருவார். அப்போது அவரைப் பார்த்தால் கோவில் வாயிலில் ஒளி மயமான மற்றொரு சூரியன் உதித்து நடந்து வருவதுபோலிருக்கும். சிவந்த கம்பீரமான நெடிதுயர்ந்த மேனியில் வெள்ளிக் கம்பிகள் பதித்தாற் போலத் திருநீற்றுக் கீற்றுகளும் வெண்ணிற ஆடையும் விளங்க அவிழ்த்து முடித்த ஈரத் தலையோடு அவர் நடந்து வருவது அற்புதமான காட்சியாக இருக்கும். எவ்வளவு தலைபோகிற காரியமானாலும் இந்த அன்றாட அனுட்டானங்களில் குறைவே ஏற்படாது; மாறுதலும் நிகழாது.

அன்றைக்கு மகாசபைக் கூட்டத்துக்காகப் புறத்தாய நாட்டுக் கோட்டைக்குப் போக வேண்டுமென்ற நினைவு இருந்ததனால் வழக்கத்தைக் காட்டிலும் முன்னதாகவே எழுந்து விட்டார் இடையாற்றுமங்கலம் நம்பி. அவர் தம்முடைய நித்திய கர்மானுட்டானங்களை முடித்துக் கொண்டு வெளிவந்தபோது, நாராயணன் சேந்தன் விருந்து மண்டபத்திலிருந்து பரபரப்பாக ஓடிவந்தான்.


''என்ன சேந்தா? இப்போதுதான் இருப்பள்ளி எழுச்சி ஆயிற்று! தளபதி வல்லாள தேவன் இன்னுமா உறங்கிக் கொண்டிருக்கிறான்?'' என்று கேலியாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் மகா மண்டலேசுவரர்.

''சுவாமீ! நேற்றிரவு நான் விருந்து மண்டபத்துக்குப் படுத்துக் கொள்ளச் சென்றபோது கூடத் தளபதி அங்கே தான் உறங்கிக் கொண்டிருந்தார். நான் சென்றதும் விழித்துக் கொண்டு சிறிது நேரம் என்னோடு பேசிக் கொண்டும்

இருந்தார். இப்போது காலையில் எழுந்திருந்து பார்த்தால் ஆளைக் காணவில்லை'' என்று மூச்சுவிடாமல் பதற்றத்தோடு தான் சொல்லவந்த செய்தியைக் கூறி முடித்தான் நாராயணன் சேந்தன்.

இடையாற்றுமங்கலம் நம்பி அதைக் கேட்டுச் சிறிதும் திகைப்படையவில்லை. ''ஏன் இவ்வளவு பதறுகிறாய், சேந்தா? பக்கத்தில் எங்கேயாவது எழுந்திருந்து போயிருப்பான். சிறிது நேரத்தில் தானாக வந்துவிடுவான். இன்றைக்கு மகாசபை கூடுகிறது. கோட்டைக்குப் போக வேண்டும். இருவரும் இங்கிருந்து புறப்பட்டுச் சேர்ந்தே போகலாம் என்று அவனிடம் நேற்றிரவே நான் சொல்லி யிருக்கிறேன். அப்படியிருக்கும்போது அவன் என்னிடம் சொல்லாமல் போவானா?'' என்றார்.

''இல்லை, சுவாமி! அநேகமாக இடையாற்று மங்கலம் தீவு முழுவதும் தேடிப் பார்த்து விட்டேன். கால் கடுக்கச் சுற்றியாகி விட்டது. காலையில் எழுந்ததிலிருந்து இதே வேலை தான். ஆனால் அந்த மனிதரைக் காணவில்லை. மாளிகைக்குள் இருந்தால்தான் உண்டு. ஆனால் இங்கும் அவர் இல்லையென்று தெரிகின்றது.



''சேந்தா! தளபதி எப்படிப் போயிருக்க முடியும்? என்னிடம் அவ்வளவு உறுதியாகச் சொல்லி யிருந்தவன் போவானா? எதற்கும் நீ படகோட்டி அம்பலவன் வேளானுடைய குடிசைக்குப் போய்க் காலையில் யாருக்காவது அவன் படகு செலுத்திக் கொண்டு போனானா என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டு வா. பறளியாற்றில் தண்ணீர் அதிகமாகப் போய்க் கொண்டிருப்பதனால் அம்பலவன் வேளானின் உதவியில்லாமல் யாரும் அக்கரைக்குச் சென்றிருக்க முடியாது.''

நாராயணன் சேந்தன் படகோட்டியைக் கண்டு விசாரித்து வருவதற்காக அவன் குடிசையை நோக்கிப் புறப்பட்டான். அதுவும் மகாமண்டலேசுவரரின் சொற்களைத் தட்டக் கூடாதே என்பதற்காகத்தான். அவன் மனத்தைப் பொறுத்த வரையில், ''தளபதி வல்லாள தேவன் அப்போது அந்தத் தீவிலேயே இல்லை என்பது உறுதியாகத் தெரிந்து விட்டது. தளபதி முதல் நாள் இரவு படுத்துக் கொள்ளச் சென்ற போது தன்னிடம் குத்தலாகக் கேட்ட கேள்விகளை நினைத்துப் பார்த்தபோது அவன் எண்ணம் வலுப்பட்டது. ஏதேனும் ஒருவிதத்தில் தளபதி வல்லாள தேவனுக்கு மாமண்டலேசுவரிடம் அவநம்பிக்கையோ, அதிருப்தியோ ஏற்பட்டிருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. சாதாரணமாக இப்படித் தனக்கு ஏற்படுகிற சந்தேகங்களை உடனே இடையாற்று மங்கலம் நம்பியிடம் தெரிவித்து விடுவது அவன் வழக்கம். அன்று ஏனோ தளபதியைப் பற்றித் தன் மனத்தில் ஏற்பட்ட சந்தேகத்தை உடனடியாகத் தெரிவித்து விட வேண்டுமென்ற எழுச்சியோ, ஆர்வமோ அவனுக்கு உண்டாகவில்லை.

படகோட்டி அம்பலவன் வேளாவின் குடிசை தோணித் துறைக்கு அருகே பறளியாற்றின் கரையில் அமைந்திருந்தது. எண்ணங்களின் சுமை கனக்கும் மனத்துடன் தன் போக்கில் அம்பலவன் வேளானின் இருப்பிடத்துக்கு நடந்து கொண்டிருந்த நாராயணன் சேந்தன் எதிரே வந்த யார் மேலேயோ 'பட்' டென்று மோதிக் கொள்வதற்கு இருந்தான்.

''ஐயா! எங்கே இப்படி? அதிகாலை நேரத்தில் கிளம்பி விட்டீர்கள்?'' என்று எதிரே வந்த ஆள் விலகி நின்று கேட்டபோது அது அம்பலவன் வேளான் குரல்தான் என்பதைப் புரிந்துகொண்டு நிமிர்ந்தான் நாராயணன் சேந்தன். ''நல்ல வேளை! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல் நீயே வந்து விட்டாய். உன்னைத்தான் அப்பா தேடிக் கொண்டு புறப்பட்டேன். உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் விசாரிக்க வேண்டும்'' என்று தணிந்த குரலில் அவனிடம் கூறினான் சேந்தன். அதைக் கேட்டுக் கொண்டே, ''ஐயா! இந்த அநியாயத்தைக் கேட்டீர்களா? நான் என்ன செய்வேன்? யாரிடம் போய்ச் சொல்வேன்? நேற்றிரவு துறையில் இழுத்துக் கட்டி விட்டு வந்த தோணியைக் காலையில் எழுந்திருந்து போய்ப் பார்த்தால் காணவில்லை'' என்று பதற்றமும் நடுக்கமும் செறிந்த குரலில் சொன்னான் அம்பலவன் வேளான். வேளான் கூறியதைக் கேட்டு அவன் மேலும் வியப்பில் மூழ்கினான்.

"ஐயா! நீங்கள்தான் ஏதாவது ஒரு வழி சொல்ல வேண்டும். இன்றைக்கு மகா மண்டலேசுவரரும் தளபதியும் காலையில் அக்கரைக்குப் போய்க் கோட்டைக்குச் செல்ல வேண்டுமென்று கூறியிருந்தார்கள். கோட்டையில் இன்று காலை மகாசபைக் கூட்டமாமே? இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் துறைக்கு வந்து 'படகு எங்கே?' என்று கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்? ஐயோ! இன்றைக்கென்று இப்படி நடக்க வேண்டும்? எல்லாம் என் தலையெழுத்து" என்று அலுத்துக் கவலைப்பட்டுக் கொண்டான் படகோட்டி அம்பலவன் வேளான்.

"இன்று காலையில் எப்போது போய்ப் பார்த்தாய்?" என்று நாராயணன் சேந்தன் கேட்டான்.

"இப்போதுதான் சிறிது நேரத்துக்கு முன்பு போய்ப் பார்த்தேன். தோணியைக் காணவில்லை என்று தெரிந்ததும் பதறிப் போய் உடனே உங்களைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டேன். நீங்களே எதிரில் வந்து விட்டீர்கள்."

"அது சரி! நேற்றிரவு துறையில் தோணியைக் கட்டிவிட்டு வரும்போது துடுப்புகளையும் அதற்குள்ளேயே போட்டு வந்திருந்தாயோ?"

"ஆமாம், ஐயா! துடுப்புக்களை எப்போதும் தோணிக்குள்ளே போட்டு வைத்து விட்டு வருவதுதான் வழக்கம். அது போலவே நேற்றும் செய்தேன்."

"ஆகா! நான் நினைத்தபடிதான் நடந்திருக்கிறது" என்றான் சேந்தன்.

"என்ன நினைத்தீர்கள் ஐயா! படகை யார் எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்களென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆவல் துடிக்கும் தொனியில் நம்பிக்கையின் சாயை மலர வினவினான் படகோட்டி அம்பலவன் வேளான்.

"அப்பா! அதை இப்போது உன்னிடம் உறுதியாகச் சொல்லிவிட முடியாது. ஒரு தினுசாக எனக்குள் நிர்மானித்திருக்கிறேன். படகைக்கொண்டு போனவர்கள் யாராக இருக்கலாம் என்பது பற்றிப் பின்பு ஆராயலாம். வா! முதலில் மகா மண்டலேசுவரரிடம் போய்ப் படகு காணமற் போன செய்தியைத் தெரிவிப்போம்" என்று கூறி வேளானையும் உடன் அழைத்துக் கொண்டு திரும்பினான் சேந்தன்.

சிவ பூஜை செய்துவிட்டு நிர்மலமான மனமும், புறமுமாக மாளிகை வாசலில் வந்து நின்ற இடையாற்றுமங்கலம் நம்பிக்கு நாராயணன் சேந்தன் வந்து கூறிய செய்தியைக் கேட்டதும் சஞ்சலமும், சிந்தனையும் உண்டாயிற்று. "வல்லாள தேவன் காலைவரை தங்கியிருந்து தன்னோடு உடன் புறப்படுவதாகச் சொல்லியிருந்தும் அம்மாதிரி மோசம் செய்வானா?" என்று சிந்தித்தார். "ஒரு வேளை அப்படியே அவன் புறப்பட்டுப் போயிருந்தாலும் கோட்டையைத் தவிர வேறெங்கே போயிருக்க முடியும்? போனதை ஒரு குற்றமாகச் சொல்லிவிட முடியாது. போகும்போது என்னிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போயிருக்கக் கூடாதோ?" என்று சமாதானமும் அடைந்தார். "தளபதி இல்லாவிட்டால் என்ன? படகுக்குச் சொல்லியிருந்த நேரத்தில் வேளானை வரச் சொல்லி நாராயணன் சேந்தனையும் உடனழைத்துக் கொண்டு நாம் தனியே புறப்பட வேண்டியதுதான்" என்று தமக்குள் அவர் ஒரு முடிவுக்கு வந்த போது அம்பலவன் வேளானும், நாராயணன் சேந்தனும் வந்து, 'படகு காணவில்லை' என்ற அந்தச் செய்தியைக் கூறினார்கள். அவர் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தார்.


அத்தியாயம் 20

தென்னவன் ஆபத்துதவிகள்

இன்னவென்று புரியாத எண்ணங்களாலும், அந்த இரவில் இடையாற்றுமங்கலம் மாளிகையில் நடந்த எதிர்பாராத சில நிகழ்ச்சிகளாலும், தளபதியின் உள்ளம் குழப்ப மடைந்திருந்தது. நாராயணன் சேந்தன் ஏற்றிக் கொண்டு வந்து வைத்திருந்த சிறிய அகல் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அதன் ஒளியில் சேந்தனைப் பார்த்தான் தளபதி. சேந்தன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். தளபதிக்கு உறக்கம் வரவில்லை. அங்கு இருப்புக் கொள்ளவும் இல்லை. பயமும், கலவரமும் நிறைந்ததொரு உணர்வு அந்த இருளிலேயே அங்கிருந்து வெளியேறி விடுமாறு அவனைத் தூண்டியது.

விருந்தினர் மாளிகையிலிருந்து புறப்பட்டுப் பறளியாற்றின் கரையிலுள்ள படகுத் துறையை நோக்கி நடந்தான் அவன். துறைக்கு அருகே இருந்த குடிசையின் முகப்பில் யாரோ கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைத்



புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்! நித்தமும்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோரம்மிய மணம் கொண்டது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத. மனோரம்மிய மணத்துடன்.


இருட்டில் உங்களது துணைவன்
எஸ்ட்ரேலா
பாட்டரீஸ்
ESTRELA
YOUR GUIDE IN DARKNESS
அணையாத வெளிச்சத்திற்கு எப்பொழுதும் எஸ்ட்ரேலாவை உங்கள் டார்ச்சில் உபயோகிக்கவும்
நீடித்த உழைப்பு பிரகாசமான வெளிச்சம்
எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.,
பம்பாய் - மதராஸ் - டில்லி - கல்கத்தா - கான்பூர்

E 30



தளபதி கண்டான். பக்கத்தில் நெருங்கிச் சென்று பார்த்த போது படுத்திருப்பது படகோட்டி அம்பலவன் வேளான் என்று தெரிந்து கொள்ள முடிந்தது. தளபதி சுற்றும் முற்றும் பார்த்தான். தன்னை அப்போது அந்த நிசி வேளையில் இடையாற்று மங்கலம் தீவிலுள்ள யாருடைய விழிகளும், எந்த இடத்திலிருந்தும் பார்க்கவில்லை என்பதை உறுதி செய்துகொண்டான். மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கரையோரத்துப் புன்னை மரத்தில் இழுத்துக் கட்டியிருந்த படகை ஓசைப்படாமல் அவிழ்த்தான். நல்ல வேளையாகத் துடுப்புக்களையும் படகிலேயே வைத்து விட்டுப் போயிருந்தான் வேளான். அப்போது பறளியாற்றில் கரை நிமிர ஓடிக்கொண்டிருந்த வெள்ளத்தின் வேகத்தை எதிர்த்துத் தன்னால் படகைச் செலுத்த முடியுமா? — என்று எண்ணித் தயங்கிக் கொண்டிருக்கவில்லை அவன். கேவலம், ஒரு சாதாரணப் படகோட்டியான அம்பலவன் வேளானின் கைகளுக்குள்ள வன்மை; புறத்தாய நாட்டின் மாபெரும் படைத் தலைவனின் கைகளுக்கு இல்லாமலா போய் விடும்? தளபதியின் கைகள் துடுப்பை வலித்தன. படகு அக்கரையை நோக்கி மெல்ல நகர்ந்தது. வெள்ளத்தின் வேகத்தையும், இழுப்பையும் சமாளிப்பது கடினமாகத்தான் இருந்தது. இளமையும், வளமையும், தோற்றமும், ஏற்றமும் உள்ள நூற்றுக் கணக்கான செந்நிறக் குதிரைகள் ஒரே திசையில் கால்கள் போனபடி தறிகெட்டுப் பாய்ந்து வெறி கொண்டு ஓடினால் என்ன வேகம் இருக்குமோ, அந்தப் பயங்கர வேகத்தைத் தான் அப்போதைய பறளியாற்று வெள்ளத்துக்கு உவமை கூறவேண்டும்.



சுப்ரீம் கோர்ட் நீதிபதி கனம் டி. எல். வெங்கடராமய்யர் அவர்கள் சென்ற மாதக் கடைசி வாரத்தில் எழும்பூர் வேதசபையின் சார்பில் இரண்டு பிரவசனங்களைத் துவக்கி வைத்தார்.

புறப்பட்ட இடத்திலிருந்து நேரே அம்பு பாய்வது போல் அக்கரைக்குப் போக முடியவில்லை. வெள்ளத்தின் போக்கில் இழுபட்டு ஒரு புறமாகச் சாய்ந்து மெதுவாகவே சென்றது படகு. அவர்கள் வரும்போது இருந்ததைவிட வெள்ளத்தின் வேகம் இப்போது அதிகரித்திருந்தது. தளபதி வல்லாளதேவன் அக்கரையை அடைந்த போது வெகு நேரமாகி விட்டது. பொழுது விடிவதற்கு இன்னும் நான்கைந்து நாழிகைகளே இருந்தன. நிலா ஒளி சற்று மங்கியிருந்தது.

அங்கிருந்த மரமொன்றில் படகை இழுத்துக் கட்டி விட்டுக் கரையோரமாக நடந்து முன்னிரவில் தான் குதிரையை விட்டிருந்த மரத்தடியை அடைந்தான். பின் இரவு நேரத்தின் குளிர்ந்த காற்றும் கரையோரத்துத் தாழம் புதர்களில் இருக்குமிடம் தெரியாமல் மலர்ந்திருந்த தாழம்பூக்களின் மணமும் சோர்ந்திருந்த தளபதி வல்லாளதேவன் உடலுக்கும், மனத்துக்கும் புத்துணர்ச்சி ஊட்டின.

மரத்தடியில் அவன் குதிரை துவண்டு போய்ப் படுத்திருந்தது. அந்த அமைதியான நேரத்தில் மரத்தடியில் ஆளரவம் கேட்டுக் கிளைகளைச் சரணடைந்திருந்த பறவைகள் சிறகுகளை அடித்தும், ஒலிகளைக் கிளப்பியும் தங்கள் இருப்பைப் புலப்படுத்தின. தளபதி குதிரையைத் தட்டி எழுப்பினான். குதிரை கனைத்துக் கொண்டே எழுந்து நின்று உடலைச் சிலிர்த்தது. ஓசை ஒலியடங்கிய பேரமைதி செறிந்த அந்தப் போதில் பயங்கரமாகப் பறளியாற்றங்கரை எங்கணும் எதிரொலித்தது அந்தக் கனைப்பொலி.

"சூழ்நிலை இருக்கிற விதத்தைப் பார்த்தால் இன்றும், இனி வரும் சில நாட்களிலும், புறத்தாய நாட்டுக் கோட்டையைச் சுற்றி மகாராணியாருக்கு என்னென்ன ஆபத்துக்கள் காத்திருக்குமோ? என்னைக் காட்டிலும் பொறுப்புள்ள பதவியும், அதிகாரங்களும் மகாமண்டலேசுவரருக்கு இருக்கலாம். ஆனால் பாதுகாப்புக் குறைவினால் மகாராணியாருக்கு ஏதாவது

நேர்ந்து விட்டால் அந்தப் பழியைத் தளபதியின் தலையில்தான் சுமத்துவார்கள். எதற்கும் நாம் முன்னெச்சரிக்கையாக இருந்துகொள்ள வேண்டும்'' இவ்வாறு தளபதி நினைத்தான். பின்பு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாகக் குதிரையில் ஏறிப் புறப்பட்டான். குதிரை கோட்டாற்றிலுள்ள தென்திசைப் பெரும்படையின் கோட்டையை நோக்கிச் சென்றது.

சாலையோரத்து மரப் பொந்துகளில் நெருப்புக் கங்குகளைப் போன்ற விழிகளை உருட்டிக் கொண்டு பதுங்கியிருந்த கோட்டான்கள் இடையிடையே எழுப்பிய குரூரமான ஒலிகள் தவிர முற்றிலும் அமைதியாக இருந்த அந்தநேரத்தில் குதிரைக் குளம்புகளின் ஒலி அளவாக வரிசையொத்துத் தொடர்ந்து ஒலிப்பது என்னவோ போலிருந்தது.

பூ சிறிது சிறிதாக மலர்ந்து இதழ்களின் நறுமணமும், அழகும் பரவுவது போல் ஒளியின் மலர்ச்சியை நோக்கி, இருள் தோற்று நைந்துகொண்டிருக்கும்



அந்தப் பின்னிரவு நேரத்தில் மண்ணும் விண்ணும் மரங்களும், செடி கொடிகளும், தன்னைச் சுற்றியுள்ள எங்கும் எதுவும் வார்த்தைகளின் பொருள் எல்லைக்குள் சிக்காத ஒரு பேரழகில் தோய்ந்தெழுந்து கொண்டிருப்பது போல் அவன் கண்களுக்குத் தோன்றியது.

தென் பாண்டி நாட்டுப் படைத் தலைவனுக்கு வாள் முனையில் போரிடும் வீரச் கலை ஒன்று மட்டும்தான் கைவந்த பழக்கம் என்பதில்லை. ஆண்மையும், பருவமும், பொறுப்பும் வந்தபின்பு கற்றுத் தெரிந்துகொண்ட கலை அது. இரத்தத்தோடு இரத்தமாகப் பழக்கத்தோடு பழக்கமாகத் தமிழ்ச் சுவையும், கவிச்சுவையும் பிறவியிலேயே வல்லாளதேவனிடம் இயல்பாக அமைந்திருந்தன. எத்தகைய குழப்பமும் கலவரமும் தன்னையும், தன் பொறுப்பையும் சூழ்ந்திருந்தாலும் சுற்றுப்புறத்தின் அழகில் அந்த அழகு உண்டாக்கும் சிந்தனைகளில் தோயும் வழக்கம் மனப் பண்பால் அவனுக்கு இருந்தது.

* * *

தளபதி கோட்டாற்றை அடைந்து படை விருப்பினுள் நுழையும்போது கீழ்த் திசை வெளுத்துவிட்டது. விடிந்ததும் விடியாததுமாகத் திடீரென்று கோட்டைக்குள் வரவே அங்கிருந்த பலவகைப் படைகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான வீரர்கள் பரபரப்புக்கு உள்ளானார்கள். "என்னமோ? ஏதோ? படைத் தலைவருடைய திடீர் வருகையின் விளைவு யாதாயிருக்குமோ?" என்று வீரர்கள் தங்களுக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டனர். நால் வகைப் பெரும் படைகளும், ஆயுதச் சாலைகளும், யானைகளும் குதிரைகளும் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருந்த கொட்டங்களும் நிறைந்த அப் பெரிய கோட்டையில் மிகச் சில விநாடிகளுக்குள் ஒரு புதிய சுறுசுறுப்பு பரவிவிட்டது. எதையோ எதிர்பார்த்து ஆவலோடு துடித்து நிற்கும் எழுச்சி ஏற்பட்டிருந்தது. தளபதியின் கீழ் உள்ள படை அணிகளின் தலைவர்களெல்லாம் விழிப்பும், தூக்கமும் ஒன்றோடொன்று போரிடும் சோர்ந்த கண்களோடு ஓடோடி வந்து அவனை வரவேற்றனர். அவனது கட்டளையை எதிர்நோக்கிக் கைகட்டிக் காத்து நின்றனர் அவர்கள்.

தளபதியின் கண்கள் அவர்களுள் யாரோ ஒருவரை மட்டும் குறிப்பிட்டுத் தேடுவதுபோல் சுழன்றன. ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டு வந்த அவன் பார்வை ஆபத்துதவிகள் படைக்குத் தலைவனை மகர நெடுங்குழைக் காதனின் மேல் ஒருகணம் நிலைத்தன. அந்தப் பார்வையின் குறிப்பைப் புரிந்து கொண்டு ஓரிரு அடிகள் முன் வைத்து நடந்து வந்து வணங்கினான் மகரநெடுங் குழைக் காதன்.

"குழைக்காதரே! ஆபத்துதவிகள் படையைச் சேர்ந்த வீரர்களெல்லாம் கோட்டைக்குள்தானே இருக்கிறார்கள்?" என்று கேட்டார் தளபதி.

"ஆம்! எல்லோரும் கோட்டைக்குள்ளேயே இருக்கிறார்கள்."

"நல்லது! மற்றவர்கள் போகலாம், குழைக்காதரும் நானும், தனிமையில் சிறிது பேச வேண்டும்."

குழைக்காதனைத் தவிர அங்கு நின்று கொண்டிருந்த மற்றவர்கள் வெளியேறினர். தென்னவன் ஆபத்துதவிகள் என்பார் படைகளுள் ஒரு முக்கியமான



இந்திய தேயிலை போர்டின் தலைவர் திரு எ. பி. சேடர்ஜி ஐ. ஸி. எஸ் சென்ற ஆகஸ்டு 20-ஆம் தேதி சென்னை ''தேநீர் விடுதி''யில் பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு பேட்டி அளித்தார். தேநீர் அருந்தும் பழக்கத்தை மக்களிடையே மேன்மேலும் விஸ்தரிக்க இந்த ஸ்தாபனம் முயன்று வருகிறது. தேயிலையுடன் இதர வஸ்துக்கள் கலப்படம் செய்து இந்தப் பானத்தின் உயர்வைக் கெடுப்பதைத் தடுக்க நகர சபைகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் இதர ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் சிறிதளவு பண வசதி அளிப்பதைப் பற்றித் தேயிலை போர்ட் ஆலோசனை செய்து வருகிறதென்று திரு சேடர்ஜி குறிப்பிட்டார். தேயிலை போர்டின் அகில இந்தியப் பிரசாரத் தலைவர் திரு. ஜீபன் முகர்ஜியும் பிரசன்னமாயிருந்தார்.

பிரிவினர். தென்பாண்டி நாட்டு அரச மரபினரின் உயிருக்குக் கவசம் போன்றவர். வெளிப்படையாகத் தெரிந்தோ, தெரியாமலோ ஆபத்துதவிகளின் காவல் இருந்து கொண்டிருக்கும் ஆட்சியில், குழப்பம், சூழ்ச்சி, சதி இவற்றில் ஏதாவது ஏற்பட்டாலோ, ஏற்படுவதாகத் தெரிந்தாலோ, தளபதி ஆபத்துதவிகளைப் பயன்படுத்தலாம்.

ஆபத்துதவிகளைப் பயன்படுத்த வேண்டிய அத்தகைய நெருக்கடி இப்போது தளபதி வல்லாள தேவனுக்கு ஏற்பட்டிருந்தது. யாரால் எப்போது என்ன ஏற்பட முடியுமென்று அவனால் சிந்திக்கவோ, சொல்லவோ முடியவில்லை. இரவு நடந்தவற்றை நினைத்தால் இடையாற்றுமங்கலம் நம்பியின் மேலேயே அவநம்பிக்கை ஏற்பட்டது. இரண்டு ஆறுகளுக்கு நடுவேயுள்ள அந்தச் சின்னஞ்சிறு தீவில் மகாமண்டலேசுவரரின் உள்ளத்திலும், மாளிகையிலும் நிறைந்து கிடந்த சூழ்ச்சிகளை எண்ணியபோது அவன் திகைத்தான். 'ஒரு பெரிய இரவின் சிறிய சில நாழிகைகளுக்குள் இடையாற்றுமங்கலத்தில் இவ்வளவு மர்மங்களைப் புரிந்துகொள்ள முடியுமானால் சில நாட்கள் இரவும் பகலும் எந்நேரமும் அங்கேயே முழுமையாகத் தங்கியிருந்தால் இன்னும் எவ்வளவு தெரிந்துகொள்ள முடியும்?' என்று எண்ணினான் அவன்.

தளபதியின் முகத்தில் தோன்றி மறையும் ஆழ்ந்த சிந்தனைகளின் சாயையைப் பார்த்துக்கொண்டே பயபக்தியோடு எதிரில் நின்று கொண்டிருந்தான் மகர நெடுங் குழைக்காதன்.

"ஓ! உங்களை நிறுத்தி வைத்துக் கொண்டு நான் ஏதோ சிந்தனையில் மூழ்கி விட்டேனே?"

"பரவாயில்லை! நான் காத்திருப்பேன்" என்று அடக்கமாகக் கூறினான் மகரநெடுங் குழைக்காதன்.

"குழைக்காதரே! நேற்று மாலை குமரித் துறையில் மகாராணியார் வழிபாட்டுக்கு வந்திருந்தபோது நடந்த நிகழ்ச்சி பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தென்பாண்டி நாட்டுக்கு இது ஒரு சோதனைக் காலம். நமக்குத் தெரியாமலே நம்மைச் சுற்றிச் சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன. சிறிது காலத்துக்கு நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். அறிவின் பலத்தையோ, சிந்தனையின் வன்மையையோ கொண்டு மட்டும் இவற்றைச் சமாளித்துவிட முடியாது. இப்போது நான் சொல்வதை நீங்கள் நன்றாகக் கவனித்துக் கேட்க வேண்டும். ஆபத்துதவிப் படைகள் இன்னும் சிறிது காலத்துக்குப் புறத்தாய நாட்டுக் கோட்டையில் மகாராணியாரைச் சுற்றி இருப்பதே நல்லது. கூடியவரையில் இந்தப் பாது

காப்பு ஏற்பாடு வெளியில் அதிகம் பரவித் தெரிந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மகாராணியாரைச் சுற்றியோ, அல்லது கோட்டைப் பகுதிகளிலோ சந்தேகத்துக்குரிய ஆட்களாக யார் நடமாடினாலும் கண்காணித்து எனக்குத் தகவல் அனுப்ப வேண்டும்.''

''இப்போதே ஆபத்துதவிகளோடு புறப்படுகிறேன்.''

''புறப்படுவது சரி! இன்றைக்கு அங்கே தென்பாண்டிமண்டலக் கூற்றத் தலைவர்களின் கூட்டம் நடைபெறுகிறது. அதற்காக இடையாற்றுமங்கலம் நம்பி அங்கு வர இருக்கிறார். அவர் போய்ச் சேருவதற்கு முன்பே நீங்களும், ஆபத்துதவிப் படைகளும் அங்கே போய்ச் சேர்ந்துவிட வேண்டும்.''

''அப்படியே செய்கிறோம்.''

''இடையாற்றுமங்கலம் நம்பி இன்று அல்லது நாளை வரை அரண்மனையில் தங்குவார். நீங்கள் முடிந்த மட்டில் அவருடைய பார்வையில் தென்படாமல் இருக்கவே முயலுங்கள்.''

''எங்களால் இயன்றவரை அவருடைய கவனத்துக்கு ஆளாகாமலே இருக்க முயல்கிறோம்.''

''நீங்கள் புறப்படலாம், தாமதம் செய்யாதீர்கள்.''— தளபதி வல்லாளதேவன் ஆபத்துதவிகள் படைத் தலைவனை மகர நெடுங்குழைக் காதனுக்கு விடை கொடுத்து அனுப்பினான்.

* * *

பொழுது விடிந்து நன்றாக வெய்யில் பரவி விட்டது. அங்கேயே நீராடி விட்டுக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கூற்றத் தலைவர் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகத் தானும் கோட்டைக்குப் புறப்பட்டுச் செல்ல நினைத்தான் அவன். இவ்வாறு நினைத்துக் கொண்டே படைக் குடியிருப்பின் வாயிற்புறமாக வந்து மேற்கே சாலையில் ஆபத்துதவிப் படைகள் அணிவகுத்துக் கோட்டைக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தான். படைத் தலைவன் மகர நெடுங்குழைக் காதன் புறப்படுவதற்கு முன்னால் இறுதியாகத் தளபதி வல்லாளதேவனுக்கு வணக்கம் செலுத்தி மரியாதை செய்தான்.

''நீங்கள் போகலாம். நான்கூட இன்னும் சிறிது நேரத்தில் அங்கு வருவேன்'' என்று சொல்லி அனுப்புவதற்காகத் தளபதி வாய்திறந்தபோது கீழ்ப்புறம் இடையாற்றுமங்கலத்துக் கிளை வழியில் குதிரை வரும் ஒலி கேட்டது. வல்லாளதேவன் வியப்போடு திரும்பிப் பார்த்தான். குதிரை மேல் வந்து கொண்டிருந்த வீரன் அவர்களை நோக்கித்தான் வருவது போல் தெரிந்தது.

''நீங்கள் புறப்படுங்கள்! தாமதிக்க வேண்டாம்'' என்று குழைக்காதனைத் துரிதப்படுத்தினான் தளபதி. ''யாரோ வருகிறாப் போலிருக்கிறதே!'' என்று சொல்லித் தயங்கினான் குழைக்காதன்.

''வரட்டும்! நான் பார்த்து விசாரித்துக் கொள்கிறேன். நீங்கள் நிற்கக் கூடாது. உடனே புறப்பட்டு விடுங்கள்.''—தளபதியின் குரலிலிருந்த அவசரத்தைப் புரிந்து கொண்டு குழைக்காதன் படைகளுடன் கிளம்பினான். அவனும் படைகளும் மேற்கே சிறிது தூரம் சென்று மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினான் தளபதி வல்லாளதேவன். யாரோ சிரிக்கும் ஒலி கேட்டது.

''என்ன தளபதி? ஆபத்துதவிகளை அனுப்பி யாயிற்றல்லவா?'' என்று கேலியாகச் சிரித்துக் கொண்டே கேட்டவாறு குதிரையிலிருந்து இறங்கினான் நாராயணன் சேந்தன். (தொடரும்)



சாதாரண மற்றும் விசேஷ நாட்களில்

அணிவதற்கு

ஸ்டான்டார்ட் மில்ஸ்
பாப்லின் சட்டைகள்

சாதாரண — சாயந்தோய்த்த

✳ மற்றும் கோட்டிங் - லாங்கிளாத் - ஷேர்டிங்கிளாத் - பாப்லின் பிரிண்ட்ஸ் - சாயந்தோய்த்த - பிரிண்டட் கிரேப் - குடைகளுக்கான துணி - புக் பைண்டிங் துணி

தி ஸ்டாண்டர்ட் மில்ஸ் கம்பெனி லிமிடெட், நியு ப்ரபாதேவி ரோட், பம்பாய்-28.



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்



மிக அழகிய ...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்ப்யூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்ப்யூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!

ஒருவேளைச் சோறு

ருக்மிணி

"அஞ்சலை! அஞ்சலை! அஞ்சலை!"

கோர்ட்டுச் சேவகனின் உரத்த கூப்பாடு வழக்கு மன்றத்தின் சுற்றுச் சுவர்களில் மோதி எதிரொலித்தது. அங்கிருந்த ஏழெட்டு ஜோடிக் கண்களும் ஆர்வத்தோடு வாசற் பக்கம் திரும்பின. நீதியை நிரூபிக்கச் சாட்சிக் கூண்டேற வந்த அஞ்சலை பயபக்தியுடன் உள்ளே நுழைந்தாள்.

குற்றவாளிக் கூண்டில் நின்ற சின்னப்பன் தன் வெட்கம் கப்பிய முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்ள முயன்றான். அந்து மீறிய கண்கள் அவளையே ஒருமுறை சந்தித்தும் விட்டன.

சாட்சிக் கூண்டில் நின்ற அஞ்சலையும் அவனைப் பார்த்தாள். ஏனோ அவள் கண்களுக்கு அவனை நேருக்கு நேர் பார்க்கும் திராணியில்லை. அவை கீழே நழுவி விட்டன.

இருபது நாட்களுக்கு முன் ஒரு நாள் இரவு. நாய்கள் நுழைந்து விடுமே என்று பயந்து கொண்டு, அஞ்சலை தன் குடிசை வாசற்கதவை இறுக மூடிவிட்டு வெளியே போயிருந்தாள். அவள் திரும்பி வந்தபோது குற்றவாளிக் கூண்டில் நிற்கும் சின்னப்பன் குடிசைக்குள் நின்று கொண்டிருந்தான். அஞ்சலை அலறியடித்துக் கொண்டு கூச்சலிட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்களைக் கூட்டி விட்டாள். அவர்கள் அவனை நையப் புடைத்து,போலீஸாரிடம் ஒப்படைத்து விட்டார்கள். நல்ல வேளை! அஞ்சலையின் வீட்டிலிருந்த பழம்புடவை, தகரக் குவளை, அடுக்குப் பானைக்குள்ளிருந்த ஐந்தாறு மாதச் சேமிப்பான மூன்றரை ரூபாய், இவைகளில் எதுவுமே களவாடப்படவில்லை. ஆனால் மறுநாள் காலைக்கும், மதியத்துக்குமென்று தண்ணீர் விட்டு வைத்திருந்த பழைய சாதம் பருக்கை விடாமல் தீர்ந்து போய் விட்டிருந்தது.

குற்றத்துக்குச் சம்பந்தமுள்ள அந்த இருவருக்கும் புரியாத பாஷையின், வழக்கறிஞர் நீதியை நிலை நிறுத்த முயன்று கொண்டிருந்தார். சின்னப்பன் மன்றத்தின் முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான். அஞ்சலை அடித்தளத்தின் வழுவழுப்பைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

பரபரப்பு மிகுந்த திருச்சி நகரத்தில், நடமாடும் சுமைதாங்கிகளாகி வாழ்வு நடத்தும் ஒரு வர்க்கமே இருக்கிறது. காந்திச் சந்தையைச் சுற்றிலும் பரவிக் கிடக்கும் அந்த வர்க்கத்தினருக்குத் 'தட்டுக்காரர்கள்' என்று பெயர். அவர்களுள் ஒருத்திதான் அஞ்சலை.

உப்புப் பாறைக்கு அருகிலிருக்கும் நவநாகரிக வீடுகளில் ஒன்றுதான் அஞ்சலையின் வீடு! அது இருந்த மண்ணுக்கு மாத வாடகை அணா எட்டு. டால்மியா சிமெண்ட் வரும் காகிதப் பைதான் அங்குள்ள பல வீடுகளுக்குக் கூரையாக உபயோகப்பட்டன. சிமெண்ட் நாகரிகம் பரவி வரும் இந்த நாளில் தங்கள் வீட்டுக்கும் சிமெண்டுக்கும் எப்படியோ ஒரு வகையில் சம்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட மட்டில் அவர்கள் பெருமையடைந்தார்கள்!

அன்று காலையிலிருந்தே அஞ்சலைக்கு நல்ல கிராக்கி. மாலை ஆறுமணியாகு முன்பே அவள் கையிலிருந்த சில்லறையெல்லாம் கூட்டினால் ஒரு முழு ரூபாயாகி விட்டது. நேரத்தோடு வீட்டுக்கு வந்து தன் புளிய மரத்தடி அடுப்பை மூட்டினாள். தன் சகபாடிகளெல்லாம் வரும்முன்பே சமையலை முடித்துவிட்டுச் சிறிது நேரம் விச்ராந்தியாக உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற ஓர் ஆசை, அவளை ஓட ஓட விரட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தது. வேலையோடு வேலையாக ரஸ்தாவின் சலசலப்பிலும் கண்ணோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள். ரஸ்தாவைக் கடந்து நின்ற நகரசபை விளக்குக் கம்பத்தினடியில், வழியோடு போய்க் கொண்டிருந்த எவனோ ஒருவன் வந்து உட்கார்ந்தான். அஞ்சலை அவனைத் தற்செயலாகப் பார்த்த



போது அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் பிறகு ஒரு முறை இரண்டுமுறையல்ல, அவள் அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவனும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அது அஞ்சலைக்கு என்னவோ போலாகி விட்டது. அவள் புருசன் கந்தசாமி செத்தபிறகு எவனுமே அவளை இப்படிப் பார்த்ததில்லை; தப்பித் தவறிப் பார்த்து விட்டவர்களும் அவளிடமிருந்து காரசாரமான வசைச் சொற்கள் வாங்காமல் தப்பியதில்லை.

அஞ்சலை சோற்றை வடிப்பதற்காகப் பானையைத் தூக்கிப் புளிய மரத்து வேரில் வைத்துச் சாய்த்தாள். அதற்கு மேலும் அவனால் பொறுமையுடன் அங்கேயே உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து வந்து 'இதோ பாரு' என்று குரல் கொடுத்தான். அஞ்சலைக்கு ஒன்றுமே புரியவில்லை. தன் தடுமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் "யாரு, ஐயா நீ? என்ன வேணும்?" என்று கேட்டாள்.

தாழ்ந்த குரலில், "நீ சோற்றை வடிக்கும் போது கஞ்சித் தண்ணி வாங்கிக் குடிச்சிட்டுப் போகலாம்னு காத்துக்கிட்டிருந்தேன். நீ அதை அநியாயமாகக் கீழே வடிக்கிறியே!" என்றான். அதைக் கேட்டதும் அஞ்சலைக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.



வடிகஞ்சியைச் சட்டியில் பிடித்து இரண்டு கல் உப்பும் போட்டுக் கொடுத்தாள். அவன் சட்டியைக் காலி செய்து விட்டு நிமிர்ந்து நின்று ஒரு பெருமூச்சு விட்டான். அப்போது அவன் பார்த்த நன்றி தோய்ந்த பார்வை அஞ்சலையின் உள்ளம் வரை பரவியது. "உனக்கு எந்த ஊரு?" என்று அஞ்சலை விசாரணையில் இறங்கினாள். அவன் அதை விரும்பாதவன் போல், "நான் வெளியூரு. வர்றேன்" என்று சொல்லிக் கொண்டே நடையைக் கட்டினான்.

சின்னப்பன் வாய் திறந்து கேட்டிருந்தால் ஒரு வேளைச் சோறு வயிறாரக் கிடைத்திருக்கும். அவன் அதையும் இழந்து விட்டு அவளையும் அமைதியிழக்கச் செய்து விட்டான்.

இரவுச் சாப்பாட்டைப் பொழுதோடேயே முடித்துக் கொண்ட அஞ்சலை முற்றத்திலேயே முந்தானையை விரித்துப் படுத்துக் கிடந்தாள். ஒன்பது மணி சங்கு அலறும் ஓசை கேட்டபோதுதான் அவனுக்குச் சுயநினைவு வந்தது. கண்களைச் சுழலவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான். தூரத்தில் தெரிந்த நகரசபை தண்ணீர்க் குழாய் நாதியற்றுக் கிடந்தது. 'ஒடம்பையும் நனைச்சுக்கிட்டு ஒரு குடம் தண்ணீரும் கொண்டாந்திடலாம்' என்று முனகிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான்.

நகரசபை ஊழியர்களின் கண்களுக்குத் தப்பி உடலை நனைத்துக் கொள்வதுதான் அவனுக்கும் அவன் இனத்துக்கும் 'காவேரி ஸ்நானம்'.

அஞ்சலையின் கண்களிலிருந்து மறையும் வரை வீர நடை போட்ட சின்னப்பனால் வெகு தூரம் நடக்க முடியவில்லை. அவள் தந்த வெறும் கஞ்சி, காதடைப்பைப் போக்கியிருந்தது. ஆனால் கால்கள் பின்னத்தான் செய்தன. திருச்சியின் கூவமான உய்யக் கொண்டான் பாலத்தில் சிறிது இதமாகக் காற்று வீசியது. அங்கேயே உட்கார்ந்து அடுத்து என்ன செய்வது என்று சிந்திக்கத் தொடங்கினான்! பசி சிந்திக்க விடவில்லை, பழையபடியும் அவளிடமே போய் வெட்கத்தை விட்டு ஒரு வேளைச் சோறு கேட்டால் என்ன என்று நினைத்தான். அடுத்த கணமே எழுந்து, வந்த வழியிலேயே திரும்பி நடக்கலானான்.

சின்னப்பன் அஞ்சலையின் குடிசையை நெருங்கியபோது அது மூடிக் கிடந்தது. குனிந்து பார்த்தான். உள்ளே சாகாமல் செத்துக் கொண்டிருந்த கைவிளக்கு ஒன்று, குடிசைக்குள் யாருமில்லை என்பதை மௌனமாகச் சொல்லிக் கொண்டிருந்தது. எங்கே போய் விட்டாளோ என்ற ஏக்கத்தோடு சிறிது நேரம் முற்றத்தில் நின்று கொண்டிருந்தான். பசியோடு போராடிக் கொண்டிருந்த உள்ளத்தில் ஒரு புதிய யோசனை பிறந்தது. ஆனால் அதுவரையில் அவள் வராமல் இருக்க வேண்டுமே என்று நினைத்தான். அந்த நினைவும் அவனுக்கு எதிராக அதிக நேரம் தாக்குப் பிடிக்கவில்லை.

அஞ்சலை திரும்பி வந்தபோது வாசற்படி மூடியே கிடந்தது. தட்டியை நகர்த்தி விட்டுக் குடிசைக்குள் புகுந்தாள். அங்கு அவள் கண்ட காட்சி மயிர் சிலிர்க்க வைத்து விட்டது. அவளையறியாமலே,

ஆஹா,
அளவில்லா
ஆனந்தமளிக்கும்
இந்தக் கேக்குகள்!



தட்டிலுள்ள ருசிகரமான இந்தக் கேக்குகளைப் பார்க்கும் அந்தக் கண்களில்தான் எவ்வளவு மகிழ்ச்சி! அவசரமாகப் பாய்ந்து, கேக்குகளை அப்படியே அள்ளித் தின்னத் தயாராக இருக்கிறான் அவன்.

அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை! காரணம், அவை கோதுமை மாவு ரகத்தில் மிகவும் சிறந்த சூரியன் மார்க் மைதாவில் தயாரானவை.

சூரியன் மார்க் மைதா, சூஜி, ஆட்டாவைக் கொண்டு, சுவைமிகுந்த பலகாரங்கள் நூறு தினுசுகள் செய்யும் விதத்தை அவன் தாயார் அறிந்து வைத்திருக்கிறாள்.

RISING SUN BRAND

சூரியன் மார்க்
மைதா, சூஜி
ஆட்டா

சென்னை செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட் தயாரிப்புகள்

மானேஜிங் ஏஜண்டுகள்:

சௌந்தரராஜன் & கம்பெனி லிமிடெட்,


221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-1

போன்: 3707 & 4375 தபால்பெட்டி 1558 தந்தி: MATHOCRAN

தீப்புண்?




வெட்டுக்காயம்?



விஷக்கடி?





பர்னல்

உபயோகியுங்கள்

வெட்டுக்காயம்
சுட்டபுண்
பெரியபுண்கள்
பூச்சிக்கடிகள்
உஷ்ணத்தினால்
ஏற்படும் புண்கள்
சரும நோய்கள்
முதலியவைகளுக்குச் சிறந்தது.

தயாராயிருங்கள்!
எந்த சமயத்திலும், எந்த
இடத்திலும் விபத்துகள்
ஏற்படலாம்! ஆகையால்
பர்னலை கையோடு
வைத்திருங்கள்! குறைந்த
விலையில் கையடக்கமான
மருந்து ட்யூப்களில்
கிடைக்கிறது. இன்றே
ஒரு ட்யூப் வாங்குங்கள்!

பர்னல் உன்னதமான
ஆண்டிஸெப்டிக் ஆயின்ட்மென்ட்

"இருடன்...இருடன்!" என்று கூச்ச விட்டு விட்டாள். சிக்கலில் அகப்பட்டுக் கொண்ட சின்னப்பன் சிலையாக நின்றான்.


அஞ்சலையின் குரல் கேட்டதும் அக்கம் பக்கத்துக் குடிசைவாசிகளெல்லாம் ஓடி வந்து அபயமளித்தனர். அதாவது அகப்பட்டுக்கொண்ட இருடனைச் சாமர்த்தியமாக அடித்து, உதைத்துத் தெருவுக்கு இழுத்து வந்தனர். கிராமத்திலிருந்து இங்கு பிழைக்க வந்ததாகவும், ஒன்றரை நாள் பட்டினி என்றும் ஏதேதோ சொன்னான் அவன். அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க அங்கு யாருக்கும் அவகாசமில்லை.

தெரு விளக்கின் வெளிச்சத்தில் பார்த்த பிறகுதான், அஞ்சலைக்குத் திருடன் யார் என்று தெரிந்தது. அன்று தன்னிடம் பரிதாபத்துடன் பசியால் வாடிய அந்த இளைஞன் கஞ்சித் தண்ணீர் கேட்டுச் சாப்பிட்டது அவள் நினைவுக்கு வந்தது. இவ்வளவு தூரம் காரியம் மிஞ்சிப் போய் விட்ட பிறகு அவன் தலைவிதியை மாற்றியமைக்கும் சக்தி அஞ்சலையின் கையில் இல்லை. அது போகிற போக்கிலேயே போகட்டும் என்று அவள் விட்டு விட்டாள்.

சர்க்கார் தரப்பில் சாட்சி சொல்ல அஞ்சலை அழைக்கப்பட்டபோது, அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. ஆனாலும் அந்த ஆணைக்கு அடிபணிவதைத் தவிர அவளுக்கும் வேறு வழியில்லை. "அவருதான் பணங்காக எதையும் திருடலியே. வவுத்துப் பசியைத் தானே தீர்த்துக்கிட்டாரு. போவுதுன்னு விட்டுத் தொலைச்சிட்டா என்னங்க?" என்ற தன் பெருந்தன்மையான தீர்ப்பை அஞ்சலை இரண்டொரு போலீஸ்காரரிடம் கூடச் சொல்லிச் சமாதானப்படுத்திப் பார்த்தாள்.

அதற்கு அவர்கள், 'பசிக்கிறது ஒரு குற்றமே இல்லை. அதற்காக அவன் அத்துமீறிச் சாப்பிட்டிருக்கிறானே அது தான் குற்றம்' என்று சட்ட நுணுக்கத்தை விளக்கிச் சொன்னார்கள். அதன் பிறகுதான் அஞ்சலை தன் அந்த முயற்சியையும் கைவிட்டு விட்டாள்.

நீதிபதியின் தீர்ப்பை ஒருவர் தமிழாக்கிச் சொன்னார். மூன்று மாதம் சிறை என்றதும் அஞ்சலை அழாத குறையாகத் தலைநிமிர்ந்து பார்த்தாள். குற்றவாளிக் கூண்டிலிருந்து இறங்கிய சின்னப்பன் போலீஸ் காவலோடு வெளியேறிக் கொண்டிருந்தான். இந்தத் தண்டனைக்கும் தனக்கும் சம்பந்தமேயில்லை என்பதை அவனிடமே சொல்லி



ஸ்ரீ வழுவூர் ராமய்யாபிள்ளை அவர்களின் மாணவியான கொடுமுடி குமாரி கே. பி. கே. பிரேமாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்ற மாதம் சென்னை தியாகராயநகர் வாணி மஹாலில் போலீஸ் மந்திரி திரு பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மந்திரி அவர்கள், குமாரி பிரேமாவுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்த வழுவூர் ஸ்ரீ ராமய்யாபிள்ளைக்கும் மாலைகள் சூட்டி, பரிசுகளையும் வழங்கினார். குமாரி பிரேமா, ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளின் சகோதரரான ஸ்ரீ கே. பி. கனகசபாபதி அவர்களின் புதல்வி.

விட வேண்டுமென்று அஞ்சலையின் உள்ளம் துடித்தது.

அவசரம் அவசரமாக அவனைத் தொடர்ந்து சென்று, "இதோ பாரு..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அவள் குரல் கேட்டு, அவன் மட்டுமல்ல, அவனை அழைத்துச் சென்ற போலீஸ்காரர்களும் திரும்பிப் பார்த்தார்கள். அதற்கு மேலே அவள் வாயிலிருந்து வார்த்தைகளே வெளி வரவில்லை.

அவளைக் கண்டதும் சின்னப்பனுக்குச் சிரிப்பு வந்து விட்டது; ஒருமுறை அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டுத் தன் வழியே போய்க் கொண்டிருந்தான். தன் வீட்டு ஒரு வேளைச் சோறு அந்த அப்பாவி மனிதனை மூன்று மாதம் ஜெயிலுக்கு அனுப்பி விட்டதே என்ற தவிப்போடு, அஞ்சலை அங்கேயே நின்று கொண்டிருந்தாள். அவள் வீட்டு ஒரு வேளைச் சோறு மூன்று மாதச் சோற்றுக்குக் கவலையே இல்லாமல் செய்து விட்டதே என்ற உள்ளக் களிப்போடு, சின்னப்பனும் போலீஸ்காரர்களைப் பின்தொடர்ந்து பேசாமல் நடந்து கொண்டிருந்தான்!



மணிமாளிகை

காலை வேளை. உஷை குமாரியைப் பொன்னிற மேகங்களினால் அலங்கரித்து விட்டான் தினகரன். அவனுடைய தூதர்களாகச் செங்கிரணங்கள் நான்கு புறமும் பரவி விட்டன. செய்தி அறிந்த மாமலர்கள் தங்கள் இதழ்களை விரித்துப் புன்சிரிப்புடன் தங்கள் நாயகனை வரவேற்பதற்குத் தயாராகி விட்டன.

''மும்தாஜ்!''

தோள்களைப் பற்றியபடி ஷாஜஹான் அன்புடன் அழைத்தார். மும்தாஜ் மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள்.

''அங்கு என்ன அவ்வளவு ஆவலுடன் நோக்குகிறாய்?''

''அதோ அங்கு பார்த்தீர்களா? சல்லுவும் பீர்ஜானும் எவ்வளவு ஆனந்தமாக விளையாடுகிறார்கள்! அதைப் பார்த்துப் பார்த்து எனக்கு ஆச்சரியம் உண்டாகிறது!'' என்று கூறினாள் மும்தாஜ்.

''அவர்கள் சேர்க்கை அபூர்வம்தான், மும்தாஜ். இந்த இளவயதில் எவ்வளவு ஒற்றுமையாக விளையாடுகிறார்கள்! அவர்களை இங்கு கூப்பிடட்டுமா?...பீர்ஜான்!''

சட்டென்று ஷாஜஹானின் வாயைப் பொத்தினாள் மும்தாஜ். ''வேண்டாம். கூப்பிடாதீர்கள். அவர்கள் ஆனந்தக் களிப்பின் நடுவில் நம் கூப்பாடு அவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கும். இப்புவியில் பிறந்த ஒருவருக்கும் நான் துன்பத்தைத்தர விரும்ப மாட்டேன். என் இதயத்தில் இடம் பெற்றுள்ளவரும் எனது இந்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.'' மும்தாஜ் கணவரின் தோளில் சாய்ந்தபடியே கூறினாள். அன்பு ஊற்று அவள் கண்களில் பெருக்கெடுத்தோடியது. அந்த அன்புக்கு அரசனும் கைதியாக இருந்தார்.

''மும்தாஜ்! நீ ஒரு விசித்திரப் பிறவி. பணியாளர்களிடம் நீ இவ்வளவு அன்பு செலுத்திச் சலுகை காட்டுவது மிகவும் விசேஷம்தான்!''

''அவர்களும் நம் குழந்தைகள்தானே! பிறவியிலேயே அல்லாவின் பணியாளர்களாகத்தானே நாமும் பிறக்கிறோம்?...வருகிறீர்களா, நாமும் அவர்கள் இருக்கும் இடம் சென்று அவர்கள் விளையாட்டில் கலந்து கொள்வோம்!'' மும்தாஜ் ஷாஜஹானின் கைகளைப் பற்றியபடியே கேட்டாள்.

''மும்தாஜ்! நீ இன்னும் சிறு குழந்தையாகவே இருக்கிறாய். வா, உன் விருப்பப்படியே அங்கு போவோம்.''

சல்லுவும், பீர்ஜானும் ஆற்று மணலிலே ஆசை தீர விளையாடிக் கொண்டிருந்தனர். இருவரும் அரண்மனையில் பணியாற்றும் குழந்தைகள். சல்லுவின் வயோதிகத் தாய் மன்னு, மும்தாஜிடம் அடிமைப் பெண்ணாக வந்தவள். கணவனை இழந்த இளம் குழந்தை



''என்னையா பிடிக்க வில்லை, சல்லு?'' பீர்ஜூ கையில் பிசைந்த மண்ணுடன் கேட்டாள்.

''தைமூராம் ....உன் விளையாட்டுத்தான் பிடிக்கவில்லை. அழகான மணல் வீடு கட்டித் தரு கிறேன் என்று ஏமாற்றிக் கொண்டே வருகிறாயே! தினமும் மண்ணைப் பிசைந்து கட்டுவதில் ஒன்றும் குறைவில்லை.''

''இதுவும் எத்தனை கஷ்டமாக இருக்கிறது. பார்! இதை மட்டும் ஒரு நாளாவது நம்மால் முழு



எஸ். ரங்கநாயகி

யுடன் [illegible] மன்னனை, மும்தாஜ் அடிமைப் பெண்ணாகவே நடத்தவில்லை. மும்தாஜ் சுபாவத்தில் இரக்க சுபாவமுள்ளவள். அடிமைகள் என்ற அலட்சியம் இடையாது. ஹிந்துக்கள் என்ற பாரபட்சம் இடையாது. புவியில் பிறந்த அனைவரையும் அவள் மனிதப் பிறவிகளாக மதித்தவள்.

தாயுடன் கூட அடிக்கடி அரண்மனைக்கு வந்த சிறுமி சல்லு, அங்கேயே பணிப்பெண் வேலையும் பார்க்க ஆரம்பித்தாள். பீர்ஜூவும் அவளும் இணைபிரியா நண்பர்களானார்கள். பீர்ஜூ தாய்தந்தையற்ற அநாதை. எவ் விதமோ ராஜமஹலில் அடைக்கலம் அடைந் தான். மும்தாஜின் அன்பு அந்தச் சிறுவனுக்கு வளர வழிகாட்டியது; சல்லுவின் சிநேகம் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு கொடுத்தது.

இப்பொழுது சல்லுவும், பீர்ஜூவும் இணை பிரியா நண்பர்கள். அடிக்கடி ராஜமஹல் பணிகளையும் மறந்து விட்டு, யமுனைநதி தீரத் தில் சேர்ந்து விளையாட ஓடி விடுவார்கள்.

''பீர்ஜூ!''

''என்ன, சல்லு?''

''எனக்குப் பிடிக்கவில்லை, போ. நான் வர வில்லை.'' சிறுமி சல்லு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கூறினள்.



செல்லம் அழுதது ஏன்?

பிற்பகல் வேளை; பித்தான்கள் உடைந்து காலரிலும் கைகளிலும் கிழிந்திருந்த என் கணவரின் சட்டைகளை நான் தைத்துக்கொண்டிருந்தேன். அதே சமயம் பக்கத்து வீட்டுப் பப்பியுடன் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை செல்லம் திடீரென வீரிட்டு அழுதாள்; அந்த அதிர்ச்சியில் தையல் ஊசியே என் கையில் ஏறிவிட்டது. கோபத்துடன் திண்ணைக்கு ஓடிவந்தேன். அதே சமயம், பப்பியின் தாயார் கண்ணம்மாவும் அங்கு ஓடிவந்து செல்லத்தை வாரியெடுத்து சமாதானம் செய்ய முயன்றாள்: "ஆரு அடிச்சாம்மா என் செல்லக் குழந்தையை?"

"மாமி, ப...ப...பப்பி என் பொம்மையோட கவுனை அழுக்காக்கிட்டா, மாமி!" என்று விசித்து விசித்துக் கூறினாள் செல்லம்.

"அவ்வளவுதானே. பப்பியை நாம்ப நல்லா அடிச்சுட்டு, உன் பொம்மைக்கு புதுசா ஒரு கவுன் வாங்கிப் போட்டுடலாம், வா!" என்று தேற்றிவிட்டு, இரு குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் சென்றாள் கண்ணம்மா. கண்ணம்மாவிடம் காணப்படும் நயமான குணங்களில் ஒன்று, தன் குழந்தைகளைப் போலவே பிறர் குழந்தைகளையும் அரவணைத்துக்கொள்ளும் தன்மை. தன் தந்தை பணக்காரர் என்ற கர்வம் எள்ளளவும் அவளிடம் கிடையாது.-இவ்வாறு எண்ணமிட்ட வண்ணம் அப்படியே கண்ணயர்ந்து விட்டேன். அப்புறம் செல்லம் வந்து என்னை எழுப்பினாள். கண் விழித்துப் பார்த்ததும், செல்லத்தின் கையிலிருந்த பொம்மைக்குப் புதுக்கவுன் போட்டிருந்தது தென்பட்டது—முன்பிருந்ததைப் போலவே இருந்தது இந்தக் கவுனும். இந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. இதை ஆட்சேபிக்க கண்ணம்மாவின் வீட்டுக்கே சென்றேன்.

கண்ணம்மாவோ "புதிதாகக் கவுன் ஏதும் வாங்கவில்லையே. சில துணிகளை நான் துவைக்க வேண்டியிருந்தது. கையோடு கையாக அந்தக் கவுனையும் அலசினேன்" என்றாள். அழகாயிருக்கிறதே பேச்சு! வீட்டில் துணிகளைத் துவைத்துக் கொள்ளும் வழக்கம் எங்களுக்கே கிடையாது; சலவை செய்ய வெளியே அனுப்புகிறோம். அப்படியிருக்க, மோரிக் கையினால் துணி துவைப்பதாகக் கூறினால், நம்புகிறவன் யார்? "அதெப்படியம்மா துவைத்தீர்கள், அடித்துத் துவைக்கும் சத்தம்கூடக் கேட்காமல்?" என்றேன்.

என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் இதோ இந்தத் துணிகளைப் பாருங்கள். இப்போது தான் இஸ்திரிபோட்டு முடித்தேன். ஆனால் அடித்துத் துவைக்கும் சத்தம் கேட்காத காரணம்………"



ஆனால் என் கவனமோ அவன் பேச்சில் லயிக்கவில்லை. வெகு பளிச்சென்று சுத்தமாக விளங்கிய அந்தத் துணிகள் மீது என் பார்வையைப் பதிகொடுத்துவிட்டேன். எனினும், அதே சமயம் என் மனதை உறுத்திய விஷயம் வேறொன்று : தன் செய்கையைப்பற்றி நாலுபேர் என்ன நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பார்த்தானா இவன்? இதையே நான் இவனிடம் கேட்டதும், அவன் சிரித்துவிட்டு "நல்ல கேள்வி கேட்டாய். என் வேலையை செய்வதற்கு நான் ஏன் கூச்சப்படவேண்டும். நாம் ஆம் விவகாரமே எனக்குப் பிடிப்பதில்லை. என் கையாலேயே நான் துணிகளைத் துவைத்துக்கொள்வதில் எவ்வளவோ சிக்கனமிருக்கிறது. அன்றாடம் உடுத்திக்கொள்ள சுத்தமான துணிகள் கிடைப்பதோடு அவை நீடித்து நிற்கவும் செய்கின்றன" என்றான்.


"நீடித்து உழைக்கிறதாவது: அதென்னமாக? எங்கள் வீட்டுத்துணிகள் விறுவிறுவென்று கிழிந்துவிடுவதும் வாங்கின சுருக்கோடு விட்டுப்போய் விடுவதும் சர்வ சாதாரணமாகிவிட்டன: வருஷத்துக்குப் பலதடவை புதுத்துணிகள் வாங்கி மாளவில்லை!"



"அடித்துத் துவைப்பதால்தான் அவை கிழிந்துவிடுகின்றன. ஆனால் நாங்களோ அடித்துத் துவைக்காமல் ஸன்லைட் சோப்பினால் சலவை செய்கிறோம்"

பரிசுத்தமுள்ள சிறந்த சோப்பான ஸன்லைட் ஏராளமான நுரை கொழிக்கிறது என்றும், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலுமுள்ள எல்லா அழுக்குகளையும் நொடிப்பொழுதில் அகற்றிவிடும் நுரை அதனுடையதுதான் என்றும் விளக்கிக்கூறினாள் கண்ணம்மா.

இப்போதெல்லாம் நாலுபேர் நினைப்பதைப்பற்றி நானும் அக்கறைப்படுவதில்லை, துணிகளை வீட்டிலேயே ஸன்லைட் சோப்பினால் சலவை செய்துவிடுகிறேன். அது சிக்கனமான சோப் என்றும், சிறிதும் பெரிதுமாக சுமார் நாற்பதைம்பது உருப்படிகளை சுத்தமாகவும் பளிச்சென்றும் வெளுப்பதற்கு ஒரே ஒரு வில்லை ஸன்லைட்டே போதுமானது என்றும் கண்டு கொண்டேன். இப்போதெல்லாம் அன்றாடம் உடுத்துவதற்குத் தூய்மையான துணிகள் எங்களெல்லோருக்கும் கிடைத்துவருகின்றன: கிழிசல்கள் தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்துகொள்ளும் நிலைமையும் காலர்களையும், கைகளையும் கோட்டுக்குள் மறைத்துக்கொள்ளும் அவசியமும் இனி என் கணவருக்குக் கிடையாது. சிக்கனம் என்றால் எல்லா விதத்திலும் சிக்கனம். ஒரு குடும்பப் பெண்மணிக்கு இதைவிட வேறென்ன வேண்டும்?



வதும் கட்டி முடிக்க முடிகிறதா, பார்த்தாயா? சல்லு! வீடு கட்டுவதும் அன்பைக் கட்டுவது போல!''

பிர்ஜூவுக்கும் சல்லுவுக்கும் சுபாவத்தில் ஒரு வைத்தியம். ஆற்று மணலில் வீடு கட்ட வேண்டும்; சல்லு பிர்ஜூவின் வீடு கட்டும் வைத்தியத்தை அதிகமாக்கிவிட்டாள். ஆனால் அவ்வீடு ஒரு நாளாவது பூர்த்தியாகாமல் நின்றுவிடுகிறதே என்று பிர்ஜூவுக்குப் பெருங் குறை. சல்லு கூடை கூடையாக மணல் கொண்டு வந்து கொடுப்பாள். அச் சிறு சிற்பி நிர்மாணிக்கும் வீட்டுக்குத் தன் கைகளிலும் தாக்குக் கொடுத்து நிலைநிறுத்த முயல்வாள். இருவரும் பொழுது கழிவது தெரியாமல் மணல் கட்டடம் நிர்மாணிப்பார்கள்.

இதோ, இன்று வீடு முக்காலும் முடிந்து விட்டது. சிறுவர்கள் இருவரும் எழுப்பும் மாட மாளிகை அது. முடியும் தறுவாயில் உள்ள அதைப் பார்த்து இருவரும் கைகொட்டி ஆனந்தக் களிப்பெய்தி ஆரவாரித்துக் கொண்டிருந்தனர்.

மறைவிலிருந்த மும்தாஜ் மெதுவாக வெளியே வந்தாள். அந்த மணல் வீட்டைப் பார்த்துத் தாங்கொணு வியப்படைந்தாள். கடைக் கண்களால் தன் அருமைக் கணவரை ஒரு முறை நோக்கினாள்.

''பிர்ஜூ!'' மன்னர் ஷாஜஹான் குரல் கொடுத்தார்.

பிர்ஜூவும், சல்லுவும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

''ஆலம்பனாஹ்! மன்னிக்க வேண்டும். தாங்கள் வந்ததைக் கவனிக்கவில்லை.'' சிறுவனாயினும் அவன் வார்த்தைகளில் மரியாதை தொனித்தது.

''பிர்ஜூ! உன் வேலையை முடி. உன் கைத்திறனை நாங்கள் பார்க்க வேண்டும். எவ்வளவு அழகாகச் சமைத்துவிட்டாய் இந்த மணல் வீட்டை! ஒவ்வொரு அணுவும் உன் கைத்திறனை எடுத்துக் காட்டுகிறது. அப்பா! இனி ராஜமஹாலில் நீ பணிப் பையனில்லை. கலையில் உனக்குள்ள தேர்ச்சியை விருத்தி செய்ய நல்ல கலைஞரைக் கொண்டு உனக்குப் பாடம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கூறிய மும்தாஜ், கணவரின் பக்கம் திரும்பி, ''இதில் உங்கள் சம்மதம் வேண்டுமே!'' என்றாள்.

''மும்தாஜ்! நீ எதையும் யோசித்துச் செய்வாய் என்று எனக்குத் தெரியும். என் உத்தரவு எதற்கு?'' மெள்ளச் சிரித்தபடியே ஷாஜஹான் கூறினார்.

''தங்கள் அன்பு நான் செய்த பாக்கியம்'' என்றான் சிறுவன் பிர்ஜூ.

இச்சந்தோஷச் சூழ்நிலையில், வீடு பூரணமாகும் தருணத்தில் எங்கிருந்தோ ஓடி வந்தான் சிறுவன் ஔரங்கஜீப்.

''ஏ, பிர்ஜூ!'' கொடுமை கொந்தளித்தது அவன் குரலில். மும்தாஜின் வயிற்றில் தப்பிப் பிறந்தவன் அவன்.

பிர்ஜூ இப்பொழுது அவனைக் கவனிக்கும் நிலையில் இல்லை. அரசியின் புகழ்ச்சியில் அவன் தன்னை மறந்திருந்தான்.

''ஏ, பிர்ஜூ!'' மீண்டும் ஒருமுறை கூப்பிட்ட ஔரங்கஜீப் பிர்ஜூவின் அலட்சியத்தைப் பொறுக்க மாட்டாமல் ஓடிச் சென்று அம் மணல் மஹாலின்மீது தன் செருப்புக் காலைத் தூக்கி வைத்தான். மண்ணோடு மண்ணாகி விட்டது மணல் மஹால்.

''ஐயோ!''

பிர்ஜூவின் சோகக்குரல் திசை நடுங்கக் கேட்டது. 'என் வீடு' என்று கூறிய அவன் அம் மணல் திட்டின்மீது விழுந்து விட்டான்.

''பிர்ஜூ!'' என்று கூறிய சல்லு அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள். வார்த்தைகளுக்குப் பதில் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவள் மனத்தை எடுத்துக் காட்டியது.

மும்தாஜின் மனத்தில் ஒரே நிமிடம் சோக சாம்ராஜ்யம் பரவியது. தன் கையை இரும்பாக்கி ஔரங்கஜீப்பைப் பிடித்துக் கொண்டாள். ''ஏ ஔரங்! இது என்ன வேலை?''

''பின்னே என்ன அம்மா! அங்கு இன்னும் என் துணிகளை இவன் மடித்து வைக்கவில்லை. இக்காலை வேளையில் இங்கு வீடு கட்ட வந்து விட்டானே! இந்த ஹிந்துவாயிருக்கு நீ இடம் கொடுத்து வைத்திருப்பதனால் நம் தலைமீது ஏறுகிறான்!'' வார்த்தைகள் கொடுமை விஷத்தில் தோய்ந்து வெளிவந்தன.

''ஔரங்! வாயை அடக்கு. இனி இது போல் நீ அதிகாரம் செய்தால் உன்னைச் சும்மா விடமாட்டார் அல்லா. சுபமற்ற நாளில் அவருக்கெதிரே நீ பதில் கூறும்படி நேரிடும்.'' இவ்விதம் கூறிய மும்தாஜ், சுட்டு விடுபவள் போல் அவனைப் பார்த்தாள்.

''மும்தாஜ்! அவனை விடு. சிறு குழந்தை ஏதோ கோபத்தில் செய்து விட்டான்'' என்று கூறினார் மன்னர்.

தந்தையின் ஆதரவைப் பெற்ற ஔரங்கஜீப் அங்கிருந்து ஓடி விட்டான்.

* * *

பூப்போன்ற நிலவு. நக்ஷத்திர மலர் மஞ்சத்தில் வீற்றிருந்தபடி சந்திரன் உலகில் பவனி வந்து கொண்டிருந்தான்.

''பிர்ஜூ!''

காதல் பொங்கக் குரல் கொடுத்தாள் சல்லு. இப்பொழுது அவள் தாவணி அணிந்து விட்ட யௌவன நங்கை. யௌவனம் தன் முழு சாம்ராஜ்யத்தையும் அவள்மீது படரச் செய்திருந்தது.

''சல்லு! வந்து விட்டாயா?'' பிர்ஜூ அவள் கையை அன்புடன் பற்றினான்; இன்று அவன் அழகிய யௌவன புருஷன்; காதல் உலகத்தில் இன்று இருவரும் வானம்பாடியாகத் திரிந்தனர்.

''அதோ பார்த்தாயா, சல்லு!''

சல்லு அவன் குறித்த இடத்தில் கண்களைச் செலுத்தினாள்! அங்கு இருந்தது 'மணல் வீடு.' இன்னும் பூர்த்தியாகவில்லை.

''ஹும்! இன்னும் இந்தப் வைத்தியம் விடவில்லையா?''

''இல்லை, சல்லு! ஏனோ இந்த மணல் வீடு கட்டுவதில் எனக்குத் தனிப்பட்ட ஆனந்தம் கிட்டுகிறது.''

''பிர்ஜூ! அரண்மனைத் தோட்டத்திலும் நீ இதுபோல் கட்டினால் கடைசியில் அரசரின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். மணல் வீடு வேண்டும் என்று நான் கேட்பதை நிறுத்திக் கொண்டு விட்டேனே! உனக்கு ஏன் இந்தப் வைத்தியம் இன்னும் தெளியவில்லை?''

''சல்லு! ஒரு விஷயம் கவனித்தாயா? இவ்வளவு வருடங்களாகியும் இன்னும் ஒரு நாளாவது இந்த மணல் மஹாலை நான் நினைத்தபடி முழுவதும் முடிக்கச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை. ஏதாவது தடங்கல் ஏற்பட்டு விடுகிறது. என்னுடைய வாழ்நாளில் என்றாவது ஒரு நாளாவது இதை முடிக்கப் போவதில்லையோ என்றே தோன்றுகிறது. இல்லையோ!''

''இந்தச் சிறு விஷயத்தில் எதற்கு இவ்வளவு கவலை, பிர்ஜூ? ஆனந்தமான இவ்வேளையில் இதை நினைத்து ஏன் சஞ்சலப்படுகிறாய்?'' என்றாள் சல்லு.

''சல்லு! பிற்பகல் முழுவதும் சித்திரக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் நேரத்தைச் செலவிட்டு விடுவதால் இம் மணல் வீட்டில் கைவைக்க நேரமே கிடைப்பதில்லை, சல்லு! இந்த வீட்டின் இரகசியம் என்ன, தெரியுமா? இதில்தான் என் அன்பு, காதல் எல்லாம் குடியிருக்கின்றன. அணு அணுவாக வைத்து இந்த வீட்டைக் கட்டுவது போல் அணு அணுவாக நம் காதலும் வளருகிறது. பல கஷ்டங்களுக்கு இடையே நம் காதல் வளருவது போல், இதுவும் பல கஷ்டங்களுக்கு ஈடு கொடுத்து நிற்க வேண்டியிருக்கிறது. இது மட்டும் பூர்த்தியாகி விட்டால் நம் காதல் வாழ்வும் அமரத்துவம் அடைந்துவிடும். என் மனக் கோட்டையிலுள்ள இதை இறுதி, இதனுள் உன்னை அழியாத சித்திரமாக்க நான் விரும்புகிறேன், சல்லு! இது பூர்த்தியாகும் அல்லவா?''

''பிர்ஜூ! நம் காதலுக்கும் இதற்கும் எதற்காகச் சம்பந்தப் படுத்துகிறாய்? நம் அன்பு சூரியன் சந்திரன் இருக்குமளவும் என்றென்றும் உயிருடன் இருக்கும்...''

''சல்லு! இதோ, பார், சல்லு! நானும் நீயும் உள்ளத்துடன் உள்ளம் பிணைந்து விட்டோமல்லவா? எனக்காக, உன் அன்பனுக்காக, சிறிது காலம் பொறுக்கமாட்டாயா?'' சல்லுவின் முகத்தைத் தூக்கியபடி நம்பிக்கைக் குரலில் கேட்டான் பிர்ஜூ.

''பிர்ஜூ! என்னுடைய சுபாவம்தான் உனக்குத் தெரியும்.''

''உன்னை அடையப் போகும் நான் பாக்கியசாலிதான், சல்லு.''

பிர்ஜூவும், சல்லுவும் சென்ற பிறகு மும்தாஜ் பெருமூச்சு விட்டாள். இந்நேரமாக அரண்மனைச் சாளரத்திலிருந்து அவர்களை அவள் கவனித்துக் கொண்டிருந்தாள். அவ்விருவரிடமும் தாய்க்குண்டான பாசத்துடன் அவள் இருந்தபடியால் அவர்கள் காதலில் அவள் உள்ளம் குளிர்ந்தாள். ஆனால் மண் வீட்டைப் பற்றி அவன் கூறிய சித்தாந்தம்தான் அவளுக்குச் சற்றும் புரியவில்லை. மண்ணுகப் போகும் இந்த மணல் வீட்டில் ஏன்தான் இவனுக்கு இவ்வளவு பைத்தியமோ!

காதலுக்கும், மணல் மஹாலுக்கும் பிர்ஜூ கூறிய ஒவ்வொரு வார்த்தையும் மும்தாஜின் உள்ளத்தில் அச்சாகப் பதிந்தது.

. . .

—இன்று அரண்மனை முழுவதும் சோகத்தில் ஆழ்ந்திருந்தது. வாத்தியங்கள் மூலையில் தூங்கிக் கொண்டிருந்தன. நாட்டியச் சதங்கைகள் சப்திக்கவில்லை. வைத்தியர்களும் ஹகீம்களும் சலனமற்று உட்கார்ந்திருந்தனர். அனைவரையும் அன்பினுல் கட்டுப்படுத்திய மும்தாஜ் இன்று அந்திம காலத்தின் கடைசிப் படியில் காலடி வைத்து விட்டாள்!

''மும்தாஜ்!'' பாதுஷா மும்தாஜின் பரந்து கிடந்த கேசத்தை ஒதுக்கி விட்டபடியே கூப்பிட்டார்.

மும்தாஜ் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். பஞ்சடைந்த அவள் கண்களில் அன்புச் சுரங்கம் இன்னமும் சுடர்விட்டது; அவளால் பேசக்கூட முடியவில்லை.

''மும்தாஜ்! உனக்கு என்ன வேண்டும்? சொல்லுவாயா?''

மும்தாஜின் முகத்தில் மெல்லிய புன்னகை படர்ந்தது. அவள் கண்கள் அருகில் நின்றிருந்த பிர்ஜூவை நோக்கின.

பிர்ஜூவும், சல்லுவும் இப்பொழுதெல்லாம் மும்தாஜை விட்டு நகருவதில்லை. அவள் கையில் இருவரும் வளர்ந்தவர்களாயிற்றே!

''பிர்ஜூ!''

பிர்ஜூ அருகில் வந்தான்.

''பிர்ஜூ! என் அந்திம காலம் நெருங்கி விட்டது.'' மும்தாஜ் மெல்லிய, ஈனக் குரலில் கூறினாள்.

''பேகம் சாஹேபா! இந்த வார்த்தைகளை இந்த அடிமையின் காதுகள் கேட்கமாட்டா.''

''இல்லை, பிர்ஜூ! என்னை ஏமாற்றிக் கொண்டு உங்களையும் ஏமாற்ற நான் விரும்பவில்லை. எனக்கு 'அல்லா'வின் புனித இடத்திலிருந்து அழைப்பு வந்து விட்டது. அதற்குள் ஒரு விருப்பம்......''

''அடிமை காத்திருக்கிறேன், பேகம் சாஹேபா!'' பிர்ஜூ தலைகுனிந்து நின்றான்;

உண்மைச் சம்பவம்!

ஹைதராபாத்துக்குப் போகும் ரயிலில் ஒரு பிரயாணி 'புல்லாட்'டுடன் உட்கார்ந்திருந்தார். கால்களில் கனத்த 'பூட்ஸ்'கள் இருந்தன. டிக்கட்டு பரிசோதகர் வந்து, டிக்கட் கேட்டார். பிரயாணி, 'போறு, துவா!' என்று கூறிக் காலைத் தூக்கி வைத்து 'பூட்ஸை'க் கழற்ற பத்தனித்தார். டிக்கட் பரிசோதகர் பயந்து டிக்கெட் இன்ஸ்பெக்டரோடு வந்தார். அவருக்கும் அதே பதில்! அதே கதைதான். பிற்பாடு 'கார்டு'ம் வந்து கேட்டார். அவருக்கும் அதே கதிதான்!

கடைசியில் பெரிய போலீஸ் பந்தோபஸ்துடன் வந்தார்கள். அப்பொழுதும் ஆசாமி பூட்ஸைக் கழற்ற ஆரம்பித்தார். போலீஸாரும் குண்டாந்தடியைத் தலைக்கு மேலே தூக்கினார்கள். மற்றப் பிரயாணிகளும் கூட்டம் கூடிவிட்டார்கள். ஆசாமி சாதாரணமாக 'பூட்ஸை'க் கழற்றி அதன் உள்ளில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த டிக்கட்டை எடுத்து நீட்டி எல்லோரையும் திகைக்க வைத்தார்!


எப்பொழுதும்
இன்பம்
தப்பாது அளிப்பது
ப்ரூக் பாண்ட்
தேயிலையே
Brooke Bond Roses Blend
Brooke Bond Leaf Tea
ப்ரூக் பாண்ட் இந்தியா லிமிடெட்

மும்தாஜ், கணவன் ஷாஜஹானைப் பார்த்தபடி கூறினாள். "என் அந்திம கால விருப்பத்தைக் கேட்பீர்களல்லவா? என் கல்லறையின் மீது என்றென்றும் அழியாப் புகழுடன் நிற்கக் கூடிய ஒரு மஹால் கட்டுவீர்களா? பிர்ஜுவின் வாக்குப்படி அது நம் காதலை உணர்த்த வேண்டும். அதைப் பார்க்கும்போதெல்லாம் உங்களுக்கு என் நினைவு உண்டாக வேண்டும். செய்வீர்களா?" மும்தாஜிடமிருந்து இரக்கம் தோய்ந்த வார்த்தைகள் வந்தன.

"மும்தாஜ்! இவ்வளவு சிறிய விருப்பமா?"

"கேட்டால் சிறியதாகத் தோன்றும். ஆயினும் இந்தக் காதல் மாளிகையைக் கட்டி முடிக்க எவ்வளவு கஷ்டங்கள் இருக்கும் என்பது நம் பிர்ஜுவுக்குத் தெரியுமே!" ஓரக் கண்களால் பிர்ஜுவைப் பார்த்தபடியே கூறினாள் மும்தாஜ்.

பிர்ஜு வியந்தான். அவன் கட்ட முயன்று வரும் காதல் மாளிகையைப் பற்றிப் பேகம் சாஹேபா எவ்விதம் அறிவாள்!

"பிர்ஜு! அந்த மாளிகையைக் கட்டுவது உன் பொறுப்பு." மும்தாஜ் அவனைப் பார்த்துக் கூறினாள். "அழியாப் புகழுடன் எங்கள் அன்பை அமரத்துவமடையச் செய்யும் சாதனமாக அமைய வேண்டும், பிர்ஜு!"

"பேகம் சாஹேபா! இப் பெரும் பணியை என் உயிரைக் கொடுத்தாவது நிச்சயம் நிறைவேற்றுவேன்."

மும்தாஜின் முகத்தில் அமைதியின் ஒளி பரவியது. அவள் கண்கள் சிறிதே ஒளி விட்டுப் பிரகாசித்தன. முகத்திலிருந்து ஜோதி கிளம்பியது. படுதாவாக நின்ற கண் இதழ்கள் மெல்ல மெல்லத் 'துனியா'விலிருந்து அவளை விடைபெறச் செய்து அல்லாவின் 'துவா' பெற இட்டுச் சென்றன.

மும்தாஜ் இறந்த தினமே அவள் மாளிகையை எழுப்ப ஆரம்பித்துவிட வேண்டும் என்பது பாதுஷாவின் கட்டளை. மும்தாஜின் விருப்பப்படியே பிர்ஜுவின் கையில் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பிர்ஜு மேற்பார்வையாளனாக அமைந்து விட்டதால் அவனுக்கு உண்ணவோ, உறங்கவோ நேரம் இருக்கவில்லை. அவனுடைய சொந்தக் காதல் மாளிகை இன்னும் முடிவு பெறாமல் நின்றிருந்தது.

அன்று பிர்ஜு தன் மனத்தில் கண்டிப்பான ஒரு உத்தரவைப் போட்டுக் கொண்டான். அவன் காதலி சல்மு நாளுக்கு நாள் இளைத்து வருவது அவன் கண்முன் தோன்றியது. தாஜ் மஹாலின் வேலைகள் போட்ட திட்டப்படி பூர்த்தியாகிக் கொண்டு வந்தன. கற்கோட்டை எழுப்புவதுகூடச் சற்றுச் சுலபமாக இருந்தது. ஆனால் எங்கும் எப்போதும், எவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய மணலை வைத்துக் கொண்டு மணல் வீடு கட்ட எவ்வளவு சாதனை வேண்டியிருக்கிறது!

இன்று எவ்விதமாவது தன் மணல் மஹாலை எழுப்பி இன்று இரவே சல்முவின் இருதய சிம்மாசனத்தில் 'கணவன்' என்ற பட்டம் எழுப்பிக் கொள்ள வேண்டும்.

ஆகாயத்தில் நான்குபுறமும் கருமேகங்கள் சூழ்ந்து வந்ததைப் பிர்ஜு கவனிக்க வில்லை.



டாக்டர்: உங்கள் மனைவிக்குக் காது கேட்காமல் வருவது வயதானதுதான் காரணம் என்று உங்கள் மனைவியிடம் சொல்லுங்கள்!

கணவர்: தயவுசெய்து அதை நீங்களே அவளிடம் சொல்லி விடுங்கள்!

அச்சமயம் தண்ணொளி பரவி நின்ற சந்திரனின் பிரகாசத்தைத் துணை கொண்டு பிர்ஜுவின் கைகள் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தன. அவன் எதிர்பார்த்ததைவிட அன்றையதினம் கொஞ்சம் கஷ்டமில்லாமல் அம்மணல் வீடு அவன் கையில் உருவாகிக் கொண்டிருந்தது. இதோ...இதோ ஒரு பிடி மணல். முடிந்து விட்டதே மணல் வீடு! வீடா அது! மாளிகையின் அமைப்புடன் அழகுற விளங்கியது. பிர்ஜுவின் மனத்தில் ஆனந்த அலைகள் மோதின.

"சல்மு! ஓ, சல்மு!"

சல்மு திடுக்கிட்டு எழுந்தாள். எதிரே பிர்ஜுவைப் பார்த்தாள். "பிர்ஜு! அன்பரே! நான் உனக்காகக் காத்திருப்பேன்." வழக்கம் போல் அவள் வாயினின்று வார்த்தைகள் வெளிவந்தன.

பிர்ஜு பெரியதாகச் சிரித்தான். "சல்மு! இனி காத்திருக்க வேண்டாம். இனி என் இதயவானில் 'மனைவி' என்னும் பட்டம் பெற்ற நட்சத்திரமாக நீ ஜொலிக்கப் போகிறாய். சீக்கிரம் ஓடி வா. யமுனை நதிக்கரையில் நம் காதல் மாளிகை முன்பு நம் விவாகம் நடைபெறும். இன்றே, இப்பொழுதே ஓடி வா. சீக்கிரம்..." ஒரே மூச்சில் வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போனான் பிர்ஜு.

சல்முவுக்கு ஒரு நிமிஷம் ஒன்றும் புரியவில்லை. பிர்ஜு அவள் பதிலுக்காகக் காத்திருக்கவில்லை. தானே உள்ளே சென்று அவள் பெட்டியைத் திறந்து புத்தாடை ஒன்றை எடுத்து அவளை அணிந்து கொள்ளச் சொன்னான். அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று வேகமாக இழுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

"பிர்ஜு!"

சல்முவின் கையைப் பிடித்தபடியே பிர்ஜு திரும்பிப் பார்த்தான். இராஜ சேவகன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன ஐயா, இந்த இரவு வேளையில் எங்கே புறப்படுகிறீர்கள்? பாதுஷா அழைக்கிறார்! பாரசீக தேசத்திலிருந்து வரச் சொல்லி விசேஷம் அனுப்பி வருந்த சிற்பி வந்திருக்கிறார். பாதுஷா தங்களை உடனே அழைத்து வரச் சொன்னார்" என்றான் அவன்.

" காலையில் வந்து பார்ப்பதாகச் சொல்."

" இல்லை, நாளை விடியற்காலையிலேயே அவர் இங்கிருந்து புறப்பட்டுவிட வேண்டுமாம். அதனால் இரவே சலவைக் கற்களில் பதியும் சில சிற்ப சித்திரக் கலைகளைப் பற்றின விவரங்களைத் தங்களுக்குத் தெரிவித்துவிட விரும்புகிறார். பேகம் சாஹேபாவின் விருப்பத்தை எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க வேண்டுமென்று தங்களுக்கும் விருப்பம் உண்டே!" என்றான் அரச சேவகன்.

பேகம் சாஹேபாவின் பெயரைக் கேட்டதும் பிர்ஜுவின் மனம் நன்றிப்பெருக்கால் நனைந்தது. கைகோத்து நின்ற சல்மாவை ஒரு முறை நோக்கினான் பிர்ஜு.

" சல்மா!"

"காத்திருப்பேன் அன்பரே!" பழக்கத்தின் காரணமாக அவள் சொன்னாளா? அல்லது உண்மையாகவே சொன்னாளா என்று நிர்ணயிப்பதற்குள், பிர்ஜுவை அழைக்க மற்றொரு ராஜசேவகனும் வந்து விட்டான்.

"சல்மா! நீ இவ்வளவு நாட்கள் காத்திருந்ததுபோல் இன்னும் சிலமணி நேரம் எனக்காகக் காத்திருப்பாயா? யமுனா நதி தீரத்தில் நான் எழுப்பியுள்ள மணல் மாளிகையின் முன் நீ சென்று காத்திரு. பாரசீகச் சிற்பியைச் சந்தித்துவிட்டு உடனே வந்து விடுகிறேன்."

சல்மா புத்திசாலி. உள்ளத்தில் சூழ்ந்து வந்த துயரத்தைப் பொறுமை அணையிட்டுத் தடுத்து நிறுத்தினாள். முல்லை இதழ்களை விரித்துப் புன்சிரிப்புத் தேனை நிரப்பினாள். அன்பனுக்கு விடைகொடுத்து அனுப்பினாள். அவன் சென்றதும் உடல் சோர, உள்ளம் நெகிழ, ஏக்கக் குழல்களைத் தாங்கி யமுனை நதிக் கரையை அடைந்து விட்டாள். ஆஹா! என்ன அற்புதம்! மணலினால் இவ்வளவு அற்புத மாளிகையை யாரே எழுப்ப முடியும்! பிர்ஜுவின் அன்பும், அவன் காதலும் அவன் கைத்திறனுக்கு உறுதுணையாக இருந்து உதவியது என்பதை அவள் அறியவில்லையோ!

அதைப் பார்த்துப் பார்த்து அவள் மனம் மகிழ்ந்து நேரம் போவது தெரியாமல் நின்றிருந்த வேளையில்...ஐயோ, இதென்ன......

'டப்,டப்' என்று இரு நீர்த்துளிகள் வானத்திலிருந்து மெதுவாக விழுந்தன. பிறகு மெல்லிய காற்று ஆரம்பித்தது. அக் காற்று மெதுவாக வலுத்தது. சல்மா பயந்து விட்டாள். காற்றடித்த நேரத்திலே, மணல் வீட்டின் மேல் பக்கத்தில் கொஞ்சம் சரிந்தது. சல்மாவின் மனம் நடுநடுக்குற்றது. புத்தாடையின் தலைப்புப் பாகத்தை எடுத்து அவ்வீட்டுக்குக் குடையாகப் பிடித்துக் கொண்டாள். மெதுவாக மழை வலுத்தது.

"பிர்ஜு...பிர்ஜு...என் அன்பரே!"

அவள் குரலோசையுடன் இடியும் மின்னலும் சேர்ந்தன. அவள் மணல் வீட்டைக் காக்கும் பொறுப்பை ஏற்றதன் காரணமாக அவள்மீதும் தன் தீவிரத்தாக்குதலை வருணன் ஏற்றுவிட்டான் போலும்! அவள் தொப்பலாக நனைந்தாள். முன்பே வாடியிருந்த உடல் இத்தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திண்டாடியது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை அவள் நனைய, நனைய, உடல் நடுக்கம் கண்டு விட்டது. அவள் காதலன் எழுப்பிய மாளிகை சிதைவதைப் பார்க்க முடியாமல் கண்ணீர் விட்டாள். நெஞ்சு விம்மியது; உள்ளம் துடித்தது.

" பிர்ஜு......ஏ பிர்ஜு...என் அன்பரே...! பிர்ஜு!" என்று அலறினாள்.

காற்று தூதுவனாக அமைந்து அவள் சோகக் குரலை எட்டுத் திக்கும் எடுத்துச் சென்றது. இதோ, யமுனை நதியும் சிறிது சிறிதாக மேலேறி அவளையும் மணல் மாளிகையையும் அணைக்க வந்து விட்டது.

மாளிகைக்குச் சென்ற பிர்ஜு, முதலில் சிற்பியைச் சந்தித்துப் பாரசீக சிற்பத்தை அறிந்த ஆவலில் இருந்தபோது மழையைப் பற்றிக் கவனிக்கவில்லை. தாஜ்மஹாலை அந்த இரவு நேரத்திலேயே அவர்கள் காணக் கிளம்பிய போதுதான் தீவிரமான மழையைப் பற்றின விவரம் தெரிந்தது.

பிர்ஜு திடுக்கிட்டான். பைத்தியம் பிடித்தவன் போல் அவன் தங்களை விட்டு ஓடுவதைப் பார்த்துப் பாதுஷாவும், பாரசீகச் சிற்பியும் வியந்தபடி நின்றனர்.

" பிர்ஜு......ஓ பிர்ஜு!"

பிர்ஜு ஓடினான். யமுனை இன்னும் ஒரு நிமிடம் காத்திருந்தாள். சல்மா மெதுவாகக் கீழே சாய ஆரம்பித்து விட்டாள். அவள் கைகள் இன்னும் மணல் மாளிகையைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன.

" பிர்ஜு!" ஈன ஸ்வரத்தில் குரல் கிளம்பியது.

" சல்மா, என் அன்பே, இதோ வந்து விட்டேன்!" பிர்ஜு ஓடி வந்து சல்மாவைத் தூக்கி எடுத்தான். உள்ளமும் உள்ளமும் பேசின; இருவர் கண்களும் சந்தித்தன; நான்கு இதழ்கள் ஒன்றுசேர்ந்தன.

தன் அன்பனைப் பிணைத்தபடி, அவன் கட்டிய காதல் மாளிகைக்கு முன் சல்மா தன் வாழ்க்கையின் கடைசிப் படியைக் கடந்து விட்டாள். பூமி ஒரு முறை அதிர்ந்தது; மின்னொளி பிரகாசித்தது; ஆகாயம் இதைக் கண்டு உருகி நீர்த்திவலைகளை வேகமாகக் கொட்டியது.

" ஐயோ, சல்மா, என் அன்பே!" உள்ளத்தைப் பிழிந்து எடுத்த பிர்ஜுவின் குரல் அண்ட சராசரங்கள் நடுங்க எங்கும் பரவியது;

பாதுஷா எவ்வளவு சமாதானம் செய்தும், பிர்ஜு பிறகு என்றுமே, எப்பொழுதுமே சல்மா அவனை விட்டுப் பிரிந்த இடத்திலிருந்து நகரவில்லை. உன்மத்தம் பிடித்தவன்போல் மழை, காற்றை லட்சியம் செய்யாமல் சின்னாபின்னமாகிய தன் காதல் கோட்டையின் இடையில், மணல் மாளிகையின் முன்பு அவன் ஏக்க உருவாக இருந்து விட்டான்.

அவன் மும்தாஜுக்காக நிர்மாணித்த தாஜ்மஹால் இன்று உயிருடன் பேசுகிறது. ஆனால் அவன் காதலிக்காக நிர்மாணித்த மணல் மாளிகையோ அவன் உள்ளத்தில் இடம் பெற்று அமரத்துவம் பெற்றுவிட்டது.



ஆசார்ய வினோபாபாவே அவர்களின் கீதைப் பேருரைகள்

பம்பாய் ராஜ்தானியில் 1932ம் ஆண்டில் தூலியா என்னும் ஊரில் விநோபா சிறையில் இருந்தபோது அவருடன் இருந்த அரசியல் கைதிகளுக்குப் பேசியவை அவர் பேசிய மராத்தி பாஷையிலேயே அவை தொகுத்து எழுதப்பட்டு அப் பாஷையிலேயே முதன் முதலில் நூலாக வெளியிடப்பட்டது. அதற்குப் பின் பதினொரு பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பத்து லக்ஷம் பிரதிகள் விற்பனையாயிருக்கின்றன. 1958ம் வருஷம் மே மாதத்தில் இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது. இது புத்தக வடிவில் வருவதற்கு முன் 1956-57 ஆண்டில் 'ஸண்டே ஸ்டாண்டர்டு' பத்திரிகையில் சென்னையில் வெளியாயிற்று. மூலத்தையும் மொழிபெயர்ப்பையும் பரிசீலித்தவர்கள் விநோபாஜி ஆங்கிலத்தில் பேசியிருந்தால் இப்படித்தான் பேசியிருப்பார் என்றும் இது வெகு அழகாகவும் கம்பீரமாகவும் விளங்குகிறதென்றும் கூறியுள்ளனர். கீதையின் பதினெட்டு அத்தியாயங்களும் பதினெட்டுச் சொற்பொழிவுகளில் தக்க உபமானங்களுடனும் மேற்கோள்களுடனும் தற்கால வாழ்க்கையையொட்டி விளக்கப்பட்டுள்ளன.

விநோபாஜி இதுவரை பிறர் கூறாத முறையில் அவருக்கே உரித்தான வகையில் சிக்கலான உபதேசங்களைத் தெளிவுபடுத்துகிறார். உதாரணமாக, 'கர்மம் + விகர்மம் — அகர்மம்' என்கிறார். கர்மம் என்பது கர்மேந்திரிய ஞானேந்திரியங்களால் செய்யப்படும் ஸ்வதர்மானுஷ்டானம். விகர்மம் என்பது அவரவருடைய சுபாவத்துக் கேற்ப உள்ளன்பு கலந்து இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்யப்படும் விசேஷ கர்மம். பக்தியும் பற்றின்மையும் கலக்கும்போது அச்செயல் அகர்மம் ஆகிறது. அப்போது மனிதன் செயல் செய்தாலும் செய்யாதவன் ஆகிறான். ஒன்றும் செய்யா விட்டாலும் உலகை யெல்லாம் ஆட்டி வைக்கும் வல்லமையுடன் விளங்குகிறான். அப்படிப்பட்ட அகர்மாவின் அளவு கடந்த சக்தி மிளிர்கிறது.

ஆன்ம வாழ்க்கையும் கீதை போன்ற நூல்களும் சந்நியாசிகளுக்கே உரியவை யெனப் பலர் தவறாக எண்ணுகின்றனர் என்று விநோபாஜி வருந்துகிறார். லோகமான்ய பால கங்காதர திலகர் கூறினாற்போல் கீதை உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கே முக்கியமான நூல் எனக் கூறுகிறார். 'என் உடல் தாயின் பாலினால் வளர்ந்திருப்பதை விட அதிகமாய் என் உள்ளமும் அறிவும் கீதையாம் பாலினால் வளம் பெற்றிருக்கின்றன' என்கிறார்.

கீதை உபநிடதங்களுக்கெல்லாம் உபநிடதம். ஏனெனில் உபநிடதங்கள் அனைத்தையும் கறந்து கீதையாம் பாலைப் பகவான் உலகுக்கு வழங்கியிருக்கிறார். வாழ்வின் மலர்ச்சிக்குத் தேவையான எல்லாக் கருத்துக்களும் கீதையில் இடம் பெறுகின்றன. தற்கால ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் கீதையை விளக்குவதற்கு விநோபாவின் பேருரைகள் தலைசிறந்தவை.

ஆங்கில மொழிபெயர்ப்பு: 1958; அகில பாரத ஸேவா ஸங்கம்—விலை ரூ. 3; புத்தகாலயப் பதிப்பு ரூ. 3; மதராஸில் கிடைக்குமிடம்: ஸர்வோதய நூல் நிலையம், 242, நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் ரோட், சென்னை-1.

யுத்த காண்டம்
(ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்)

வால்மீகி ராமாயணத்தின் சாரம் எனப் போற்றப்படுவது யுத்த காண்டம், ஸ்ரீராம பிரானது கோதண்டத்தின் பெருமையும், ரகுபுங்கவன் மனித இயல்புடன் நடந்து காட்டிய மாபெரும் செயல்களும் இக் காண்டத்தில்தான் சிறப்பாகக் காணப்படுகின்றன; சிறையிருந்த ஜானகி ஸ்ரீராமபிரானது கோதண்டத்தின் வல்லமையால் விடுதலை பெற்று, அப் பெருமானை அடைந்த அரிய கதைப் பகுதி யுத்தகாண்டத்தில்தான் வருகிறது. தூயோரைக் காத்து, தீயோரை அழித்து, தர்மத்தை நிலைநாட்டும் அரிய கடவுள் தத்துவமும் இக் காண்டத்தில்தான் சிறந்த முறையில் இடம் பெற்றிருக்கிறது.

பால காண்டம் முதல் சுந்தரகாண்டம் வரையில் வால்மீகி ராமாயணத்தை நயமிகு தமிழில் ஆக்கித் தந்திருக்கும் ஸ்ரீ டி. எஸ். ராகவன் அவர்கள் யுத்தகாண்டத்தையும் வெகு அழகாக மொழிபெயர்த்திருக்கிறார்.

ராவணனது பத்தினியான மண்டோதரியின் புலம்பல் 111-ம் பகுதியில் மிகவும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அப் பகுதியில் மொழிபெயர்ப்பாளர் தக வரிகளுக்குள் தந்திருக்கும் விளக்கம் காவியத்தில் பொதிந்து கிடக்கும் பல தத்துவங்களை நன்கு அறிய உதவுகிறது.

மகா மந்திர மென்று பாராட்டிக் கூறப்படும் ஆதித்ய ஹ்ருதயத்துக்கு எழுதப்பட்டிருக்கும் விளக்கவுரை விசேஷமாயிருக்கிறது; ஆனால் அது புத்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கும் விதம்தான் படிக்க முடியாமல் மிகவும் கஷ்டமாயிருக்கிறது.

மாபெரும் காவியமான வால்மீகி ராமாயணத்தை மொழிபெயர்க்கும் புனித கைங்கரியத்தை மேற்கொண்டு அதை மிகவும் சிறந்த முறையில் பூர்த்தி செய்திருக்கும் இந் நூலாசிரியர் பாராட்டுக்கு உரியவர் என்பதில் ஐயமில்லை.

கிடைக்கும் இடம்: டி. எஸ். ராகவன், 21, மந்தவெளித் தெரு, சென்னை—28; விலை: ரூ. 5.

எண்ணம் ஒன்று

பிரபாகரன் சொல்லுகிறன் :

இப்போதெல்லாம் பத்திரிகைகளில் தற்கொலைச் செய்திகள் அதிகமாகி விட்டன. தினசரி இரண்டு மூன்று தற்கொலைகளுக்குக் குறையாமல் பத்திரிகைகளில் வெளியாவதைப் பார்க்கிறோம்.

என்னதான் பயங்கரமான காரணங்கள் இருந்த போதிலும், தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு ஒருவருக்குத் துணிவு ஏற்படுவதை என்னால் எளிதில் நம்ப முடியவில்லை. ஆனால் அந்த என் வெகு நாளையச் சந்தேகம் பறந்தோடும்படியான சம்பவம் ஒரு நாள் என் கண்ணெதிரிலேயே நடந்தது.

அன்று இரவு நான் எங்கெல்லாமோ சுற்றி யலைந்து விட்டு வீடு திரும்ப வெகு நேரமாகி விட்டது. இரவு மணி பதினென்று இருக்கும். நான் வந்துகொண்டிருந்த அந்தத் தென்னந் தோப்பு மரண அமைதியில் உறங்கிக் கொண்டிருந்தது. வானத்தில் முழுமதி நிலாக் கதிர்களைப் பரப்பியவண்ணம் பவனி வந்து கொண்டிருந்தது. பெயர்தான் தோப்பே யொழியத் தென்னை மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருக்கவில்லை. பல மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. இன்னும் சில மரங்கள், மட்டைகள் உதிர்ந்து மொட்டை மரங்களாக நெடிதுயர்ந்து நின்று, நிலா வெளிச்சத்தில் பார்ப்பவர்களைப் பயமுறுத்தின.

அந்தத் தென்னந் 'தோப்புக்கு நடுவில் ஒரு பெரிய கிணறு இருந்தது. அது சதா இறைக்கப்பட்டு வந்தமையினால் ஜலம் நிறைய இருந்தது. நான் அந்தக் கிணற்றை நெருங்க நெருங்க அதன் கைப்பிடிச் சுவர் மீது ஓர் உருவம் ஏறுவது நிலா வெளிச்சத்தில் நன்றாய்த் தெரிந்தது.

எனக்கு ஒரு விநாடி 'குப்' என்று வியர்த்து விட்டது. அவ்வுருவம்பேயோ, பிசாசோ என்று நினைத்து என் உள்ளம் நடுங்கத் தொடங்கியது. யாரேனும் தற்கொலை செய்து கொள்ள முயலலாம் என்னும் எண்ணம் எனக்கு அப்போது உண்டாகவில்லை. கிணற்றைத் தாண்டித்தான் நான் இருந்த இடத்துக்குப்போயாக வேண்டும். வேறு வழியில்லை. ஆகவே, என்னுள் இருக்கும் தைரியத்தை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டு வேகமாக நடக்கலானேன்.

ஆ! என்ன இது! நான் கிணற்றை நெருங்கி விட்ட சமயம் 'தொபுகடீர்' என்று பலமான ஓசை கேட்டது. அந்த உருவம் கிணற்றில் குதித்து விட்டது.

எனக்கு அப்பொழுது ஒரு தைரியம் எங்கிருந்தோ வந்தது. பேய்களுக்கு உருவம் இல்லையாகையினால், பேய் கிணற்றில் குதித்தால் ஓசை எப்படிக் கேட்கும்! இது மனித உருவம்தான் என்று மனசைத் திடம் பண்ணிக் கொண்டேன். மறுநிமிஷம் என் சட்டை



உள்ளம் இரண்டு



ஸோமாஸ்

யைக் கழற்றிக் கீழே போட்டுவிட்டு, நானும் அந்தக் கிணற்றில் குதித்தேன்.

கிணற்றில் கருங்கல் படிகள் பொருத்தப்பட்டிருந்தபடியினால், எனக்கு அந்த உருவத்தை மேலே தூக்கிக் கொண்டு வருவதற்கு அதிக சிரமம் இருக்கவில்லை.

மேலே அந்த உருவத்தைக் கொண்டு வந்து தரையில் கிடத்திய சில வினாடிகளில் அதற்கு உணர்ச்சி வந்து விட்டது. நிலா வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்தேன். அவளுக்கு வயது முப்பதுக்கு மேலிராது. காது, மூக்கு, கழுத்து எல்லாம் மூளியாயிருந்தன. அவள் தற்கொலை செய்து கொள்ள முயன்றதற்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று என்னால் ஊகிக்க முடியவில்லை. அவளைப் பார்த்தால் அப்படியொன்றும் நோய் நொடியினால் வருந்துபவளாகவும் தோன்றவில்லை.

பிரக்ஞை வந்ததும் எழுந்து நின்று அவள் என்னை எரித்து விடுகிற மாதிரி கூரிய விழிகளால் ஒரு பார்வை பார்த்தாள்.

"என்னை ஏன் சாவின் பிடியிலிருந்து தப்புவித்தீர்கள்? மிகப் பெரிய உதவி செய்து விட்டதாக எண்ணமோ! பாழாய்ப் போன நம் சமூகத்தின் தலையில் இடி விழட்டும். வாழவும் வழியில்லாமல், சாகவும் உரிமையில்லாமல் என்னைப் போல் எத்தனையோ அபலைப் பெண்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்! என்னைப் போன்றவர்கள் படும் துன்பம் போதாக்குறைக்கு உங்களைப் போன்ற பரோபகார சீலர்கள் உதவிக்கு வேறு வந்து விடுகிறீர்கள்!" என்று கூறிவிட்டு அந்தப் பெண் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

பொங்கி வரும் அவளது துக்கத்தைக்கண்டு நானும் கண் கலங்கி விட்டேன். அவளுக்கு என்ன சமாதானம் சொல்லி அவள் துக்கத்தைத் தணிப்பது என்று எனக்கு ஒரே யோசனையாய்ப் போய் விட்டது.

என் தயக்கத்தைப் புரிந்து கொண்டு விட்டவள் மாதிரி அவளே பேச ஆரம்பித்தாள்:

"என் துக்கம் தாங்காமல் ஏதேதோ பேசிவிட்டேன். என் சோகக் கதையைக் கேட்டால், நான் தற்கொலை செய்து கொள்ளுவது எவ்வளவு அவசியம் என்பதை நீங்களே ஒப்புக் கொள்ளுவீர்கள்."

இப்படிக் கூறும்போதே துக்கம் தாங்காமல் அவள் தொண்டையை அடைத்தது.

"நீங்கள் துக்கத்தினால் மிகவும் மனம் குழம்பிப் போயிருக்கிறீர்கள். ஆனால் துக்கத்துக்குப் பரிகாரம் தற்கொலையல்ல. நீங்கள் தற்கொலை செய்து கொள்வதனால், வேதனையைத் தரும் உங்கள் பிரச்னைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. தற்கொலை செய்து கொண்டு



ஆகஸ்டு மூன்றாம் தேதி சென்னை ஆலயத்தில் பாதுகா பட்டாபிஷேகத்தின்போது, கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ராம கிருஷ்ண சாஸ்திரிகளுக்கு டாக்டர் அண்ணங்கராச்சாரியார் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இவ்வைபவத்துக்குத் திரு சீனிவாசாச்சாரியார் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

வது பாவம் மாத்திரம் அல்ல. அது கோழைத் தனமும்கூட. வாழத் தைரியம் இல்லாதவர்கள்தான் தற்கொலை செய்து கொள்ள முற்படுவார்கள். தற்கொலை செய்துகொண்டு மடிவதைவிட என்ன துன்பம் நேர்ந்தாலும் மனம் தளராமல் நின்று வாழ முயல்வதற்குத் தான் தைரியம் அதிகம் வேண்டும். கொஞ்சம் சிரமப்பட்டு மனத்தைச் சாந்தப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றேன்.

காற்று சிலுசிலுவென்று வீசியது. ஈர உடைகளுடன் இருந்தமையினால் எங்கள் இருவருக்கும் நடுக்கம் ஏற்பட்டது. விரிந்து கிடந்த அவளது கூந்தலிலிருந்து நீர் வடிந்தது. நிலவொளியில் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். பார்ப்பதற்கு அவள் நன்றாகவே இருந்தாள். ஆபரணங்கள் ஏதும் இல்லாமலே அவள் முகம் பளிச்சென்றிருந்தது. ஆனால் தாங்க முடியாத சோகத்தினால் அவள் வெளிச்சம் குன்றிய விளக்கைப் போல் இருந்தாள். புகையுண்ட ஓவியம் போல் அவள் மேனியின் அழகைச் சோகத் திரை மறைத்திருந்தது. விடியற்காலத்தில் தோன்றும் தேய்பிறையைப் போன்றிருந்தது அவளது முக காந்தி.

''என்னை உங்கள் உடன்பிறந்தவனாக எண்ணி என் பேச்சைக் கேளுங்கள். தற்கொலை முயற்சியைக் கைவிட்டு விடுங்கள். உங்களுடைய மனத் துயரச் சுமையை என்னிடம் சொல்லுங்கள். என்னாலான உதவியை நான் செய்கிறேன்'' என்றேன்.

அவள் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, ''ஒருவர் துயரத்தை ஒருவர் மாற்றுவதென்பது யாராலும் முடியாத காரியம். நீங்கள் தெருவோடு போகிற சனியனை விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்கள்'' என்று வேண்டா வெறுப்பாகச் சொன்னாள். ஆனால் அவள் முகத்தில் முன்பு இருந்த கடுமை இப்போது இல்லை. தற்கொலை செய்துகொள்ள முயலுகிறவர்கள் ஒரு சிறு தடை ஏற்பட்டாலும் மறுபடியும் அந்த முயற்சியில் ஈடுபடமாட்டார்கள் என்னும் உண்மையை நன்கு அறிந்தவன் நான்; ஆகவே தைரியமாக அவளுக்குத் தேறுதல் கூற ஆரம்பித்தேன்.

''நீங்கள் உங்கள் வீட்டுக்குப் புறப்படுங்கள். நாழிகை ரொம்ப ஆகிவிட்டது. நான் உங்கள் வீடு வரையில் துணை வருகிறேன். உங்கள் மன வேதனையை என்னிடம் தயவு செய்து சொல்லுங்கள்...'' என்றேன்.

அவள் மனம் மாறிவிட்டது என்பது உறுதியான அவள் நடையிலிருந்து தெரிந்தது. அப்பொழுது மெல்ல அவள் வரலாற்றைக் கேட்டு அறிந்தேன்.

குணவதி கூறுகிறாள்:

என் தாய், என்னைப் பெற்ற சில நிமிஷங்களுக்கெல்லாம் கண்ணை மூடி விட்டாள். அப்புறம் என் தகப்பனார் எனக்காக என்றுசொல்லிக் கொண்டு ஒருத்தியை மறுவிவாகம் செய்து கொண்டார். சித்திக்கு ஒரு குழந்தை பிறக்கும் வரையில் அவள் என்னிடம் அன்பாக இருந்தாள். ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து நான் பட்ட கஷ்டங்களுக்கு எல்லையே இல்லை. இருபது வயதுக்கு மேல் என் கஷ்டம் ஒருவாறு விடிந்தது. அப்பா என்னை ஒருவருக்கு இரண்டாந்தாரமாகக் கொடுத்தார். நான் சிறிதும் மறுக்கவில்லை. மாற்றாந்தாய்க் கொடுமையிலிருந்து நான் தப்பவும், அப்பாவுக்கு மன அமைதியைக் கொடுக்கவும் இந்த மணத்துக்கு மனப்பூர்வமாக இசைந்தேன்.

என் கணவருக்கு முதல் தாரத்தின் மூலம் இரண்டு குழந்தைகள் இருந்தன. விவாகமான நான்கு வருஷங்களில் எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. அப்புறம் மூன்று வருஷங்கள்தான் நான் கணவருடன் வாழ்ந்திருந்தேன். ஓரே நாள் ஜுரத்தில் அவர் என்னை இவ்வுலகில் அநாதையாகத் தவிக்க விட்டுக் கண்ணை மூடிவிட்டார்.

அவர் வேலை செய்து வந்த கம்பெனியிலிருந்து வந்த பிராவிடெண்ட் பண்டுப் பணம் ஆயிரம் ரூபாயும் அப்படியும் இப்படியுமாகக் கரைந்து விட்டது. என் கணவரின் மூத்த மனைவியின் தாயார் தன் பேரக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுவதாகக் கூறிக் கொண்டு வந்து வீட்டோடு தங்கி விட்டாள். நான் ஒரு பள்ளிக்கூடத்தில் தையல் கற்பிக்கும் உபாத்தியாயினி வேலையைத் தேடிக் கொண்டேன்:

பள்ளிக்கூட உபாத்தியாயினி வேலையில் நிம்மதி ஏற்படும் என நினைத்தேன். வேலையில் ஓரளவு மனசுக்கு நிம்மதி ஏற்படத்தான் செய்தது. ஆனால் வீட்டில்தான் போரும் புயலும் வீச ஆரம்பித்து விட்டன. என் மூத்தாளின் தாயார், என் குழந்தைகளுக்கும் மூத்தாள் குழந்தைகளுக்கும் வித்தியாசம் பாராட்டத் தொடங்கி விபரீத நிலையை உண்டாக்கிவிட்டாள். எல்லாமே என் குழந்தைகள் தான் என்று நான் வாதாடியும் பலனில்லை. இதன் காரணமாக எனக்கும் அந்த அம்மா

உங்களுக்கு அதிக சக்தி அவசியம்



நீங்கள் சரீர தளர்ச்சியினால், சோர்வுற்று இருக்கிறீர்களா ?

நீங்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறீர்களா? அப்படியென்றால், உங்களுக்கு க்ளுகோவிடா அவசியம். க்ளுகோவிடா உங்களுக்குத் சக்தியை ஊட்டுகிறது. க்ளுகோவிடாவில், ரத்தத்துடன் சீக்கிரமே கலந்துகொள்ளும், சர்க்கரை சேர்ந்துள்ளது. இதனால் க்ளுகோவிடா, உங்கள் தேகத்திற்கு அவசியமான சக்தியை உங்களுக்குத் தேவையான சமயத்தில் அளிக்கிறது.

க்ளுகோவிடாவிலுள்ள விடமின்கள், உங்களை பலமுள்ளவர்களாக்கி, சுறுசுறுப்புடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கச்செய்கின்றன.

க்ளுகோவிடா

வெகு விரைவில் சக்தியூட்டுகிறது



கார்ன் பிராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய்-1

ஏஜெண்டுகள் : பாரி அண்ட் கம்பெனி லிமிடெட்

ளுக்கும் பகை உணர்ச்சி ஒன்று உருவாயிற்று. அதிலிருந்து அவள் என்னை ஒருவாறு தீர்த்துக் கட்டிவிடத் தீர்மானித்து விட்டாள்.

நான் குடியிருந்த வீட்டில் எட்டுக் குடும்பங்கள் குடியிருந்தன. நான் ஒன்பதாவதாக ஒரு அறையை எடுத்துக் கொண்டு அதில் பலவித கஷ்டங்களுக்கு இடையில் ஒருவாறு வாழ்க்கையை நடத்தி வந்தேன். நான் குடியிருந்த அறைக்கு எதிர்ப்புறத்து அறையில் ஒரு வாலிபன் இருந்தான். அவனுக்கு மணமாகவில்லை. ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு அந்த அறையில் வசித்து வந்தான். அவன் எங்கே வேலையில் இருந்தான் என்று எனக்குத் தெரியாது. நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும் போது சொல்லி வைத்தாற் போல் அவனும் புறப்பட்டு விடுவான். நான் அவனை நிமிர்ந்துகூடப் பார்த்ததில்லை. தெளிவாகச் சொல்லப் போனால், நான் அவனை ஒரு நாள் கூடக் கவனித்ததில்லை. ஆனால் என் மூத்தாளின் தாயார் அவனைக் கவனித்துப் பார்த்ததோடு நிற்கவில்லை. அவனையும் என்னையும் பிணைத்து ஒரு கதை கட்டி அதை எல்லாக் குடித்தனக்காரர்களிடமும் சொல்லி விட்டாள். முதலில் சிறுகதையாக ஆரம்பித்தது தொடர் கதையாக மாறிவிட்டது. அதன் காரணமாக என்னைப் பார்ப்பவர்கள் யாவரும் 'கசமுசா' என்று காதோடு பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். வர வர என் எதிரிலேயே ஜாடைமாடையாகப் பேசிக் கொண்டனர். ஒருநாள் அந்த வாலிபன் எதிரிலேயே என் மூத்தாளின் தாயார் கன்னு பின்னு வென்று வாய்க்கு வந்தபடி பேசி விட்டுத் தன் பேரக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வேறு அறை பார்த்துக் கொண்டு அங்கு குடி போய் விட்டாள். அவளுக்கு அவளுடைய கணவர் வைத்துவிட்டுப் போன சொத்து கொஞ்சம் இருந்தது.

அந்த வாலிபன் பாவம், தன்மானமுள்ள மனிதன். மிகவும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன். தன்னைப் பற்றி இப்படியெல்லாம் இழிவான முறையில் பேச்சு நடக்கிறது என்று அறிந்ததும் மனம் குன்றித் தலை குனிந்தவன் நிமிரவேயில்லை. திடீரென்று ஒரு நாள் தன் அறையிலேயே தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து விட்டான். அப்புறம் கேட்க வேண்டுமா வம்புப் பேச்சுக்களுக்கு! என்னால் அதையெல்லாம் கேட்டுச் சகிக்கவே முடியவில்லை. நான் என் அறையை விட்டு வெளியே வரவேயில்லை. நல்ல வேளையாக அந்தப் புண்ணியவான் தன் மரணத்துக்கு யாரும் காரணம் இல்லை யென்றும் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகவும் எழுதி வைத்து விட்டுப் போய்ச் சேர்ந்தான். அந்தக் கடிதம் காரணமாகப் போலீஸ் விசாரணையில் அதிகச் சிரமம் இருக்கவில்லை.

அந்த வாலிபன்தான் மறைந்துபோனானே யொழிய, என்மீது சமீப காலமாகப் படிந்து விட்ட மாசு மறையவில்லை, அதன் காரணமாக நான் பள்ளி உபாத்தியாயினி வேலையை இழக்கும்படி நேர்ந்தது.

என்னுடைய இந்த வரலாற்றைக் கேட்பவர்கள் நம்பக்கூட மாட்டார்கள். அதனால்

தான் என் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தேன். நான் இறந்து ஒழிந்துபோனால் தான் அநியாயமாக என்மீது சுமத்தப்பட்ட பழியும் நீங்கும்.

தற்கொலை செய்து கொள்வது மகா பாவம் என்று பிரபாகரர் அன்று என்னைத் தடுத்து விட்டார். பாவம், அவர் மிகவும் நல்ல மனிதர். யௌவன பருவத்தினரா யிருந்தும் அதற்குரிய சேஷ்டைகள் இல்லாமல் இருப்பது அதிசயந்தான். இத னால் நான் புருஷர்களையெல்லாம் குறை கூறு வதாக எண்ணக் கூடாது. கதியற்ற ஒரு பெண்ணைக் கண்டால் அநுதாபப்படும் புரு ஷர்களைவிட அவளிடம் வம்பு செய்பவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள்.

என்னை முதன் முதலில் சந்தித்துத் தற் கொலை முயற்சியைத் தடுத்து என்னைக் காப் பாற்றிய அன்றைக்கே அவரைப் புரிந்து கொண்டு விட்டேன். சீரிய நோக்கங்களும் சிறந்த பழக்க வழக்கங்களும் உடைய அவ ரைப் போன்ற நல்ல மனிதரை எங்கும் காண முடியாது.

ஆனால் உலகம் அவரைச் சரியானபடி புரிந்து கொள்ளும் என்று எனக்குத் தோன்றவில்லை. அவர் மாசற்ற உள்ளம் படைத்தவர். பிற ருக்கு உதவி செய்வதே மனித ஜன்மம் எடுத்த தின் பலன் என்று கூறுகிறார். அவர் தம்மைச் சுற்றியுள்ள உலகத்தைச் சிறிதும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. பரோபகார குணம் காரணமாக அவருக்குக் கெடுதல் ஏற் படாமல் இருக்க வேண்டுமே என்றுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது. அவர் எனக் காகப் பட்ட சிரமங்களுக்குக் கணக்கு வழக் கில்லை. எனக்குக் குடியிருக்க இடம் பார்த் துக் கொடுத்து, உணவுப் பொருள்களையெல் லாம் வாங்கிப் போட்டு, செலவுக்கு வேண் டிய பணத்தையும் கொடுத்து உதவினார். எனக்கு அவரிடம் உதவி பெறுவதற்குத் தயக்கமாகவே யிருந்தது. ஆனால் அவருடைய களங்கமற்ற சுபாவத்தைப் பார்க்கும்போது என்னால் அவருடைய உதவிகளை மறுக்க முடிய வில்லை. மேலும், ஆதரவற்றவளான எனக் கும் என் குழந்தைகளுக்கும் அவருடைய உத வியைப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

"'அண்ணா! உங்களுக்கு என்னாலும் என் குழந்தைகளாலும் ரொம்பச் செலவு; சிரமம். இந்த நாளில், உணவுப் பண்டங்கள் விற்கும் விலையில், உங்கள் குடும்ப நிர்வாகத்தோடு என் குடும்பத்தையும் ஏற்றுக்கொண்டு சிரமப் படுகிறீர்களே! நான் சும்மா உட்கார்ந்து கொண்டு சாப்பிடுவது கொஞ்சங்கூட எனக் குப் பிடிக்கவில்லை'' என்றேன் நான் ஒரு நாள் அவரிடம்.

இதைக் கேட்ட அவர் முகம் கறுத்து விட் டது. ''குணவதி! என்னை அண்ணா என்று கூப் பிடலாம். ஆனால் அந்த அண்ணன் மனம் புண்படும்படி பேசலாமா? நீயாக என்னத்தை யாவது நினைத்துக் கொண்டு வேதனைப் படாதே. நாளையதினத்திலிருந்து உனக்கு ஒரு உத்தியோகமும் ஏற்பாடு செய்திருக் கிறேன். மாதர் நலன் இலாக்காவைச் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் உனக்கு உபாத்தி யாயினி வேலை கிடைத்திருக்கிறது. உன்

குடும்பத்தைக் காப்பாற்றுவதனுல் எனக்கு ஒரு சிரமமும் இல்லே. குணவதி! உற்சாகமாக வேலையை ஏற்றுக் கொள்!" என்று சந்தோஷத்துடன் கூறினர்.

பிரபாகரன் கூறுகிறன்:

தற்கொலே செய்துகொள்ள இருந்த குணவதியைத் தப்புவித்து, அவளுக்கு வேலை தேடிக் கொடுத்து வாழ்வளித்ததில் எனக்குப் பரம திருப்தி. தினம் குணவதியைச் சந்தித்து அவள் குடும்பத்துக்குத் தேவையானவைகளை வாங்கிக் கொடுத்து வந்தேன்.

இந்தச் சமயத்தில்தான் என் குடும்பத்தில் புயல் வீச ஆரம்பித்தது. ஆரோக்கியமாயிருந்த என் மனைவி திடீரென்று இறந்துவிட்டாள். அவள் உத்தமி. குணவதியைக் காப்பாற்றி அழைத்து வந்து அவளுக்கு நான் உதவி செய்ததைப் பற்றி அக்கம் பக்கங்களில் உள்ளவர்கள் 'கச முச' என்று பேசி வந்தபோது கூட என் மனைவி ஒரு வார்த்தை பேசியதில்லே. அவள் என்னைப் பரிபூரணமாக ஆதரித்து வந்தாள்.

என் மனைவி இறந்தபிறகு பலவிதமான கஷ்டங்கள் என்னையும் என் குடும்பத்தையும் பற்றிக்கொண்டு விட்டன. எனக்கு நான்கு குழந்தைகள். அவைகளை வைத்துக்கொண்டு திண்டாடிப் போனேன்.

என் குடும்பம் அவல நிலையை அடைந்துவிட்டதைப் பற்றிக் கூட நான் கவலைப்படவில்லே. என் சிரமம் காரணமாக, குணவதிக்கு உதவி செய்ய முடியாமல் இருக்கிறதே என்றுதான் கவலையாயிருந்தது. ஆனல் அவளை நான் அதற்காகக் கை விட்டுவிடவில்லே. தினம் அவள் வீட்டுக்குப் போய்ப் பார்த்து, அவ்வப்போது தேவையான உதவிகளைச் செய்து வந்தேன். என் மனைவி இறந்ததையும் பொருட்படுத்தாமல் மனே திடத்துடன் இருந்து வந்த எனக்குக் கஷ்டங்கள் மேலும் மேலும் வந்து கொண்டிருந்ததோடு என் மன அமைதியைக் குலைத்து இருதயத்தையே பிளக்கக்கூடிய அளவுக்கு என்னைச் சுற்றி ஒரு சூழ்நிலை உண்டாயிருப்பதை நான் பல நாட்களாகக் கவனிக்கவில்லே. ஒரு முறை இருமுறையல்ல, பல முறைகள் பல இடங்களில் என் காதாலேயே கேட்ட பிறகுதான் உண்மையிலேயே நான் மனம் கலங்கத் தொடங்கினேன்.

கணவனே இழந்து அநாதையாகி, என் ஆதரவில் வாழ்ந்து வந்த குணவதிக்கும், மனைவியை இழந்து, பலவிதத்திலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கும் தவருன தொடர்பு கற்பித்து மாக கூறப் பலர் முற்பட்டிருந்தனர். என்னைப் பற்றிக் கூட நான் அதிகமாகக் கவலைப்படவில்லே. உத்தமியான குணவதியின் பூமனம் இதையறிந்தால் புண்படுமே என்றுதான் வருந்தினேன். ஏற்கனவே ஒரு முறை இத்தகைய நிலே ஏற்பட்டு, குணவதி தற்கொலே செய்துகொள்ள முயன்றதை நினைத்து உள்ளம் நடுங்கினேன். என் மீது கற்பிக்கப்பட்ட மாக என் உள்ளத்தில் ஒரு கறையாகப் படிந்து சதா என்னை அச்சுறுத்தியது. குணவதியை நிமிர்ந்து பார்ப்பதற்கே அச்சமாயிருந்தது. வர வர அவள் வீட்டுக்குப் போவதையே நிறுத்திக் கொண்டேன். அவளாக என் வீட்டுக்கு வந்தபோதும் குணவதியிடம் உற்சாகமாகப் பேசவில்லே. அவளிடம் இதையெல்லாம் பற்றி வெளிப்படையாக எதையும் கூற எனக்குச் சிறிதும் தைரியமில்லே. ஆனல் என்னையும் அறியாமல் அவளிடமிருந்து ஒதுங்கிச் செல்வதற்கு முற்பட்டேன்.

அன்று அந்த நிசி வேளையில் அங்கே குணவதி எப்படி வந்து சேர்ந்தாள் என்று எனக்கு ஒரே அதிசயமாயிருந்தது. என் உள்ளத்தில் குமைந்து கொண்டிருந்த சொல்லொணு வேதனையுடன் அந்தத் தனியிடத்துக்கு—பழைய தென்னந்தோப்புக் கிணற்றங்கரைக்கு—வந்திருந்தேன். குணவதியை நான் அப்பொழுது எதிர்பார்க்கவேயில்லே.

"அண்ணு! நான் மனம் குமுறித் தற்கொலே செய்து கொள்ளும் நோக்கத்துடன் அன்றொருநாள் இங்கு வந்திருந்தபோது நீங்கள் குறுக்கிட்டுத் தடுத்துவிட்டீர்கள். தற்கொலே செய்து கொள்வது மகா பாவம், மகா கோழைத்தனம் என்றெல்லாம் எனக்கு உபதேசித்தீர்கள். என்னைச் சகோதரியாக ஏற்றுக் கொண்டு என் குழந்தைகளுக்கும் எனக்கும் ஆதரவு தந்தீர்கள். நீங்கள் என்னிடம் காட்டிய பரிவும் பாசமும் காரணமாகத்தான் நான் தற்கொலே எண்ணத்தைக் கைவிட்டேன். சுமார் இரண்டு மாதகாலமாக உங்களைக் கவனித்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் ரொம்பவும் மாறிவிட்டீர்கள். மனதில் எதையோ வைத்துக் கொண்டு வேதனைப்படுகிறீர்கள். என்னிடம் கூட முன்போல் பழகுவதில்லே. என்னிடமிருந்து விலகிச்செல்ல முயன்று வருகிறீர்கள். அத்துடன்......மகா கோழைத்தனமான தற்கொலே எண்ணம் உங்கள் மனதிலும் புகுந்து கொண்டிருக்கிறது. நீங்கள் இப்பொழுது இங்கு வந்திருக்கும் நோக்கம்கூட அதற்காகத்தான் என்று எனக்கு நன்ருய்த் தெரிகிறது. மாசற்ற உங்கள் அன்புதான் என்னை வாழ வைக்கிறது. அந்த அன்பையும் புறக்கணித்துத் தற்கொலே செய்து கொள்ள விரும்புகிறீர்களா?" என்று கம்பீரமான குரலில் குணவதி கேட்டாள்.

அவளை நிமிர்ந்து நோக்கவே என்னுல் முடியவில்லே. நிலவொளியில் அவள் முகம் களங்கமற்று விளங்கியது. என் தற்கொலே முயற்சியை நான் எவ்வளவோ ரகசியமாக வைத்துக் கொண்டிருந்தும் குணவதி கண்டுபிடித்து விட்டாளே!

"என்ன யோசிக்கிறீர்கள், அண்ணு! மனம் இன்னும் சமாதானம் அடையவில்லேயா?" என்று கேட்டுக் குணவதி என்னை இவ்வுலக நினைவுக்குக் கொண்டு வந்தாள்.

"குணவதி! வா போகலாம்!" என்று கூறிவிட்டு நகரலானேன். அதே இடம், ஏறக்குறைய அதே நேரம், அதே மனிதர்கள்தான் போய்க் கொண்டிருந்தோம். ஆனல் ஒரு வித்தியாசம், அன்று முன்னுலே நான் போய்க் கொண்டிருந்தேன்; குணவதி என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள். இன்று அவள் முன்னுலே நடந்தாள். நான் அவளைப் பின்பற்றி நடந்தேன்.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon